
வெளிவாரி
பட்டப் படிப்புகள் நிறுவனம்
த. பெ. ... 83,
148/1, ... வீதி,
யாழ்ப்பாணம்.




# இளங்கதிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. 2340

# இளங் கதிர்

வெளிவாரி
பட்டப் படிப்புகள் நிறுவனம்
த. பெ. இல: 83,
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச் சங்கத்
தின் 23வது வெளியீடு.

## ஆண்டு மலர்

Appropriate Technology Services
121, POINT PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டைப்பட விளக்கம்

பெருங்கொடுமைப் புயல் எழுந்து உறுத்தும்போதும்
புகையடர்ந்து கொடும்நெருப்புச் சூழும்போதும்
கருங்கடலும் கடும்மழையும் ஊழிக் காத்தாய்
கரைகடந்து முழுஉலகை அழிக்கும்போதும்
அருந்தமிழன் இலட்சியங்கள் நிலைக்கும் அன்னான்
அறநெறியும் உரிமைகளும் ஓர்நாள் வெல்லும்
அரும்புகின்ற கனவுகளும் அஞ்சாநெஞ்சும்
அசையாத பனைமரமாம் அறிந்துகொள்வீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH THE BEST COMPLIMENTS

FROM

# BOND INSTITUTES

HOSPITAL RD. — JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

AGENTS AND DISTRIBUTORS

FOR

DARLEY BUTLER & Co. Ltd.

REGATT & COLMION OF CEYLON Ltd.

CEYLON NUTRITIONAL FOODS Ltd.

CEYLON BISCUITS Ltd.

THE MAHARAJA ORGANIZATION (Dist.) Ltd.

# M. P. VEERAVAGU & CO.

15, POWER HOUSE RD.

JAFFNA. Phone: 604

BRANCHES

60, PERAKUMBA STS — KURUNEGALA Tele: 327

KANDY RD. — KILINOCHCHI



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH THE BEST COMPLIMENTS

BRANCH:

**JAAFNA TUTORIAL COLLEGE**

219/1, POWER HOUSE ROAD

JAFFNA

WITH BEST COMPLIMENTS

FROM

# AMEER TEX

12, GRAND BAZAAR — JAFFNA

BRANCH:

# AROSE TEX

47, MODERN MARKET JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

VISIT THE IDEAL SHOP

TO BUY

AUSTRALIAN BUTTER· CHEESE, CURD,

GHEE, MILKFOODS BISCUITS & SWEETS

MILK BAR

CENTRAL MARKET KANDY

WITH BEST COMPLIMENTS

FROM

RAJ TRADERS

1ST FLOOR

155, SEA STREET - COLOMBO 11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

OFFICE OF THE VICE - CHANCELLOR

UNIVERSITY OF PERADENIYA
PERADENIYA
SRI LANKA
*24th October 1979*

**TAMIL UNION**

*It gives me pleasure to write this message to the "Ilamkathir", the Annual Magazine of the Tamil Union.*

*It is due to the dedication and entiring efforts of the members of the Union that such a publication is forthcoming and I commend the Union for this effort. I hope the Union will continue to give the same conscientious and dedicated service*

*May I extend my sincere good wishes to the 'Ilamkathir'*

*Prof. B. L. Panditharatne*
VICE CHANCELLOR

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A. VELUPPILLAI PH. D D. PHIL

ASSOCIATE PROFESSOR AND
HEAD DEPT OF TAMIL

UNIVERSITY OF PERADENIYA
PERADENIYA

தமிழ்ச் சங்கத்தின் மலரான இளங்கதிர் மலர்ந்து மணம் பரப்புவது கண்டு மகிழ்ச்சியடைகிறேன்.

இளங்கதிர் வெளிவருவது பழங்கதையாய்ப் போய் விட்டது.

எதிர்கால இளங்கதிர்கள் இன்னும் சிறப்பாக அமைய பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்பேசும் மாணவர்கள் உழைக்கவேண்டும்.

ஆ. வேலுப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துணைத்தலைவர் செப்புகின்றார் .......

பேராதனை பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு, அது தனது பொன் விழாவை 1976-77ல் தாண்டியிருந்தும்கூட இந்த இளங்கதிர் இதழ் 23வது இதழாகவே வெளி வருகின்றது. ஒரு இதழை வெளியிடுவதில் கடந்த கால செயற்குழுவினருக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய சிரமங்களையே இது காட்டுகிறது. இந்த வகையிலே இந்த வருட செயற்குழுவினராகிய எங்களுக்கும் இதே சிரமங்கள் ஏற்படாமலில்லை. இருந்தும் மலர் ஒன்றை வெளியிடுவது ஒரு சங்கத்தின் வளர்ச்சிக்கு ஒரு படிக்கல்லாக் அமையுமென்பதை மனதிற்கொண்டு இதனை வெளியிடுகின்றோம்.

இந்த வருடத்துடன் எமது கடமைகள் முடிந்துவிட்டன என்று வாளாவிருக்காமல் இனிவரும் காலத்தைய தமிழ்ச் சங்கத்தின் வளர்ச்சியையும் கருத்திற்கொண்டு எனது சில அனுபவங்களை வருங்கால செயற்குழுவினருக்கு தெரியப்படுத்துவதும் எனது கடமையென்றே கருதுகின்றேன்.

எமது செயற்குழுவிற்குரிய காலங்களிலும் சரி, செயற்குழுவினரிடையே நல்ல ஒரு கூட்டுறவு இல்லாமையை உணரக்கூடியதாக இருந்தது. இது தமிழ்ச் சங்கத்தின் வளர்ச்சியைத் தடுக்கும் என்பதையும் விட ஓரடி பின்னேக்கி வைக்கவும் முயலலாம் என்பதால் வருங்காலத்தில் இவை தவிர்க்கப்படவேண்டும் என்பதே என்னுடைய அவா.

மற்றையது பல்கலைக்கழக தமிழ் இரசிகர்களைப் பற்றியது. பல்கலைக்கழகப் புத்திஜீவன்களின் இரசியத்தனத்திற்கு சற்றேனும் தரங்குறைந்த நிகழ்ச்சிகளை மேடையேற விடாது தடுக்கின்ற ஒரு மனப்பாங்கு இன்று எமது பல்கலைக்கழக மாணவர்களிடையே வளர்ந்துள்ளது. இது தரமான நிகழ்ச்சிகளையே மேடையேற்றவேண்டும் என்ற அவாவை கலைஞர்களிடையே வளர்ப்பதைக் காட்டிலும், அவர்களது உற்சாகத்தை இழக்கச் செய்யும் வகையிலும் அமைந்து விடலாம்.

பேராதனை பல்கலைக்கழக தமிழ்ச் சங்கத்தின் பணிகள் மேன்மேலும் தொடர்வதற்கு மேற்கூறிய குறைகள் நீங்குவதுடன் நல்லதொரு கூட்டுறவும் மாணவர்களிடையே நிலவவேண்டும் என விரும்புகின்றேன்.

நன்றி!

கி. ரவீந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் பொருளாளர்.................

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பழம் பெரும் சங்கங்களுள் ஒன்றாகத் திகழும் தமிழ்ச்சங்கம் தனது வருடாந்த மலரான இளங்கதிரை வெளியிடுவதையிட்டு நான் பெரு மகிழ்வு அடைகின்றேன்.

பல்கலைக்கழகத்தில் தமிழர் தம் கலாச்சாரத்தைப் பேணிப்பாதுகாப்பதில் நம் தமிழ்ச்சங்கம் ஆற்றிவருகின்ற சேவை அளப்பரியது. வருடமொருமுறை மலரொன்றினை வெளியிடுவதுடன் திருப்தியடைந்து விடாது, எம் மாணவர் இன்னிசை விழாக்களையும் நடன நிகழ்ச்சிகளையும் நாடகப் போட்டிகளையும் எமக்களிப்பதன் மூலம் எம் புலன்களுக்கு நல் விருந்தளித்து எம்மை உவகையடையச் செய்வது பாராட்டற் குரியது.

'இளங்கதிர்' தனது பெயருக்கேற்ப இளமைத் துடிப்புடன் இம்முறையும் வெளிவருகின்றது. நாளுக்குநாள் உயர்ந்து வரும் விலைவாசிகள் எமது சஞ்சிகையின் வெளியீட்டையும் பாதிக்காமல் விட்டுவிடவில்லை பல பிரச்சினைகளுக்கு மத்தியிலும் இதனை அதிக காலதாமதமின்றி வெளியிட்டுள்ள ஆசிரியர் எமது பாராட்டிற்குரியவர்.

தமிழ் மாணவரிடையே மொழியுணர்வும் கலையார்வமும் பரப்பி வரும் நம் தமிழ்ச்சங்கம், சீரும் சிறப்புடனும் பல்லாண்டு வாழ்ந்து தமிழ்த்தாய்க்கு சேவையாற்ற வேண்டுமென வாழ்த்துகிறேன்.

மு. சின்னத்தம்பி

கலாநிதி ஆறு. அழகப்பன்

அண்ணாமலை பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்
தமிழ்நாடு

## ஆசியுரை

அமிழ்தும் தமிழும் ஒன்று; உயிரும் தமிழும் ஒன்று; இனிமையும் தமிழும் ஒன்று; மங்கை இன்பமும் தமிழும் ஒன்று. இவ்வாறெல்லாம் கன்னித் தமிழைப் பாடி மகிழ்ந்தான் பாவேந்தன் பாரதிதாசன்.

தம்மொழியைக் காப்பதும், பேணுவதும், வளர்ப்பதும் ஒவ்வொரு தமிழனின் கடமையாகும். அதனை இலட்சிய நோக்காகக் கொண்ட பேராதனைத் தமிழ்க்குடியினர் தமிழ்ச்சங்கம் அமைத்திருக்கின்றனர், என்ற செய்தி எம்போன்றோர் காதுகளில் தேன்போலப்பாய்கிறது.

சங்கத்தினர் ''இளங்கதிர்'' என்ற ஆண்டிதழ் வெளியிடுகின்றனர் என்ற அடுத்த செய்தியும் இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தந்தது. ''எம்கடன் தமிழ்ப்பணி செய்துகிடப்பதே'' என்பதற்கேற்ப சங்கத்தினர் மொழிப்பணியில் ஈடுபட்டிருக்கின்றனர்.

ஊழி அழிந்தாலும் அழியா ஒளி. கதிர். அப்பெயர் தாங்கி வெளிவரும் ''இளங்கதிர் வண்ணவடிவுடன்வர வாழ்த்துகிறேன் தமிழ்மொழி வளர்த்த மதுரைத் தமிழ்ச் சங்கம்போல், பேராதனை தமிழ்ச்சங்கமும் மொழிவளர்த்திட வேண்டுகிறேன்.



அன்பன்

ஆறு. அழகப்பன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோதனையும் வேதனையும்

எங்கும் பசுமை எழில் கொஞ்சும் குளுமை
குன்றுகளிடையே குதித்தோடிவரும் ஆறுகள்
குளிர்ந்த தன் நிழலைப் பரப்பும் மரங்கள்
இவையெல்லாம் இலங்கையின் எழில்
காட்டி நிற்கும் சான்றுகள்
கண்ணுக்கு அழகாகக் கட்டழகு மங்கையர்
களனிதோறும் பசுமையான நெற்கதிர்கள்
இனிமையான மலைநாட்டின் இயற்கைதரும் தேயிலை
அங்கெல்லாம் தமிழின் அங்கங்கள் பாடுபடும்
காடாகக் கிடந்ததெல்லாம் கழனிகளாகுதென்றால்
ஓடாக உழைத்தவனின் வாழ்வில் செழுமையில்லை
எங்கெல்லாம் தொழில் திறனுண்டோ
அங்கெல்லாம் தமிழன் திறமுண்டு.
உழைக்கவென்றே பிறந்தவர்கள் உதிரத்தைச் சிந்திய தினம்
உண்மையாகப் பாடுபட்டும் கிடைக்கின்ற லாபமெல்லாம்
சுரண்டி வாழும் கூட்டத்தின் கெடுபிடியில் சென்றுவிடும்.
பெரும்பான்மை என்று அவர் கொண்ட பல சலுகைகளும்
பாராளுமன்றம் மட்டும் பசுட்டாக ஓங்கிநிற்கும்
நிந்தித்து வாழ்பவரை வந்தித்து போற்றும் இனம்
ஒரு சாண் வயிற்றுக்காகவே வாழத் துடித்துநிற்கும்
வெந்த புண்ணில் வேல்தான் ஆகஸ்ட் மாதக் கலவரம்
எத்தனை சாவு! இங்கே எத்தனை கோரங்கள்!
இத்தனையும் நடந்தபின்னும் விடவில்லை இயற்கையன்னை
வெள்ளமாய்ப் பெருக்கெடுத்துத் தமிழினத்தைச் சீர்குலைத்தாள்!
துன்பமே தம் வாழ்வு என சோர்வு கண்ட தமிழினம்
மானமாய் வாழ்வதற்குத் தாயகத்தை நினைத்தது.
காலமும் மாறிவர கருத்துக்களும் மாறிவிட
புண்பட்ட மனத்தின் வடுமட்டும் மாறவில்லை
உரிமைக்காக ஊசலிடும் தமிழினத்தின் நிலையெண்ணி
வருந்துகின்ற மனமிருந்தும், மதியிருந்தும் வேலையில்லை
உழைப்பிற்கேற்ற கூலிகூட இல்லையென கொதித்தெழும் அவன்
கூலிக்காக வந்த தன் முன்னோரையே சாடுகின்றான்
மந்தைகளாய் தாம் வாழும் விந்தையினை எண்ணுகின்றான்
தம்மினத்தின் குறைதீரும் வழியொன்றை நாடுகின்றான்
இனக்கலவரம் ஆகஸ்ட் மாத இனக்கலவரமன்று
தம்மினத்திடையே இனம்புரியாத கலவரமாய்
காலமெல்லாம் இருப்பதுதான்.
தமிழரிலே எத்தனை சாதி? எத்தனை வேறுபாடு?
தமிழ் நாடு கிடைத்துவிட்டால் போதாது
அவன் தமிழுணர்வில் ஒன்றுபட்டு உறுதியாய் வாழ்வானா?
அடிப்படை உரிமையின்றி அல்லலுறும் இந்த இனம்,
அடிமைத்திறம் நீங்கி சுதந்திரம் பெறுமட்டும்
அவன் இனத்தின் தொல்லையெல்லாம் எப்போது நீங்கும் அந்தோ!
இன்னும் அவன் குறைகள் தான் ஏராளம்
பாட்டாளி மகனுக்கு பசிதீர உணவில்லை
கூலிக்காக உழைப்பவனுக்கு குடியிருக்க நல்லவீடில்லை!
ஏளிந்த வாழ்வு என ஏங்குகின்ற தமிழனுக்கு
என்று நல்வாழ்வு கிட்டும் என எண்ணிக் குமுறுகின்றேன்.

செல்வி உமாசந்திரா முத்தையா,
உதவி விரிவுரையாளர் - தமிழ்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுவாழ்வு சமைத்திடுவோம்

வேத ஸ்மிருதிகளை விழுங்கி ஜீரணித்து
நாதன் அடிக்கமலம் நமஸ்கரித்து இதுவரைக்கும்
யாது பலன் கண்டோம்? நாளைக்கு அவனருளால்
ஏதும் அருள்சுரக்கும் என்றெண்ணி ஏமாந்தோம்
செத்துப் போனபின் சிவலோகம்... நரகத்தின்
சித்திர வதையில்லாத் தெய்வபதம் .. சொர்க்கத்தில்
தண்ணென்ற சோலையிலே, தங்கமணி மாளிகையில்
உண்கின்ற அமிர்தத்தின் ருசியோடு மறுபிறப்பில்
நல்லா(ய்) இருப்பமெனும் நம்பிக்கை .. அட இவைகள்
எல்லாம் பொய்யென்று இந்நாளில் உணர்ந்திட்டோம்!

கந்த லாடைக்கும் கஞ்சிக்கும் கூழுக்கும்
குந்தி இருக்கின்ற குடிசைக்கும் வழியில்லார்
கெம்பி யெழுந்திட்டால் கெடுதி வருமென்று
நம்பிக்கை யூட்டி நசுக்கிட்டார் — சூழ்ச்சியினை
மெய்யென்று நம்பிநாம் வேதப் பொருள்பாடி
கையெடுத்துக் கும்பிட்ட காலங்கள் மறையட்டும்!

நால்பத்து மதங்களும் நானூறு சாமிகளும்
ஆள்கின்ற வர்க்கத்தின் ஆயுதங்கள் — இன்றைக்கு
தேர்தல், வாக்குரிமை, தெரிந்தெடுத்த 'எம்பிக்கள்'
பார்ஆளும் மன்றங்கள் பகட்டான கோஷங்கள்...
அன்ன இரைகாட்டி ஆள்கின்ற வர்க்கங்கள்
பின்னி வைத்திருக்கும் அலைபோலும் அந்நாளில்
அடிமைகளை, குடிமைகளை, ஆற்றல் மறவர்களை
மிடிமை நிலை கண்டுணர்ந்து முன்னேற விடாததடை
கண்ணுக்குத் தெரியாத 'கடவுள்' எனும் சூழ்ச்சி
விண்ணுக்கும் மண்ணுக்கும் விரிந்தபேர் அண்டத்தின்
சிருஷ்டிக்கும் காரணமாய்த் திகழ்கின்ற சக்தியென
வெருட்டிக் கதைசொல்லிப் புராணங்கள் படைத்திட்டார்
மானிடத்தைச் சித்திரித்து வழிப்படுத்தும் கலைகள்தமை
ஆனமட்டும் ஆண்டவர்க்கே அர்ப்பணித்தார்!
நெடுஞ்சமரில் இயற்கையினை நின்றெதிர்க்க வரும் அறிவின்
சுடர்விடும் விஞ்ஞான உண்மைகளை நிராகரித்தார்!
என்றென்றும் வெகுசனத்தை ஏமாற்றிச் சுரண்டுதற்குப்
பன்னூறு பேதங்களைப் படைத்திட்டார்! அவையெல்லாம்
பரலோகத் திருந்தாளும் பிதாவிட்ட பிசிவென்றே
நரவேட்டை ஆடுதற்கு வழிவகுத்துச் சென்றிட்டார்!
எங்கெல்லாம் அடக்குமுறை இருந்ததுவோ தொடர்ந்ததுவோ
அங்கெல்லாம் மதம்அதனை ஆதரித்து நின்றதுவே!
நம்மையவன் வருத்துவது நம்பாவம் தீர்க்கவெனும்
செம்மையிலாக் கருத்துக்களைத் திணித்திட்டார்! அதைநம்பி
எவ்வாழ்வில் ஏகாந்தராய் வாழ்ந்ததுவும் போதுமென்றே
நம்வாழ்வை நமக்காக நாமேதான் மீட்டுவரும்
பொன்நாளாய் இன்றேநாம் புதுவாழ்வு சமைத்திடுவோம்!

த. அன்பானந்தன்
4ம் வருடம் பேராதனை வளாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது வேறு சிரிப்பு

ஆரார் அது?
ஓ ஓ!
ஐயா தரகர்தான் வாறார். இஞ்சேரும்!
அவளிக்கவிசமாய் வந்திருப்பார்போலிருக்கு
ஓமோம் இருங்கோ
சரியான வெய்யில்தான்
ஓடாய் உழைத்திளைத்து
எலும்பாய்ப் போனீங்கள்
லேசாய் மணக்கிறது 'கூவி'லே?
நினைச்சன் நான்
பீ. ஏ படிச்சதெண்டு சொன்னீங்கள்
ஆனாலும்
பிள்ளை அதுக்குச் சம்மதிக்கமாட்டாளாம
நல்ல பெடியன்தான்
அது நல்லாய்த் தெரியுந்தான்
ஆனாலும் பாரும் ஐயா தரகர்தான்!
இந்தச்சம் பளத்தினிலே இருபேரும் சீவித்து
பிள்ளைரண்டு பெற்றால்
பிறகென்ன செய்கிறதோ?
ஓமோம் சம்பளம் பிறகெப்ப கூட்டினமோ?
குடியுங்கோ ஏன் சுடுதே?
இஞ்சேரும்
அவருக்குஇப்ப தேத்தண்ணி வேண்டாயாம்
ஓமோம் குடிப்பம்
அதுவும் அவளுக்கு அவளவு பிடிப்பில்லை
கால்சட்டை போட்டு கணக்கெழுதச்சரியாத்து
கொழுத்தசம்பளம்
கொழும்பில்எடுப்பான்தான்
ஆனாலும் பாரும் ஐயா தரகர்தான்
வேண்டாமாம் அவளுக்கு
நானென்ன செய்யிறது?
ஓமோம் அவவும் புத்திமதி சொல்வதுதான்
கேட்டால்தானேபெடிச்சி
வெத்திலையைப் போடுங்கோ
அப்பிடி எதுவுமில்லை
நல்லால்த்தான் இருக்கின்றாள்
இஞ்சேரும் சுண்ணாம்பு வைக்கேல்லை
கோபிக்கவேண்டாம் தரகர் ஐயாவே!
பிள்ளைகுரலெடுத்து பிலத்து அழுகின்றாள்
தனக்கிந்தக் கலியாணம்
எதுவும் வேண்டாமாம்
சுகமாய்ச் சீவிக்க வழியேதும் இருந்தால்
உடனே கலியாணம் செய்வாளாம்
நிக்கிறியள் இனி இருங்கோ
கண்டறியாக் கோபந்தான்
பிள்ளைக்குப் பிடிச்ச மாப்பிள்ளை
சங்கத்துக் கடையில்
கணக்கெழுதும் மனேசர் மார்தானும்
என்ன சிரிக்கிறியள்?
சமுதாயம் மாறாமல் இருக்கும் அதுமட்டும்
சங்கத்துக் கடையிலை தான்
மாப்பிள்ளைமார் இருப்பினமாம்.

துரைராஜா மனோகரன்
உதவி விரிவுரையாளர் தமிழ்த்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர் நெஞ்சில் கனலும் நெருப்பு

ஸ்ரீ தேவகாந்தன்

கல்வியிலே உயர்வுபெறும் ஆவல்கொண்டு
 கருத்துடனே ஆர்வமுடன் கற்றுத் தேறும்
வல்லவராம் இளைஞர்கூட் டமுயர் கல்வியை
 வளமுடனே பெற்றிடத்தான் துடித்து நிற்கும்
நல்லவேளை தனிலிங்கு கல்வி தன்னை
 நயமுடனே பெற்றிடவோ தடைகள் கோடி
உள்ளவரை உலகத்தில் உயர்வை நாடும்
 இளைஞர்களின் நெஞ்சினிலே எரியும் தீயே

கற்றகல்வி அதற்கேற்ப தொழிலை நாடி
 கால்தேய அலைந்தலைந்து உடலும் வாடி
பெற்றபயன் ஏதுமின்றி உள்ளம் நொந்து
 பெற்றவர்க்கும் மற்றவர்க்கும் சுமையைத் தந்து
மற்றவரை உதவிக்காய் தேடிச் சென்று
 மனம் நொந்து உடல்வெந்து தவித்து நின்று
வற்றிவிட்ட குளம்போன்று வரண்டு வாழும்
 வாலிபரின் நெஞ்சினிலே நெருப்பே மூளும்,

பாடுபட்டு உழைத்துமே நான் வாழ்வோ மென்னும்
 பாங்கான எண்ணமுடன் தெளிந்து நின்றால்
காடுவெட்டி நிலந்திருத்தி கழனி யாக்க
 காசு தேவையெனும் எண்ணந் தாக்க
கேடுகெட்ட வாழ்வேநம் வாழ்க்கை யென்று
 கிடுகிடுத்து சரிந்துவிடும் உள்ளம் இன்று
கோடுகட்டி வாழ்ந்திடவும் முடியாத் தன்மை
 குமுறுகின்ற இளைஞர்களின் நெஞ்சில் தீயே

பட்டங்கள் பலபெற்றும் வாழ்க்கை தன்னில்
 பதவியேதும் இல்லாது தவிக்கும்போது
சட்டத்தை மீறுகின்ற நிலைக்கும் வந்து
 தம்வாழ்வை தாமேதான் அழித்துக் கொள்வர்
பட்டங்க்ள் பலபெற்றும் பயனே இல்லா
 பரிதாப வாழ்வன்றோ இளைஞர் வாழ்வு
திட்டங்கள் உண்டாயின் துயரம் போக்க
 தீர்ந்துவிடும் கனலுகின்ற நெருப்புத் தானே

எத்தனையோ தொல்லைகளே நிறைந்த வாழ்வு
 ஏதோசிறு தொழில்கிடைப்பின் இல்லைத்தாழ்வு
வித்தகர்க்ள் கல்விகேள்வி தன்னில் நித்தம்
 வேலையின்றி தவிப்பதனால் ஏறும் பித்தம்
பித்தர்களாய் இளைஞர்கள் கல்வி கற்றும்
 பேதலித்து திரியும்நிலை மாற வேண்டும்
முத்தான இளைஞர்க்கு வாய்ப்பு கிட்ட
 மூண்டெழுந்த நெருப்பதுவும் மறையும் எட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயலாளர் ஏட்டிலிருந்து . . . .

சொந்தநாட்டில் பரர்க்கடிமை செய்தே துஞ்சிடோம் — இனி அஞ்சிடோம்

என்று சபதம் பூண்ட உறுப்பினரைக்கொண்ட பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்ச் சங்கம், ஒரு தவணை பிந்திப் பதவியேற்றபோதும் வருடா வருடம் நடத்துகின்றன, பேச்சுப் போட்டி, விவாதப் போட்டி, நாடகப் போட்டி கவியரங்கு, கலைவிழா ஆகியவற்றை வெற்றிகரமாக நடத்தியது,

(1) கூட்டணியின் கோரிக்கைகளைக் காட்டிலும் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் தனி நாட்டை உருவாக்கும்,

(2) வாழ்வை வளம்படுத்துவது
காதல் திருமணமா? பேச்சுத் திருமணமா?

(3) வாழ்வை முழுமைப்படுத்துவது பிரமச்சரியமே

(4) தமிழர்கட்கு இன்று வேண்டுவது சமுதாய மாற்றமே யன்றி ஆட்சியாளர் மாற்றமல்ல;

(5) கலை விஞ்ஞானம் என அறிவைப் பாகுபடுத்துவது அர்த்தமற்றது,

(6) பகுத்தறிவு வாதம் எவ்வளவுதான் வளர்ந்தாலும் மதவாதத்தை அழிக்கமுடியாது.

(7) இன்றைய சூழ்நிலையில் அந்நிய முதலீடு இலங்கையின் பொருளாதாரத்தை மேலும் சிக்கலாக்கும்

(8) சமுதாயத்தில் ஆண்களைக் காட்டிலும் பெண்கள் பொறுப்பு மிக்கவர்கள்,

(9) சமுதாய அரசியல் போராட்டங்களில் பெண்களின் நேரடியான பங்கே அவசியமானது.

(10) அண்மையில் நடைபெற்ற தமிழ் மாணவர்களின் பகிஷ்கரிப்பு நியாயமானது.

11) இலங்கையின் இன்றைய சூழ்நிலையில் குடும்பக்கட்டுப்பாடு அவசியமானது.

ஆகிய தலைப்புக்களில் விவாத அரங்கும். இன்னும் அணையவில்லை விளக்கு என்ற தலைப்பில் கவியரங்கும் நடத்தப்பட்டன. ஐந்துநாள் தொடர்ச்சியாக நாடக விழாவில் பாலேந்திராவின் நெறியாழ்கையில் உருவான

'பசி, புதிய உலகம் பழைய இருவர்' ஆகிய நாடகங்களைத் தொடர்ந்து வாழத் தெரிந்தவர்கள், அவனுககு ஏன் இந்தக் கதி, அவர்கள் வித்தியாசமானவர்கள், நாதம் இசைக்காத வீணை, காலம் செய்த கோலமடா இருட்டறையில் உள்ளதடா இலங்கை, தவறுகள் ... ... சாவதில்லை. பீடைகள், பலிகள், மன ஓலங்கள்,

ஆகிய மாணவர்களின் ஆக்கங்கள் மேடையேற்றப்பட்டன.

சங்கத்தின் நிதியுதவிக் காட்சியாக கலைப்பீட அரங்கில் ஆலய மணி திரையிடப்பட்டது வருடாந்த கலைவிழாவும் பரிசளிப்பு விழாவும் 2-6-78 அன்று நடைபெற்று இவ்விழாவில்

சட்டக்கல்லூரி மாணவர்களுக்கும் எமது பல்கலைக்கழக மாணவர்களுக்கும் இடையில் சமுதாய வளர்ச்சிக்கு ஆளுமை மிக்க தலைவர்களைக்காட்டிலும் ஆற்றல் மிக்க தொண்டர்களே அவசியம் என்ற தலைப்பில் விவாத அரங்கும்

அண்மையில் பல்கலைக்கழகத் துணைப் பேராசிரியர் ஆறு அழகப்பன் அவர்கள் நாடகமே உலகம் என்ற தலைப்பில் பேருரையும்

கவிஞர் அம்பி அவர்கள் தலைமையில்

நாம் ஏன் இன்னும் நடுத்தெருவில் நிற்கின்றோம் என்ற தலைப்பில் கவியரங்கும் களுதாவளை கலைக்கழகத்தினரின் ஜானகி கல்யாணம் நாட்டுக்கூத்தும் பரத நாட்டியம் மாணவர்களின் மெல்லிசை ஆகியன இடம்பெற்றன,

இம்முறை இச்சங்கம் இளங்கதிரை வெளியிடுவது ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இறுதியாக தமிழ்ச் சங்கத்தின் நடவடிக்கைகளுக்கு இருக்கின்ற தடைகளுக்கு மத்தியிலும் நாம் நடத்திய நிகழ்ச்சிகளுக்கு ஆதரவளித்த, இனி நடக்க இருக்கும் சங்க நடவடிக்கைகளில் பங்கேற்ற முன்னிற்கும் எம் உடன்பிறப்புகளுக்கு என் சார்பிலும் சங்கத்தின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்,

மகாலிங்கம் சிவகுமாரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு மகாவித்துவான்

## அமரர் புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள்

# நினைவுப் பாக்கள்

*தேன்சுவறும் பாஉதிரும் செந்தமிழ்வாய் மூடியதோ தென்றல் காற்றைப்*
*போன்றதுபோல் ஆற்றுபொருள் தேங்குமுரை போயிற்றோ? புலவருள்ளே*
*தோன்றுசுடர் மாமணியாய்த் துலங்கியவர் தமிழணங்கின் சொந்தச்செல்வர்*
*மீண்டுவர மாட்டாத இடமேன் சென்றார் ஈது விதியோ அம்மா?*

*தெளிவுநிறை ஆராய்ச்சிப் புலனறிவு சீர்எளிமைத் தோற்றம் என்றும்*
*களிமொழியும் முகம்காண்பார் காந்தத்தின் முன்னிரும்பாய் காணப்பட்டார்*
*பழியெதுவும் இல்லாத வார்த்தை பகருமெம தரும்பெரிய தம்பிப்பிள்ளை*
*விழியிரண் டினித்திறந்து தமிழ்முகம் பார்க்காரோ விந்தையம்மா!*

*எண்ணமெலாம் கவிதையெனும் இணையில்லா அமுதத்தை இசைந்ததாலே*
*வண்ணமிகு பாமலரால் தமிழ்வனிதை மனங்குளிர மாலைசூட்டி*
*விண்ணளவு புகழுடனே விளங்கிவிபு லானந்தன் ஆசிபெற்றோன்*
*கண்ணபர மாத்மாவின் கழலிணையைச் சேர்தற்கோ காலஞ் சென்றார்*

*சிந்தையிலே ஆழ்ந்த உளம் கிழக்கிழம் பெற்றொரு உடலம் தாங்கி*
*வேதசித்த அந்தநுட்பம் மெருகுறவே விளக்கவல வித்வம் ஏத்தும்*
*முதறிஞர் என்று தமிழ் உலகமெலாம் வியந்தேத்தி அவைமுன்வைத்த*
*சாதகனும் புலவர்திரு தம்பிப்பிள்ளை இன்றேனோ சயனித்தானே?*

*பற்றளவில் லாதிருந்தும் சமயசமூ கப்பரப்பில் படர்ந்துநின்ற*
*புத்துரையாம் சாதியின பேதங்கள் போயொழியச் சீர்திருத்தம்*
*உற்றசமு தாயஅமைப் பொன்றுருவா தல்காண உழைத்த செம்மல்*
*சுற்றமெலாம் விம்மியழச் சொல்லாமல் கொள்ளாமல் சென்றிட்டாரே!*

ஆக்கம்: அ. சக்திதாசன்
(அக்கரைச் சக்தி)
பொறியியல் பீடம் நான்காம் வருடம்

# ஊடல் உவகை

விட்டுப் படலை விரியத் திறந்தபடி
பூட்டிறு என்ன பொறுப்புனக்கு வந்துவிடும்
கொல்லையில கண்டு ஓளறுறது கேக்கலையோ?
புல்லை எடுத்துப் போய்ப் போட்டாக் குறைஞ்சிடுமோ?
என்று இரைந்தபடி ஏரம்பு வருகின்றான்
குன்றனைய தோழ்களிலே கூடை மண்வெட்டியொடு

மன்னன் வரவில் மலர்விழியாள் சொக்குவதும்,
பின்னர் மனது பிணங்குவதும்,
என்னவர்க்கு —
எப்போதும் என்மேற் குறைதான் எனமனதிற்
கப்பியவோர் துன்பக் கருமேகம் மென்முகத்தை
'உம்' என்று வைக்க ஒருபதிலும் கூறாது
அம்மன் தேர்போல அசைந்தெழுந்து செல்லுவதும்

கொல்லும் வெயிலிற் குளித்து, வியர்வையது
புல்லின் நுனிநீராய்ப் போய்மறைய உப்புடலம்
மட்டும் கொணர்ந்து மனது நிறையமட்டும்
கொட்டுக் கிணற்றிற் குளித்த புதுமெருகில்
மெல்லக் கனகு! கனகு!! எனக் கனியும்
சொல்லின் குழைவிற் துயரம் மறப்பதுவும்

"ஊட்ட வரக்க ஒருநாளும் உங்களுக்கு
காட்டேலா என்ன" — கனகு பிணங்குவதும்

"வேலைக் களைப்பின் விரத்திலதான் நான் நாயப்
போல உன்னிற் பாயுறது
நமக்குள்ளே வேறென்ன
கோபமிரிக்கி குறையிரிக்கி
ஏன் கனகு சோவமா என்னக்
குளிர்ந்தவனிற் சாய்கிறதும்
எல்லாம் எழுதில் இது கவிதையாகாது
மெல்ல விரிந்து விரிந்து ஒரு காவியமாய்
செல்லும் அதனைச் சிறிதாய் முடியட்டும்

சி. கருணானந்தராசா
உதவி விரிவுரையாளர் — விவசாய பீடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தானின் மகிமை

''குந்தியிதில் இருந்தே நீ கிரைதனை உருவி
தந்திடய்யா'' என்ருள் தாய் — அன்னைமொழிகேட்டு
அலுப்புடனே நானும் அமர்ந்திட்டேன் அங்கு
அம்பாரம் கிரையெல்லாம் புடைசூழக் கண்டேன்.

அமர்ந்திட்ட அடுத்த கணம் எங்கிருந்தோ எந்தன்
அத்தை மகள் ''கலா''வும் கலகலப்பாய் வந்திட்டாள்
அடுக்கடுக்காய் கேலிசெய்து அவள் ஆசையான
அத்தானும் அடியேனைச் சீண்டி மகிழ்ந்திடவே.

''ஆளைப்பார் ஆளை அழகான ஆம்பிளையாம்
அடுக்கடுக்காய் படித்தவராம் அத்தானுக்கருகில்
அடுப்பு வேலைசெய்ய ஆவலுடன் வந்தீர்
ஆண்பிள்ளையாக தகுதியில்லை உமக்கு — நல்ல
அழகான சேலைகளும் அம்பாரம் விலையே
ஆகையினல், அளவுடனே தைத்த ''மினிஸ்கேட்'' நான் தாரேன்
அணிந்த நீர் தெருப்பக்கம் சென்றிடுவீர்; என்று
சிரிப்புடனே கூறி அவள் ஓடிவதன் முன்னே
சீற்றமடையா நான் சிரித்துடனே சொன்னேன்.

''பொறுத்திரு சிங்காரி ஓரிரண்டு ஆண்டில்
வாயும் வயிறுமதாய் வாத்துப்போல் நடந்து
அத்தானே இங்கே அடுப்பதனில் சோறு
புழுங்கிற்று பாருங்கள், புளி அவியல் சொதியைப்
புறம்பாக இறக்கித்தான் வையுங்கள் என்றே
மூச்சிரைக்க நீயும் முணுமுணுக்கும் போது
அத்தானின் மகிமையது அப்போது புரியும்.

J. A. குறூஸ்
2ம் வருடம் (கலை)

# இதழாசிரியர்

தமிழ் வளர்க்க சங்கங்களை அமைத்தனர் சங்ககாலத்தினர். ஆம் சங்கம் ஒன்று தமிழ் வளர்க்க அதைகாக்க அவசியம் என்பது இன்றும் உணரப்படுகின்றது. கடந்த 1976ம் ஆண்டு தனது 50வது வயதையும் கடந்து தமிழ் வளர்த்து வரும் எமது தமிழ்ச்சங்கம் இயல் இசை நாடகம் ஆகிய முத்தமிழிற்கும் அளப்பரிய ஊக்கமும் ஆக்கமும் அளித்து வந்துள்ளது.

தமிழ்ச் சங்கம் என்றும் இளமை குன்றாத மலராகிய இளம்கதிரை கூடவே ஆண்டு தோறும் அச்சேற்றி வந்துள்ளது. ஆனால் சில ஆண்டுகளில் அது சில தவிர்க்க முடியாத காரணங்களினால் வெளியிடாதுபோன துயர்நிறைந்த காலங்களும் கடந்தே சென்றுள்ளன 1977ம் ஆண்டும் அவ்வாறே கடந்துவிட்டது. ஆனால் இம்முறையும் நாம் இசசங்கத்தை துயர் அடையச் செய்யாது இளங்கதிரின் இளமையை மெருகூட்ட பல்வேறுபட்ட நடைமுறை பிரச்சினைகளின் மத்தியிலும் அதை வெளியிட முயற்சித்து வெற்றியும் கண்டுள்ளோம் என்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம்.

தமிழ்ச் சங்கத்தைப் பொறுத்தவரை அது பொருளாதார ரீதியிலோ அன்றி வேறு எந்த ரீதியிலோ மிகவும் குறைவான செல்வாக்குடனேயே இதுவரை இருந்து வந்துள்ளது. இதற்கு அனைத்து தமிழ்பேசும் அங்கத்தவர்களும் காரணமாவர். மற்றது அங்கத்தவர்கட்கு புறம்பானவர்களின் உதவி தமிழ்ச் சங்கத்தைப பொறுத்தவரை மிகமிகக் குறைவாகவே கிடைக்கின்றது.

அங்கத்தவர்கள் குழு உறுப்பினர்கள் அனைவரினதும் அயரா உழைப்பினால் பல்வேறுபட்ட நிகழ்ச்சிகளை நடத்தியதுடன் இளங்கதிரும் வெளியிடப்பட்டுள்ளது. எதிர்காலத்திலாவது இச்சங்கம் குழுநவிர்ந்த அங்கத்தினர், அங்கத்தினர் அல்லதோரின் உதவிகளைப் பெற்று சிறப்பாக தனது பாதையில் முன்னேறும் என்பது எமது கனு முன்னேறவேண்டுமென்பது எனது அவா.

எமது சங்கத்தைப் பொறுத்தவரை எமது வழிகாட்டிகளின் இடையே சில ஐயப்பாடுகள் ஏற்பட்டது என் கருத்து. அவ்வாறான ஐயப்பாடுகள் ஏற்படாது இருக்க இருசாராரும் புரிந்து நடப்பதுடன் பரஸ்பரம் ஒத்துழைப்பும் நல்கவேண்டும். இங்கு மாணவர்கள் வருவதன் நோக்கம் படிப்பதற்கே. பரீட்சை எழுதுவதற்கே அதற்காக சங்கங்கள் நடத்தப்படாது தடைசெய்வது அர்த்தமற்றது படிக்கும் பரீட்சை எழுதும் காலங்கள் தவிர்ந்த வேளையில் அவர்களால் சங்கங்களை திறம்பட செயற்படுத்த முடியும் என்பதில் எதுவித ஐயப்பாடும் இல்லை.

எது எவ்வாறாயினும் தமிழ்ச்சங்கம் தனது ஆண்டுமலரை மகிழ்ச்சியுடன் வெளியிட உதவிபுரிந்த விரிவுரையாளர் அங்கத்தவர்கள் அனைவர்க்கும் இதழாசிரியர் என்றவகையில் நன்றி நவில்கின்றேன்.

வாழ்க தமிழ்மொழி. வளர்க தமிழ்ச் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்துக்குமாரு ஸ்ரோர்

பலசரக்குச் சாமான்கள்.
சாப்புச் சாமான்கள்
மருந்துச் சாமான்கள்
எம்மிடம் கிடைக்கும்

என். எம். எம். வி. வீதி

நெல்லியடி

அன்பளிப்பு

நடன முருகன்
மெடிக்கல் ஸ்ரோர்ஸ்

எங்களிடம் ஆங்கில ஆயுள்வேத மருந்துகள் வாசனைத் திரவியங்கள், மருந்துச்சரக்குவகைகள், அபிஷேக திரவியங்கள் கற்பூரம் முதலியன பெற்றுக் கொள்ளலாம்.

நெல்லியடி - கரவெட்டி

## E.S.K. Gold Covering

இ. எஸ். கே. கோல்ட் கவறிங்

ஓடர் நகைகள் உத்தரவாதத்துடன்
குறித்த தவணையில்
செய்து கொடுக்கப்படும்

**9 A.** நவீன சந்தை - யாழ்நகர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WLTH THE BEST COMPLIMENTS OF

# Gowry Thanka Malikai

Porp, C R. Tharmathurai

209, KANDY ROAD CHAVAKACHCHERI

Phone 239

WITH THE BEST COMPLIMENTS
FROM

# *New City Hardware Traders*

GENERAL HARDWARE MERCHANTS

AUTHORISED DEALERS FOR BUILDING MATERIAL CORPORATION

நியூ ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்

சாவகச்சேரித் தொகுதி கட்டிடப்பொருட்கள் கூட்டுத்தாபனத்தின்
ஏக விநியோகஸ்தர்கள்

3, THANANKILAPPU RD CHAVAKACHCHERI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொடோன் ஸ்ரோர்ஸ்

பஸ் நிலையம்

நெல்லியடி கரவெட்டி

அன்பளிப்பு

வேல் றேடிங் கொம்பனி

7, நெல்லியடிச் சந்தி

நெல்லியடி கரவெட்டி

உரிமையாளர் சி. வேலாயுதம்

WINE STORES

Prop: T. Rajakulendram

No. 5. Thumpalai Road

Nelliady Karaveddy

இந்திரன் ஆபரண மாளிகை

Indiran Abarana Maligai

தங்க வைர நகை வியாபாரம்

உரிமையாளர்
ஆர். தெய்வேந்திரன்

கண்டி வீதி, சாவகச்சேரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்வாழ்த்துக்கள்

**சிவம் மெடிக்கல் ஸ்ரோர்ஸ்**

**அன்பு த்தகசாலை**

கச்சாய் வீதி சாவகச்சேரி

---

# Sivapatham

**TEA BOUTIQUE**

Kandy Road

Chavakachcheri

---

இளங்கதிருக்கு எம் ஆசிகள்

**BRAINERS**

**TURORIAL TUTORS**

Kandy Rd Chavakachcheri

---

சாய்ப்புச் சாமான்களும் பலசரக்குச்
சாமான்களும்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்

**செ. தவயோகராசா**

ராஜா ஸ்ரோர்ஸ்

டச்சு வீதி மீசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-P... FO ROAD
NALLUR, JAFFNA
No.........

கலாநிதி செல்லத்துரை குணசிங்கம்
விரிவுரையாளர், வரலாற்றுத்துறை,
பேராதனைப்பல்கலைக் கழகம்

ஈழத்து இந்துக்கோயில் நிர்வாகம்

# பொலன்னறுவை வானவன்மாதேவி ஈஸ்வரக் கோயில் அதிராஜேந்திரன் காலக் கல்வெட்டு

வரலாற்றுக் காலத்திற்கு முன்னரும் பின்னரும் தென்னிந்தியாவுக்கும் குறிப்பாகத் தமிழ்நாட்டிற்கும் இலங்கைக்கும் இடையே நெருங்கிய அரசியல், பண்பாட்டுத் தொடர்புகள் ஏற்பட்டு வந்துள்ளன. இத்தொடர்புகளின் வழியாகத் தென்னிந்தியாவில் தோன்றி வளர்ந்த அரசியல், பண்பாட்டு நிறுவனங்களின் செல்வாக்கு இலங்கையிலும் அவ்வப்போது ஏற்பட்டு அவை வளர்ச்சி பெற்றுள்ளமையைக் காணலாம். மேற்குறிப்பிட்ட சாசனத்தை ஆராய்வதோடு, பண்பாட்டு நிறுவனங்களுள் ஒன்றான சமய நிறுவனத்தைப்பொறுத்து அதன் செல்வாக்கு இலங்கையில் ஏற்பட்டிருந்தமையை அக் கல்வெட்டுச் சான்றின் அடிப்படையில் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தமிழக வரலாற்றின் பல்வேறு அம்சங்களிலும் கிறிஸ்துவுக்குப் பிற்பட்ட ஆறும் நூற்றாண்டளவிலே எழுச்சி பெற்ற பல்லவர் காலம் ஒரு புதிய காலத்தின் தொடக்கத்தைக் குறித்து நிற்பதனைக் காணலாம். உக்கிரமாக நடைபெற்ற பக்தியியக்கத்தின் விளைவாக, முன்பு எழுச்சிபெற்றிருந்த சமணம், பௌத்தம் ஆகிய மதங்கள் தம் நிலையிழக்க அவற்றின் இடத்தினைச் சைவம், வைஷ்ணவம் ஆகிய மதங்கள் பிடித்துக் கொண்டன. இம்மாற்றத்தினைத் தொடர்ந்து பல்வேறு கலைகளும் தோன்றி வளர்ச்சி பெறக்கூடிய சூழ்நிலை இக்காலமளவில் தோற்றுவிக்கப்பட்டது. பக்தியியக்கம் கொடுத்த சமயவுணர்வின் விளைவாகப் பெருமளவிலான கோயில்கள் தோற்றம் பெற்றன. இக்கால கட்டத்தில் தோன்றி வளர்ந்த நிறுவனங்களின் பெருவளர்ச்சி பெற்ற நிலையினைச் சோழர் காலத்திற் காணமுடிகின்றது. இதனாலேயே தமிழக வரலாற்றின் பல்வேறு துறைகளிலும் ஒப்பற்றளவிற்தச் சிறப்புப் பெற்ற காலமாகச் சோழப் பெருமன்னர் காலம் (கி. பி. 9ம் நூற் — 13 ஆம் நூற்) சிறப்பிக்கப்படுகின்றது. இத்தகையதோர் ஒப்பற்ற பெருநிலையைச் சோழர் காலம் அடைவதற்குப் பல்வேறு காரணிகள் பொறுப்பாக இருந்தாலும் சிறப்பான காரணியாகக் கொள்ள முடிவது, சோழப் பேரரசில் நீண்ட காலத்திற்குத் தொடர்ச்சியாகப் பதவிவகித்துவந்த மன்னர்கள் பெருவலி படைத்தவர்களாக விளங்கியமையாகும். இவர்களுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்கள் தந்தை-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் மகனுமாகிய முதலாம் ராஜராஜனும் முதலாம் ராஜேந்திரனுமாவர். ராஜராஜனின் ஆட்சிக்காலம் பற்றி நீலகண்டசாஸ்திரி அவர்கள் கவனித்துள்ளமை கண்டு நோக்கற் பாலது.

"ராஜராஜன் ஆட்சிபெற்றுக் கொள்வதோடு சோழவம்சத்தின் சிறப்பும் புகழும் மிக்க ஒரு நூற்றாண்டுக்குள் நாம் பிரவேசிக்கின்றோம். சில அம்சங்களைப் பொறுத்து, விஜயாலயன் வழிவந்த எல்லாச் சோழ அரசர்களிலும் மிகச் சிறப்புப் பெற்றவனான முதலாம் ராஜராஜனின் தனிப்பட்ட ஆற்றல், அவனுக்குப் பின்வந்த அவனின் மகனும் வாரிசுமாகிய முதலாம் ராஜேந்திரனின் சிறப்பு மிக்க சாதனைகளுக்கு அத்திவாரமிட்டதென்பது மிகத் தெளிவான தொன்றாகும். ராஜேந்திரனின் ஆட்சியின் கீழ் சோழப் பேரரசு, மிகக் கூடியளவிற்குத் தனது உச்சத்தை அடைந்தது மாத்திரமன்றி அதன் வலிமை கடல்கடந்த பிரதேசங்களுக்கும் பரவலாயிற்று. ராஜராஜனின் முப்பதாண்டு ஆட்சிக்காலம், சோழ அரசின் வரலாற்றில் ஓர் ஆக்கபூர்வமான காலமாக அமைகின்றது. சிவில்சேவை, இராணுவம் ஆகியவற்றின் அமைப்பிலும் கலை, கட்டிடம், மதம், இலக்கியம் ஆகியவற்றிலும் அக்காலத்து முற்போக்கான ஏகாதிபத்தியத்தின் விளைவாக ஏற்பட்ட ஆற்றல்மிக்க சக்திகள் தொழிற்பட்டுக் கொண்டிருந்தமையைக் காணமுடியும்". 1

இத்தகைய பேராற்றல் மிக்க ராஜராஜன், ராஜேந்திரன் ஆகிய மன்னர்களின் காலத்தில் பெரும் பேரரசு தோற்றுவிக்கப்பட்டது மாத்திரமன்றி அப்பேரரசின் செல்வாக்கு இந்தியாவின் பிறபகுதிகளிலும் இலங்கை, தென்கிழக்காசியா போன்ற கடல் கடந்த பகுதிகளிலும் ஏற்படுத்தப்பட்டது. இவர்களது இத்தகைய வலிமைமிக்க போர் முயற்சிகளின் காரணமாகப் பேரரசில் அரசியல் உறுதிப்பாடு ஏற்படுத்தப்பட்டது. அரசியல் உறுதிப்பாட்டினைத் தொடர்ந்து, பேரரசர் மேற்கொண்ட கடல்கடந்த வணிக நடவடிக்கைகள், இக்காலத்து எழுச்சி பெற்ற வணிகக் கணங்கள் மேற்கொண்ட வணிக முயற்சிகள் ஆகியவற்றினால் பேரரசின் பொருளாதாரம் செழிப்புற்றது. இவ்வாறு அரசியல் உறுதிப்பாடும் பொருளியற் செழிப்பும் ஏற்பட்ட சோழப் பெருமன்னர் காலத்திலேயே பல்லவர்காலத்துப் பக்தியியக்கத்தின் பெருந்தாக்கம் உணரப்பட்டது இதன் விளைவாகத் தமிழ்நாட்டில் முன்னர் என்றுமில்லாத வகையில் கலைத்துறையிலும் பெருவளர்ச்சி ஏற்படலாயிற்று. தஞ்சையில் ராஜராஜனாற் கட்டப்பட்ட ராஜராஜேஸ்வரமும் கங்கை கொண்ட சோழபுரத்தில் ராஜேந்திரனால் எடுக்கப்பட்ட கங்கைகொண்ட சோழீஸ்வரமும் சோழப் பெருமன்னர் காலத்திற் கலைத்துறையில் ஏற்பட்ட பெருவளர்ச்சிக்கு அதியுன்னத உதாரணங்களாக இன்றும் விளங்குகின்றன.

## வானவன்மாதேவி ஈஸ்வரம்

ராஜராஜன், ராஜேந்திரன் ஆகியோரது ஆட்சிக் காலங்களிலேயே முதன் முதலாக இலங்கைமீது வெற்றிகரமான படையெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. அதாவது ராஜராஜனால் அரம்பிக்கப்பட்ட இலங்கைமீதான சோழப்படையெடுப்பு அவன் மகன் ராஜேந்திரனால் வெற்றிகரமாக முற்றுவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து தமிழ்நாட்டு வரலாற்றில் முன்னர் என்றுமில்லாத வகையில், தமிழ்நாட்டு வம்சம் ஒன்றின் நேரடியான ஆதிக்கத்தின் கீழ் இலங்கையின் பெரும்பகுதி கொண்டுவரப்பட்டு மும்முடிச் சோழமண்டலம் என்ற பெயரோடு சோழப் பேரரசின் ஒரு மாகாணமாக இணைக்கப்பட்டது இவ்வாறு இலங்கைக்கப்பட்டபோது, சோழப் பேரரசுக் காலத்தில் தமிழ்நாட்டில் இடம் பெற்றதாக நாம் மேலே கவனித்த அபிவிருத்திகள் இலங்கையிலும் குறிப்பிடத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க்களவிற்குப் பிரதிபலித்தன. அரசியல் துறையில் மாத்திரமன்றிப் பண்பாட்டுத் துறை யின் பல்வேறு அம்சங்களிலும் தமிழ்நாட்டின் செல்வாக்கு இலங்கையில் ஏற்படுத்தப் பட்டது.

இலங்கையிலே ஆதிக்கத்தை ஏற்படுத்தியிருந்த காலத்தில் சோழப் பெரு மன்னர் கோயில்களை அமைத்திருந்தனர் என்பதற்கு மாந்தை, திருகோணமலை, பதவியா, பொலன்னறுவை போன்ற பகுதிகளிற் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் சில சான் றுக அமைகின்றன.2 இத்தகைய கோயில்களில் இன்றுவரை பூரணமாகப் பேணப்பட்டுச் சிறந்து விளங்குவது அப்போது தலைநகராக விளங்கிய பொலன்னறுவையிற் கட்டப்பட்ட வானவன் மாதேவி ஈஸ்வரமாகும். இலங்கையிற் சோழராட்சி முடிவுற்று ஏறத்தாழ ஆயிரம் வருடங்களாகியும் அவ் வாட்சியை இன்றும் நினைவுபடுத்திக் கொண்டிருக்கும் உன்னத பண்பாட்டுக் கருவூலமாக விளங்குவது இக்கோயிலாகும். இருபதாம் நூற்றாண் டின் பிற்பகுதியில் இலங்கைத் தொல்பொருளாய்வுப் பகுதியினர் மேற்கொண்ட அகழ் வாராய்ச்சி நடவடிக்கைகளின் போதே இக் கோயிலின் பெருமை வெளிக்கொணரப்பட் டது. இவர்களால் ஒன்றுக்கு மேற்பட்ட சிவாலயங்கள் கண்டு பிடிக்கப்பட்டமையினால் அவற்றுக்கு இரண்டாவது சிவதேவாலயம், ஐந்தாவது சிவதேவாலயம், ஆறாவது சிவதே வாலயம் என்ற பெயர்களை வழங்கியுள்ளனர். இவற்றில் இரண்டாவது சிவதேவாலயமே நாம் இப்போது கவனிக்கின்ற வானவன்மாதேவி ஈஸ்வரமாகும். இதன் கலையம்சம் பற்றிக் கவனித்த நீலகண்டசாஸ்திரி அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்;

> "கருங்கல்லினாலும் சுண்ணாம்புக் கல்லினாலுங் கட்டப்பட்டுப் பழைய பொலன் னறுவை நகரில், சுவர் மதில்களுக்கிடையில் காணப்படும் இச்சிறிய அழகுமிக்க சிவதேவாலயம், தற்போதும் நல்ல பாதுகாப்பு நிலையில் காணப்படும் ஒரு சில இந்து நினைவுச் சின்னங்களுள் ஒன்றாகும். தஞ்சாவூரில் அமைக்கப்பட்ட பெருங் கோவிலை அதியுன்னதமானதும் விசாலமானதுமான உதாரணமாகக் கொண்ட, கிறிஸ்துவுக்குப் பிற்பட்ட பத்தாம் பன்னிரண்டாம் நூற்றாண்டுகளுக்கிடையில் தென்னிந்தியாவில் கட்டப்பட்ட இந்துக் கோயில்களின் அமைப்பினை இக்கோயி லின் கட்டிட அமைப்புமுறை ஒத்தது என ஐயமின்றிக் கூறலாம்." 3

வானவன் மாதேவி என்பது சோழப் பேரரசரின் மனைவியர் சிலர் பெற்றிருந்த சிறப்புப் பெயராகும். இப்பெயரினைப் பெற்றிருந்த எல்லா அரசியினரையும் அறிந்து கொள்ள முடியாவிட்டாலும் சாசனங்களில் கிடைக்கின்ற குறிப்புக்களைக் கொண்டு பின் வருவோர் இப்பெயரினைப் பெற்றிருந்தனர் என அறியலாம்;

(1) இரண்டாம் பராந்தகனான சுந்தரசோழனின் மனைவி — வானவன் மாதேவி 4

↓

மலையமானாட்டுச் சிற்றரசனின் மகள்

↓

முதலாம் ராஜராஜனின் தாயார்

(2) முதலாம் ராஜராஜனின் மனைவி — வானவன் மாதேவி 5 (திரிபுவனதேவி)

↓

முதலாம் ராஜேந்திரனின் தாயார்

(3) முதலாம் ராஜேந்திரனின் மனைவி — வானவன் மாதேவி 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களுள் எந்த அரசியின் பெயரால் இக்கோயில் கட்டப்பட்டது எனத் திட்டவட்டமாகக் கூறுவது இலகுவன்று, இக் கோயிலுக்குச் சேர்ந்ததாகக் காணப்படும் கல்வெட்டுக்களில் காலத்தால் அதிமுந்திய கல்வெட்டாகக் காணப்படுவது, முதலாம் ராஜேந்திரசோழனின் ஆட்சியினது முற்பகுதிக்குச் சேர்ந்த கல்வெட்டாகும். இருந்தும் இதனைக் கொண்டு, இக்கல்வெட்டுப் பொறிக்கப்பட்ட காலத்திலேயே இக் கோயில் கட்டப்பட்டது என உறுதியாகக் கூறுவது கடினமாகும். மேற்கூறப்பட்ட அரசியருள், அவள் மேற்கொண்ட நற்கருமங்களினுற் சிறப்புப் பெற்ற அரசியாகக் காணப்பட்டவள் சுந்தர சோழனின் மனைவியும் முதலாம் ராஜராஜனின் தாயாருமாயிருந்த வானவன் மாதேவியாவாள். தன் கணவன் உயிர் துறந்த காலை தானும் உடன்கட்டை ஏறிய இவ்வரசி கல்வெட்டுக்களிலே சிறக்கப்பாடப்பட்டுள்ளாள்.[7] ராஜராஜனின் உடன்பிறப்பான குந்தவை, தஞ்சைப் பெரியகோயிலில் தன் தாய் வானவன் மாதேவியின் படிமத்தை அமைத்து அதன் நாள் வழிபாட்டிற்கு நிவந்தமாகப் பெரும்பொருள் வழங்கிய செய்தி,[8] ராஜராஜனின் தாயான வானவன் மாதேவி அப்போது அடைந்திருந்த பெருஞ்சிறப்பு நிலைக்குச் சான்முக அமைகின்றது. இவற்றை நோக்கும்போது, ராஜராஜன், தான் இலங்கையிற் பெற்ற வெற்றியை என்றும் நிலைப்படுத்துவதற்காக, மாந்தை பதவியா போன்ற இடங்களில் தன் பெயரால் அதாவது முறையே ராஜராஜேஸ்வரம், இரவிகுல மாணிக்க ஈஸ்வரம் போன்ற கோயில்களை அமைத்தவாறு[9] தலைநகராக விளங்கிய பொலன்னறுவையில் அமைத்த கோயிலை அல்லது கோயில்களின் ஒன்றினை அப்போது பெருமதிப்புப் பெற்றிருந்த தன் தாய் பெயரால் அமைத்து அதற்கு வானவன் மாதேவி ஈஸ்வரம் என்ற பெயரை அளித்திருக்கலாம் என்று கூறவும் இடமுண்டு.

## அதிராஜேந்திரன் காலக் கல்வெட்டு

இக்கோயிலுக்குச் சேர்ந்த கல்வெட்டுக்களில் இப்போது நாம் கவனிக்கின்ற அதிராஜேந்திர சோழனின் ஆட்சிக் காலத்துக்குச் சேர்ந்த கல்வெட்டும் ஒன்றாகும். சிவதேவாலயத்தின் தெற்குச் சுவரிலே பொறிக்கப்பட்டுள்ள இக்கல்வெட்டு இருபத்து மூன்று வரிகளைக் கொண்டதாய் இடையிடையே கிரந்த எழுத்துக்களோடு தமிழிற் பொறிக்கப்பட்டுள்ளது இக்கல்வெட்டில் ஆங்காங்கே சில பகுதிகள் வாசிக்க முடியாதளவிற்கு அழிந்துவிட்டாலும் இதன் பெரும்பகுதி நன்னிலையிற் காணப்படுகின்றது.

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இலங்கையின் தொல்பொருள் ஆய்வுத் துறைக்குப் பொறுப்பாகவிருந்த H. C. P. பெல் அவர்களின் முயற்சியால் பல தமிழ்க் கல்வெட்டுக்கள் வெளிக் கொணரப்பட்டன. தமிழ்க் கல்வெட்டுக்களை நன்கு ஆராயவல்ல தமிழ் அறிஞர்கள் அப்போது இலங்கையில் எவரும் இல்லாதிருந்த காரணத்தினால், பெல் அவர்கள் இந்தியசாசனவியலாளரின் உதவியை நாடவேண்டிய நிலையிற் காணப்பட்டார்.[10] இதனைத் தொடர்ந்து இலங்கைத் தமிழ்க் கல்வெட்டுக்கள் பல அப்போது தென்னிந்தியாவில் தலைசிறந்த தமிழ்ச் சாசனவியலாளராக விளங்கிய ராவ்பகதூர் எச். கிருஷ்ணசாஸ்திரி அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுப் பின்னர் அக்கல்வெட்டுக்களின் பாடப்பிரதிகளிலவும் கிருஷ்ண சாஸ்திரியின் அச்சாசனங்கள் பற்றிய குறிப்புக்களும் இலங்கைத் தொல்பொருள் ஆண்டறிக்கைகளிற் பதிவு செய்யப்பட்டன. இவற்றுள் அதிராஜேந்திரனின் வானவன்மாதேவி ஈஸ்வரக் கல்வெட்டும் ஒன்றாகும் இக்கல்வெட்டுப் பற்றிய விபரம் 1906 ஆம் ஆண்டுக்கான இலங்கைத் தொல்பொருள் ஆண்டறிக்கையில் இடம்பெற்றுள்ளது.[11] இச்சாசனம் தென்னிந்தியாவுக்கு அனுப்பப்பட்டபோது முதலில், 1912 ஆம் ஆண்டுக்கான தென்னிந்திய சாசனவியல் ஆண்டறிக்கையில் 594 ஆம் இலக்கத்திற்குரியதாகச் சுருக்கமான குறிப்புடன் சேர்த்துக் கொள்ளப்பட்டது.[12] பின்னர் இலங்கை அரசாங்கம் இக்கல்வெட்டினையும் இலங்கையின் பிற தமிழ்க் கல்வெட்டுக்களையும் உடனடியாகப் பதிப்பிக்குமாறு வேண்டிக் கொண்டதனைத் தொடர்ந்து கிருஷ்ண சாஸ்திரி அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாம் பதிப்பித்த தென்னிந்திய சாசனங்கள், நாலாம் தொகுதியில் இலங்கைத் தமிழ்க் கல்வெட்டுக்கள் பலவற்றின் பாடப் பிரதிகளைக் கொடுத்தபோது நாம் இப்போது கவனிக்கும் இக்கல்வெட்டை 1388 ஆம் இலக்கத்துக்குரியதாகச் சேர்த்துள்ளார். 13 இக்கட்டுரையாசிரியருக்கு இக்கல்வெட்டின் மைப்பிரதி கிடைக்காமலும் இதன் மைப்பிரதியைத் தானே நேரிற் சென்று எடுக்கக் கூடிய வாய்ப்பு இல்லாமலும் இருந்த காரணத்தினால் கிருஷ்ணசாஸ்திரி அவர்கள் கொடுத்துள்ள பாடப்பிரதியே இக்கட்டுரைக்கு அடிப்படையாக அமைந்துள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இக்கல்வெட்டிலே அரசனின் பெயரைத் தெளிவாக வாசித்து அறிய முடிந்தாலும் ஆட்சிக் காலம் குறிப்பிடப்பட்டுள்ள பகுதி பழுதடைந்துவிட்டமையால் அவனது எத்தனையாம் ஆட்சியாண்டில் இக்கல்வெட்டுப் பொறிக்கப்பட்டது என உறுதியாகக் கூற முடியாதுள்ளது. இருந்தும், தென்னிந்தியாவில் இவனது ஆட்சிபற்றிக் கிடைக்கும் தகவல்களைக்கொண்டு எந்த ஆண்டுக்குரியதாக இச்சாசனம் இருக்கமுடியும் எனக் காண முயற்சிக்கலாம்.

சோழப் பேரரசில் வீரராஜேந்திரனுடைய ஆட்சிக்காலம் கி. பி. 1063 ஆம் ஆண்டிலிருந்து கி. பி. 1070 ஆம் ஆண்டுவரை நீடித்ததாக அறிய முடிகின்றது. அதே நேரத்தில் அதிராஜேந்திரனுக்குப் பின்னர் பதவி பெற்றுக் கொண்ட முதலாம் குலோத்துங்க சோழன் கி. பி. 1070 இல் ஆட்சி பெற்றமைக்குச் சான்றுண்டு இதனால் அதிராஜேந்திர சோழன் தனது தந்தை வீரராஜேந்திரனின் ஆட்சிமுடிவிற்கும் முதலாம் குலோத்துங்க சோழனின் ஆட்சியாரம்பத்திற்குமிடையில் கி. பி. 1070 இல் குறுகியகால ஆட்சியை நடத்தியிருக்கலாம் எனக் கொள்ளவேண்டும். அதேவேளை அதிராஜேந்திரனின் ஆட்சிக் காலத்துக்குரியதாகக் கிடைக்கும் அதிபிந்திய கல்வெட்டு அவனது மூன்றும் ஆட்சியாண்டைச் சேர்ந்ததாகும்.14 இவனது முதலாம் இரண்டாம் ஆட்சியாண்டைச் சேர்ந்த சாசனங்கள் இதுகாறும் கிடைக்காமையால் இவனது தந்தை வீரராஜேந்திரன் தனது ஆட்சியின் இறுதிப்பகுதியிலே தனக்குப் பின் ஆட்சியதிகாரத்திற்குரியவனாகத் தனது மகனுக்கு இளவரசுப் பட்டத்தை அளித்திருந்தான் என்றும் இச்சம்பவம் கி. பி. 1068 இல் நடைபெற்றிருக்க வேண்டும் என்றும் கொள்ளலாம். தந்தையின் இறப்பிற்குப் பின்னர் சுதந்திர ஆட்சி பெற்றுக் கொண்ட அதிராஜேந்திரன் தனது ஆட்சியாண்டைத்தான் இளவரசுப் பட்டம் பெற்றுக் கொண்ட 1068 இல் இருந்து கணக்கிட்டுள்ளான் என்ற கருத்து ஏற்றுக் கொள்ளப் படத்தக்கதாயின் அவனாட்சிக்குரிய பொலன்னறுவை வானவன் மாதேவி ஈஸ்வரக் கல்வெட்டு அவனது மூன்றும் ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்டது எனக் கொள்ளல் பொருத்தமானதாகும்.

இக்கல் வெட்டுப் பொறிக்கப்பட்டதன் நோக்கம், வானவன்மாதேவி ஈஸ்ரத்தைச் சேர்ந்த நிர்வாக அதிகாரிகள் சிலரும் அங்கு கடமையாற்றிய பணியாட்கள் சிலரும் பன்மாஹேஸ்வரர் என்ற கோயில் அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்ட ஐந்து காசின் உதவியுடன் தலைமுறை தலை முறையாக சந்திரன் சூரியன் உள்ளவரை அக்கோயிலில் என்றும் நின்றெரியும் விளக்கு எரிப்பதற்கு ஒப்பந்தம் ஒன்று செய்து கொண்டமையைப் பதிவு செய்வதற்காகவாகும். இந்நோக்கத்திற்காகப் பொறிக்கப்பட்ட இச்கல்வெட்டிலிருந்து சில வரலாற்றுத் தகவல்களைப் பெற்றுக் கொள்ளமுடிகின்றது.

## கல்வெட்டின் வரலாற்று முக்கியத்துவம்

அதிராஜேந்திரனுக்குப் பின்னர் சோழப்பேரரசில் பதவிபெற்று ஆட்சி நடத்திய முதலாம் குலோத்துங்க சோழன் (கி. பி. 1070 – 1120) தேவையற்ற போர்களை விடுத்துத் தன் குடிகளின் நலத்திற் போதிய அக்கறை காட்டவேண்டும் என்ற கொள்கையைக் கொண்டிருந்தமையால் சோழப்பேரரசு முன்னர் கொண்டிருந்த அரசியல் ஆதிக்கத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவனுட்சியிற் கொண்டிருக்கவில்லை. வேங்கி, கங்கைபாடி, இலங்கை போன்ற பகுதிகள் சோழ ஆதிக்கத்தினின்றும் விடுதலை பெற்றன. அதிராஜேந்திரனின் மூன்றும் ஆட்சியாண்டுக்குரியதான வானவன்மாதேவி ஈஸ்வரக் கல்வெட்டு இலங்கையில் சோழப்பேரரசின் தலைநகராக விளங்கிய பொலன்னறுவையிற் கிடைத்துள்ளமையால், முதலாம் ராஜராஜன் ஆட்சிக் காலத்திற் கைப்பற்றப் பட்டதிலிருந்து அதிராஜேந்திரனின் ஆட்சிமுடிவையும் முதலாம் குலோத்துங்க சோழனின் ஆட்சியாரம்பத்தையும் சேர்ந்த கி. பி. 1070 ஆம் ஆண்டுவரை சோழப்பேரரசின் இறுக்கமான நேரடி ஆதிக்கத்தின் கீழ் இலங்கை இருந்து வந்தது எனக் கூற இக்கல்வெட்டு உதவுவதாகும்.

சோழப்பேரரசுக் காலத்தில் இறுக்கமாயமைந்த மத்தியமயமாக்கப்பட்ட ஆட்சி முறையே காணப்பட்டது: ராஜராஜன் காலத்து ஆட்சி பற்றிக் கவனித்த நீலகண்ட சாஸ்திரி அவர்கள் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

> "ராஜராஜனின் ஆட்சிபற்றி நாம் அறிவதெல்லாம் அவனின் சக்திவாய்ந்த ஆளுமையையும் அவனின் புத்தியின் இறுக்கமான பிடியையும் உறுதிப்படுத்துகின்றன. அவனின் புத்தியின் இறுக்கமான பிடியிலிருந்து எதுவும் தப்பிச் செல்லவில்லை".15

இவ்வாறு மத்திய மயமாக்கப்பட்ட ஆட்சிமுறை சோழராட்சியில் தமிழ்நாட்டில் காணப்பட்டாலும், பேரரசின் நிர்வாகத்தை இலகுபடுத்துவதற்காக மண்டலம், கோட்டம், வளநாடு, கிராமம், சுற்றம் போன்ற பல்வேறு நிர்வாகப்பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு அவற்றுக்கான அதிகாரிகளும் நியமிக்கப்பட்டிருந்தனர். இத்தகைய நிர்வாகப் பிரிவுமுறை சோழர்காலத்துக்கு முந்திய பல்லவர் காலத்திலேயே தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தப் பட்டிருந்தாலும் பேரரசில் ஏற்பட்ட மாற்றத்திற்கேற்ப, இந்நிர்வாகமுறையும் சோழர் காலத்திற் பெருவளர்ச்சி கண்டது: தமிழ் நாட்டில் மாத்திரமன்றிக் கடல்கடந்த இலங்கையைத் தம் நேரடியாதிக்கத்தின்கீழ் கொண்டுவந்தபோது அங்கும் இத்தகைய நிர்வாகப்பிரிவு முறைகளைச் சோழர் ஏற்படுத்தினர் என்பதற்கு இக் கல்வெட்டில் வருகின்ற சோழமண்டலம், கோட்டம், விற்பேட்டு நாடு, மங்கலப்பாடி, சோழவளநாடு போன்ற குறிப்புக்கள் சான்றுகளுள்ளன. இலங்கையில் சோழர் ஆட்சியின் ஆரம்பத்துக்குச் சேர்ந்தனவாக ஏற்கனவே அறியப்பட்ட கல்வெட்டுக்களிலிருந்து இந்நிர்வாகப் பிரிவுகள் பற்றியறிய முடிந்தாலும், இலங்கையில் சோழராட்சியின் மிக இறுதிக்காலம் வரை இப்பிரிவுகள் நிலைபெற்று விளங்கின எனக்கொள்ள அதிராஜேந்திரன் கால இக் கல்வெட்டுப் பெரிதும் உதவுகின்றது.

மேற்கண்ட வரலாற்றுத் தகவல்களைவிட சமகாலத்தில் இலங்கையிற் காணப்பட்ட இந்துக் கோயில்களின் நிர்வாகத்திற்கு உடனடிப் பொறுப்புடையவர்களாக யார் காணப்பட்டார்கள் என அறிந்து கொள்வதற்கு இக் கல்வெட்டில் வருகின்ற கோயில் அதிகாரிகள் சிலர் பற்றிய குறிப்புக்கள் உதவியாகவுள்ளன இதுவரை இலங்கையிற் கண்டு பிடிக்கப்பட்ட எக்காலத்துக்கும் உரிய பிறகல்வெட்டுக்களிலிருந்து இக்குறிப்புக்களைப் பெற முடியாதுள்ளமையால் அதிராஜேந்திரனின் வானவன்மாதேவி ஈஸ்வரக் கல்வெட்டு மிகமுக்கியத்துவம் வாய்ந்த கல்வெட்டாக விளங்குகின்றது, இக்கோயில் நிர்வாகம், அதற்குப் பொறுப்பாகவிருந்த அதிகாரிகள், அவர்களின்நிலை ஆகியவை பற்றித் தெளிவாக அறிந்து கொள்வதற்குச் சமகாலத்தில் தமிழ் நாட்டில் ஏற்பட்ட இத்துறை அபிவிருத்திகள் பற்றிய அறிவு அவசியமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோயில் நிர்வாகம் விரிவடைந்தமை

சோழப் பெருமன்னர் காலத் தமிழ்நாட்டு இந்துக்கோயில்கள் அவற்றின் அமைப்பிலே முற்பட்ட பல்லவர்காலக் கோயில்களைவிட மாறுபட்டுப் பெருங்கோயில்களாக விளங்கியமை மாத்திரமன்றி அவை மேற்கொண்ட பலவகையான தொழிற்பாடுகளைப் பொறுத்தும் முற்பட்ட காலக் கோயில்களிலிருந்து வேறுபட்டு விளங்கின. பெருமளவு தொழிற்பாடுகளைச் சோழர்காலக் கோயில்கள் கொண்டிருந்தமைக்கு முக்கியமாக மூன்று காரணங்களைக் குறிப்பிடலாம்.

(1) பல்லவர் காலம் தமிழ்நாட்டு வரலாற்றில் கோயில்கட்டும் முயற்சியைப் பொறுத்துத் தொடக்க காலமாக இருந்தது. ஒப்பீட்டு அடிப்படையில் பல்லவர் காலத்தின் பெரும்பகுதியிற் கட்டப்பட்ட கோயில்கள் அளவிற் சிறிய கோயில்களாக இருந்தபோது அவற்றின் உலகியற்றொழிற்பாடுகளும் குறைவாகவேயிருந்தன. ஆனால், பல்லவர் காலக் கலைமரபின் வளர்ச்சியாகப் பெருங்கோயில்கள் சோழர் காலத்தில் கட்டப்பட்டபோது அவற்றின் தொழிற்பாடுகளும் அதிகரிக்கலாயின.

(2) பல்லவர் காலத்துச் சமய மறுமலர்ச்சி இயக்கம், பெரும்பாலும் அக்காலப் பகுதி முழுவதும் நடைபெற்றுக்கொண்டிருந்தமையால் அவ்வியக்கத்தின் தாக்கம் அக்காலப்பகுதியில் பெரிதும் உணரப்படவில்லை. பக்தியியக்கம் கொடுத்த சமயவுணர்வில் கோயில்கள் பல பல்லவர் காலத்திலே தோற்றம் பெற முடிந்தாலும் அக்கோயில்கள் மக்கள் வாழ்வோடு தம்மைப் பெரிதும் தொடர்பு படுத்திக்கொள்ள முடியவில்லை அதேநேரத்தில் இப்பக்தியியக்கத்தின் பெருவிளைவு பல்லவர்காலத்தையடுத்து வந்த சோழர்காலத்தில் பெருமளவில் ஏற்பட்டபோது அரசு மக்கள் வாழ்க்கைமுறை கோயில் ஆகியவற்றுக் கிடையிலான தொடர்பு இதற்கு முற்பட்ட தமிழ்நாட்டில் என்றுமில்லாதளவில் இறுக்கமடைந்தது. இத்தகைய ஒரு நிலையும் சோழர் காலக் கோயில்கள் குறிப்பிடத்தக்களவிற் சமய, உலகியற் கடமைகளை மேற்கொள்ள இடமளிக்கலாயிற்று.

(3) ஏற்கனவே குறிப்பிட்டதுபோன்று சோழப்பேரரசர் வலிமையுள்ளோராக விளங்கி அவர்கள் பிறவிடத்து மன்னர்களைப்போரில் வென்று அவர்களின் பண்டாரங்களை (இறைச்சேரி) கவர்ந்தமை கடல் கடந்த பகுதிகளுடன் வர்த்தகத் தொடர்புகளைக் கொண்டமை, இப்போதய அமைதியான சூழ்நிலையில் வணிகக் குழுவினர் உள்நாட்டிலும் வெளியிடங்களிலும் வர்த்தக முயற்சிகளை மேற்கொண்டமை ஆகிய காரணிகளால் பேரரசில் பெரும் பொருளாதாரச் செழிப்பு ஏற்படலாயிற்று இப்போது பக்தியியக்கத்தின் பெருவிளைவினால் பெரும் முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்களாக விளங்கிய கோயில்கள் சமூகத்தின் பல்வேறுமட்டங்களைச் சேர்ந்தோரிடமிருந்தும் அதிகளவிலான வருமானத்தைப் பெற்றுக் கொண்டன கோயிற்தானங்களைக் குறிப்பிடுகின்ற சாசனங்களின் எண்ணிக்கை கொண்டும் அவற்றிற் கூறப்பட்டுள்ள தகவல்கள் கொண்டும் இக்கோயில்கள் பெற்ற அதிகளவான வருமானம்பற்றி அறியலாம். இவ்வாறு, இக்காலக்கோயில்கள் பெற்றிருந்த பெருவருமானமும் அவை அதிகளவிலான சமயச் சார்பற்ற கடமைகளையும் மேற்கொள்ள முடிந்தமைக்குக் காரணமெனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பெற்ற பெருவருமானத்தின் உதவிகொண்டு தமது வழமையான சமயக்கடமைகளோடு வேறுபல சமுதாயப்பணிகளையும் இக்கால இந்துக்கோயில்கள் மேற்கொண்டன. நாட்டின் நலன்கருதிப் பொருளியற் கடமைகளைச் செய்தமையோடு பண்பாட்டுவளர்ச்சிக்கும் குறிப்பிடத்தக்க சேவையினை அவை ஆற்றின. என்பதற்குச் சான்றுகள் கிடைக்கின்றன. இந்நிறுவனங்களின் தொழிற்பாடுகள் அதிகரித்தபோது அவற்றைச் செய்வதற்குப் பெருமளவிலான பணியாட்களும் நியமிக்கப்பட்டனர். உதாரணமாகத் தஞ்சாவூர் ராஜராஜேஸ்வரக்கோயிலில் அறுநூற்றுக்கு மேற்பட்ட பணியாளர் தொழில் புரிந்தமைக்குச் சாசனச் சான்றுகள் கிடைக்கின்றன,

அமைப்பளவிலே பெருத்து மக்கள் வாழ்வோடு தம்மைப் பெரிதும் இணைத்துக் கொண்டநிலையில் தமக்கே இயல்பாக அமைந்த சமயக் கடமைகளோடு உலகியற்கடமைகளையும் மேற்கொண்டு அதிகளவிலான பணியாளர்களையும் இக்காலக் கோயில் நிறுவனம் கொண்டிருந்தபோது இந்நிறுவனத்தின் நிர்வாக அமைப்பு முன்னைய காலங்களைவிடப் பெருத்துச் சிக்கலடையலாயிற்று இத்தகைய ஒரு சிக்கல்மிக்க வளர்ச்சிபெற்ற அமைப்பினைக் கவனிப்பதற்குப் பல நிர்வாக உத்தியோகத்தர்கள் கோயில் நிறுவனத்தில் நியமனம் பெற்றிருந்தனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கோர்;-

(1) பன்மாஹேஸ்வரர்
(2) தேவகன்மிகள்,
(3) ஸ்ரீகாரியம்செய்வோர்,
(4) பதிபாதமூலத்தோர்,
(5) மூலப்பருஷையார் (மூலப்பருடையார்)
(6) வாரியர், என்போராவர்,

இலங்கையிலே நேரடியான சோழர் ஆட்சி ஏற்படுத்தப்பட்டுக் கோயில் நிறுவனங்கள் அமைக்கப்பட்டபோது, தமிழ்நாட்டுக்கோயில் நிர்வாக அமைப்பு முறையும் இங்கு அறிமுகப்படுத்தப்பட்டது எனக்கொள்ள வானவன்மாதேவி ஈஸ்வரக்கோயில் அதிராஜேந்திரனின் கல்வெட்டில் வரும் பன்மாஹேஸ்வரர் தேவகன்மிகள், பதிபாதமூலத்தார் பற்றிய குறிப்புக்கள் உதவுகின்றன. இக்கல்வெட்டிலிருந்து இவர்களின் அதிகாரம், நிலை, கடமைகள் ஆகியவை பற்றியறிய முடியாவிட்டாலும் தென்னிந்திய சாசனங்களின் உதவிகொண்டு இவற்றை விளங்கமுடியும்,

## பன்மாஹேஸ்வரர்

பன்மாஹேஸ்வரர் என்பதிலுள்ள 'பன்' என்பது 'பல' என்ற பொருளில் வழங்கப்பட்டதென்றும் இதனாற்பல மஹேஸ்வரர் ஒன்றுசேர்ந்து கோயில் நிறுவனத்துக்குக் கொடுக்கப்பட்ட தானங்களைப் பாதுகாக்கும் கடமையினைக் கொண்டிருந்தனர் எனவும் கொள்ளலாம். சில இடங்களில் 'மஹேஸ்வரக் கண்காணி செய்வார்' எனக் குறிப்பிடப்படுகின்றது.[17] இதற்கு, மஹேஸ்வரரை மேற்பார்வை செய்வோர் எனப் பொருள் கொண்டால் மஹேஸ்வரருக்கு மேலேயும் மேற்பார்வையுத்தியோகத்தர் இருந்தனர் எனக் கொள்ள வேண்டும். அப்படியானால் அவ்வாறு மேற்பார்வை செய்தவர்கள் யார்? அவர்கள் எத்தகைய அதிகாரத்தைக் கொண்டிருந்தனர் என்ற கேள்விகள் எழுகின்றன. இவற்றை விளங்குவதற்குத் தகவல்கள் கிடைக்கவில்லை. சைவக்கோயில்களுக்குக் கொடுக்கப்பட்ட தானங்களைப் பதிவு செய்கின்ற சாசனங்கள் பலவற்றின் இறுதியில் 'இது பன்மாஹேஸ்வரர் ரக்ஷை' எனக் குறிப்பிடப்படுவதால், கொடுக்கப்பட்ட தானங்களைப் பாதுகாப்பதனை இவர்கள் தமது கடமையாகக் கொண்டிருக்கலாம். இருந்தும் தானங்களைப்பாதுகாக்கும் கடமைஎப்போதும் மஹேஸ்வரரிடம் அளிக்கப்பட்டிருந்தது எனக் கூறமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இது ஸ்ரீ கிரணத்தான் ரக்ஷை" 18
"இரவும் பகலும் எரிப்பதாக வைத்த பொன்
முப்பதின் கழஞ்சு மூலப்பருடையார் ரக்ஷை" 19
"பதிபாத மூலத்தாரும் பன்மாஹேஸ்வரரும் ரக்ஷை" 20
"இந்தத் தன்மம் மஹா சபையோம் ரக்ஷை" 21
"ஊட்டுவோமானோம் மூன்று கணப் பெருமக்க
ளோம் பெருமக்கள் ரக்ஷை" 22

போன்ற சாசனக் குறிப்புக்களைக் கவனிக்கும்போது சைவக் கோயில் தானங்களைப் பாதுகாக்கும் கடமை மஹேஸ்வரருக்கே சிறப்பாக அமைந்தது எனக் கொள்வதற்கில்லை.

சமூகத்தின் பல்வேறு பிரிவினரும் கோயில் நிறுவனத்திற்கு அளித்த தானங்களைப் பல சந்தர்ப்பங்களிற் பாதுகாத்துக்கொண்ட மஹேஸ்வரர் தானங்களின் பாதுகாப்புச் சம்பந்தமான அதிகாரத்தையும் சில வேளைகளிற் பெற்றிருந்தனர் அதாவது தானங்களை பொறுப்பேற்றவர்கள் அவற்றை நடைமுறைப்படுத்தத் தவறுகின்ற சந்தர்ப்பங்களில் அவர்களிடமிருந்து குற்றப் பணம் அறவிடும் அதிகாரத்தை மஹேஸ்வரர் பெற்றிருந்தனர். 23 இருந்தும் இவ்வதிகாரம் மஹேஸ்வரருக்கே உரியதாக இருந்தது எனக் கொள்வது கஷ்டமாகும். உன்னூர்ச்சபை கோயிற்தானம் சம்பந்தமாகத்தான் ஏற்றுக்கொண்ட பொறுப்பினைச் செய்யத் தவறியபோது தர்மாசனம் என்ற அரச நீதிக்கோட்டுக்குக் குற்றப்பணம் செலுத்தியது என அறியலாம். 24 அத்துடன் வேறு சந்தர்ப்பங்களில், கோயிலுக்குக் கொடுக்கப்பட்ட தானங்கள் சரியாக நடைமுறைப்படுத்தப்படாதபோது மஹேஸ்வரர் கோயிலின் ஏனைய அதிகாரிகளுடன் சேர்ந்தே அரசுக்கு முறையீடு செய்தனர்.

"இப்பரிசு ஒத்து இச் சங்கப்பாடி கிழான் காணியைப் புதுப்பளக்கத்துச்
சபையார் பற்றியுண்டு தேவர்க்கு யிறையிறு தொழிகிறார்களென்று தேவ
கன்மிகளும் உண்ணாழிகை யுடையாரும் பன்மாயேஸ்வரரும் வந்து அணி
யாயமிடுகிறார்களென்று நமக்குச் சொல்ல" 25

சில சந்தர்ப்பங்களில் மஹேஸ்வரர் இல்லாமலேயே கோயிலின் பிற அதிகாரிகள், தானங்கள் நிறைவேற்றப்படாத போது அது குறித்து நடவடிக்கைகள் எடுத்துள்ளனர் என்பதற்குச் சான்றுகள் உண்டு, 26 இவற்றைக் கவனிக்கும்போது மஹேஸ்வரர் எனப்பட்ட கோயில் அதிகாரிகள் தமக்கே யுரியதான சிறப்பான கடமைகளைப் பெற்றிருந்தார்கள் என்றோ வரையறுக்கப்பட்ட சிறப்பான அதிகாரத்தைப் பெற்றிருந்தார்கள் என்றோ கூற முடியாது 26

## தேவகன்மிகள்

கோயில் நிர்வாகத்துடன் தொடர்புடையவர்களாக அடிக்கடி சாசனங்களில் இடம்பெறுகின்ற இன்னோர் பிரிவினர் தேவகன்மிகள் ஆவர். தேவகன்மி என்பதற்குக் கடவுளுக்குச் சேவை செய்வோன் (கோயில் தொழிலாளி) எனப்பொருள் கொள்ளலாம் சில சாசனங்களில் ஆழ்வார் கன்மிகள் எனக் குறிப்பிடப்படுவதும் தேவகன்மிகளேயாம்.27

கோயில் தொழிலாளிகள் என்பது, கோயில் நிர்வாகத்தின் எல்லா நிலைகளிலும் வேலைசெய்வோரைக் குறிக்கும், தேவகன்மிகள் என்ற சொல்லைக் கவனித்த பலரும் கோயிற்பணியாளர் என்றே அதனை விளக்கியுள்ளனர். 27a இருந்தும் இச் சொல்லு, கோயில் நிர்வாகத்தின் எம்மட்டத்திலுள்ள பணியாளர்களைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது என்பது பற்றி அவர்கள் எடுத்துக்காட்டவில்லை, சாசனங்களில் இவர்களைப் பற்றி வருகின்ற குறிப்புகளைக்கொண்டு நோக்கும்போது 'தேவகன்மிகள்' என்போர் முக்கியத்துவம் பெற்ற நிலையில் இருந்திருக்கிறார்கள் எனத் தோன்றுகின்றது. கோயிலிற் சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டபோது அல்லது சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டபோது இத்தேவ கன்மிகளும் பங்குகொண்டிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இக்கோயிலிலே தன்மஞ்செய்யப் பெறுவாளுக
பணித்துக் குடுத்தோம் தேவகன்மிகளோம்'' 28

இது மாத்திரமன்றி முக்கியமான சந்தர்ப்பங்களில் இத்தேவகன்மிகள் எனப்பட்டவர், ஏனைய கோயில் அதிகாரிகளுடன் ஆலோசனைக்கு அழைக்கப்பட்டனர். முதலாம் ராஜராஜனின் ஆறும் ஆட்சியாண்டுக்குரிய தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்து கிடைக்கின்ற சாசனமொன்று, திருவிடை மருதுடையார் கோயில் வழிபாடு செய்வதற்காகப் பஞ்சவன் மஹாதேவியார் அக்கோயிலுக்குச் சென்றபோது அவரை வரவேற்கக் காத்திருந்தோர் பற்றிக் குறிப்பிடுகையில் தேவகன்மிகளையும் குறிப்பிடப்பட்டுள்ளது.

''கோவிராஜகேசரி பன்மர்க்குயாண்டு ஆறுவது
திருவிடை மருதுடையார் ஸ்ரீ காரியம் ஆராய்கின்ற
சிற்றுயிலுடையாரும் தேவகன்மிகளும் சபையும்
திருவிடைமருதில் நகரமும் இருந்து நம்பிராட்டியார்
ஸ்ரீ பஞ்சவன் மாதேவியார் ஆழ்வாரைத் திருவடித்
தொழ வந்தருளினர்'' 29

இதிலிருந்து தேவகன்மிகள் எந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் எனத் திட்டவட்டமாகக் கூற முடியாவிட்டாலும் அவர்கள் ஏனைய வகுப்பினரிலிருந்து வேறுபடுத்திக் கூறப்படுவதால், தேவகன்மிகள் எனப்பட்ட புறம்பான வகுப்பினர் இருந்திருக்கிறார்கள் எனத் தெரிகிறது. சாசனங்களில் இவர்கள் கூறப்படுகின்ற நிலையினைக்கொண்டு இவர்கள் பெற்றிருந்த செல்வாக்கினை அறிந்துகொள்ளலாமா என்பதும் நோக்கற்பாலது. அதாவது நாம் மேலே கவனித்த சாசனக்குறிப்பில் தேவகன்மிகள் இரண்டாவது ஸ்தானத்தைப் பெற்றுள்ளனர். அந்தவிதத்தில், இவர்கள் கோயில் நிர்வாகத்தில் இரண்டாவதுபடியில் இருந்திருப்பார்களோ என எண்ணத்தோன்றும். ஆனல், சில சாசனங்களில் அவர்களுக்கு முதலிடம் அளிக்கப்பட்டிருத்தலைக் காணலாம்.

''திருவிடைமருதுடையார் தேவகன்மிகளும்
திரைமூர் சபையாரும் திருவிடைமருதில் நகரத்தாரும்
ஸ்ரீகாரியம் ஆராய்கின்ற.....ம் உடையார்
கோயிலில் பெரிய காவணத்தே இருந்தும்'' 30

சாசனங்களுக்குச் சாசனம் இவர்கள் வெவ்வேறு நிலைகளிற் கூறப்பட்டிருத்தலை இதிலிருந்து காணலாம். எனவே இத்தகவல்களைக்கொண்டு இவர்கள் பெற்றிருந்த அதிகாரநிலையினை வரையறுத்துக் கூறுதல் கடினமாகும். மேலும் மேற்கண்ட சாசனங்கள் எல்லாவற்றிலும் இத்தேவகன்மிகள் எனப்பட்டோரின் வகுப்புப் புறம்பானதாகக் கூறப்பட்டிருந்தாலும் அது எப்போதும் ஒரு நிலையான வகுப்பாக இருந்தது எனக் கூறமுடியாது ஏனெனிற் சிலவேளைகளில் கோயில் நிர்வாகத்தின் எல்லா நிலைகளில் இருந்தவர்களையும் இச்சொல் குறித்து நின்றது. இது சம்பந்தமாகத் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள உத்தம சோழனின் ஆறும் ஆட்சியாண்டுக்குரிய சாசனம் தரும் தகவல் நோக்கற்பாலது

''கோப்பரகேசரி பன்மர்க்கு யாண்டு ஆறுவது
திருவிடை மருதூருடையார் தேவகன்மிகளான
திரைமூர் சபையாரும் திருவிடைமருதில் நகரத்தாரும்
அதிகாரிகள் மதுராந்தக மூவேந்த வேளார்க்காயத்
திருவிடை மருதுடையார் ஸ்ரீகாரியம் ஆராய்கின்ற
இங்கணுட்டுப் பல்லவரையரும் நம்பிராட்டியார்
சோழமஹாதேவியர்க்காயத் திருவிடைமருதூருடையார்க்குக்
கங்காணிக் கணக்கு எழுதுகின்ற திருநாவுக்கரையன்
சிவனும் இவ்வனைவோம்'' 31



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சாசனத்தகவலிலிருந்து சபையார், நகரத்தார், கோயில் நிர்வாகம் செய்கின்ற உத்தியோகத்தர், கண்காணிக் கணக்கெழுதும் கணக்கன் என்போர் எல்லோரும் தேவகன்மிகளாக அழைக்கப்பட்டுள்ளமையை நோக்கலாம். இதுவரை நாம் மேலே தேவகன்மிகள் தொடர்பாகக் கவனித்த சாசனங்களுள் இறுதிச் சாசனம் தவிர்ந்த ஏனைய சாசனங்களில் சபையார், நகரத்தார், ஸ்ரீகாரியஞ் செய்வோர் ஆகியோர் 'தேவகன்மிகள்' எனப்பட்டோரிலிருந்து வேறுபடுத்தப்படடும் இறுதிச்சாசனத்தில் சபையார், நகரத்தார், ஸ்ரீகாரியஞ் செய்வோர் கணக்கன் ஆகியோர் 'தேவகன்மிகள்' என்ற வகுப்பில் உட்படுத்தப்பட்டும் இருப்பதனை நோக்கும்போது, தேவகன்மிகள் என்பது கோயில் நிர்வாக அமைப்பில் ஒரு நிரந்தரமான பதவிப் பெயரைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட சொல் எனக்கூறமுடியாதுள்ளது. இக்கருத்தினை உறுதிப்படுத்த இன்னொரு சான்றையும் உதாரணமாகக் காட்டலாம். கோயிலுடன் தொடர்புடையவர்களாக இருந்த இன்னொரு பிரிவினரான 'பட்டுடைப் பஞ்சாசாரியர்' எனப்பட்டோரும் தேவகன்மிகள் என அழைக்கப்பட்டிருத்தல் அவதானிக்கத்தக்கது.

> "தண்டேஸ்வரப் பெருமான் அருளால் பதிபாத
> மூலப் பட்டுடைப் பஞ்சாரியத் தேவகன்மிகளோடும்
> சிற்றும்பல் ஊரோடும் இத்தேவர் தேவதனம் .....
> வெந்த வேளானுக்கு விற்றுக் குடுத்தோம்." 32

இதுவரை தேவகன்மிகள்பற்றி ஆராய்ந்தவற்றிலிருந்து

(1) இவர்கள் சாசனங்களிலே தனிப்பட்ட பிரிவினர்களாகக் கூறப்பட்டுள்ளனர்.

(2) பிற அதிகாரிகளுடன் சேர்த்துக் கூறப்பட்டுள்ளனர்.

(3) வெவ்வேறு நிலைகளிற் கூறப்பட்டுள்ளனர்.

(4) சபையார், நகரத்தார்' ஸ்ரீகாரியஞ்செய்வார் எனப்பட்டோரிலிருந்தும் வேறுபடுத்திக் கூறப்பட்டுள்ளனர்.

(5) இவர்களில், சபையார், நகரத்தார், ஸ்ரீகாரியஞ்செய்வார், கோயிற்கணக்கர் ஆகியோர் உள்ளடக்கப்டுள்ளனர்.

(6) பட்டுடைப் பஞ்சாசாரியார் எனவும் இவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

எனவே தேவகன்மிகள் என்ற பெயர், கோயில் நிர்வாகத்தில் ஒரு திட்டவட்டமான பதவிப் பெயரைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படவில்லை எனக்கருதவேண்டும். கோயில் நிர்வாகத்தில் எல்லா நிலைகளிலும் இருந்த அதிகாரிகளைக் குறிப்பதற்கே இச்சொல் பயன்படுத்தப்பட்டதெனலாம். இங்கு நாம் எதிர்நோக்கும் பிரச்சினை, சாசனங்களில் கோயிலின் ஏனைய அதிகாரிகளிலிருந்தும் இத்தேவகன்மிகள் வேறுபடுத்தப்பட்டுக் குறிப்பிடுகையில், தேவகன்மிகள் என்பது எப்பிரிவினரைக் குறித்துநின்றது என்பதாகும். ஆயினும், இதனை விளங்கிக்கொள்ளத் தகவல்கள் கிடைக்காமையால் இப்பிரச்சினைக்கு முடிவுகாண்பது கஷ்டமாகும்.

சாசனங்களில் தேவகன்மிகள் பற்றிக்கிடைக்கின்ற குறிப்புக்களைக் கொண்டு அவர்கள் கொண்டிருந்த கடமைகளைப் பின்வருமாறு கூறலாம்:

(1) பிறரால் கோயில் நிறுவனங்களுக்குக் கொடுக்கப்பட்ட தானங்களைப் பெற்றுப் பாதுகாத்துள்ளார்கள்.

(2) கோயிலின் பிற உத்தியோகத்தருடன் சேர்ந்து சிலநடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.

(3) சிலவேளைகளில் நிலங்களிலிருந்து கிடைக்கவிருந்த சொத்துக்களைப் பாதுகாத்துஅவற்றை மேற்பார்வை செய்திருக்கிறார்கள்.32a



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தும் இக்கடமைகள் தேவகன்மிகள் எனப்பட்டோருக்குச் சிறப்பாக அமைந்த கடமைகள் எனக் கூறுவதற்கில்லை. கடமைகளைப் பிறநிர்வாகிகளும் மேற்கொண்டிருந்தனர். ஆகவே, இத்தேவகன்மிகள் என்போர் கோயில் நிர்வாகத்தில் வரையறுக்கப்பட்ட ஒரு பதவியை வகித்துவந்தவர்கள் என்றோ வரையறுக்கப்பட்ட அதிகாரம், கடமைகள் ஆகியவற்றைக் கொண்டிருந்தார்கள் என்றோ கூறமுடியாது.

## பதிபாத மூலத்தோர்

இக்காலக் கோயில்நிர்வாகத்துடன் தொடர்புடையவர்களாக இருந்த இன்னோர் பிரிவினர், 'பதிபாதமூலத்தோர்'. சாசனங்களில் இவர்கள் பற்றி இடம்பெறுகின்ற சில குறிப்புக்களைக் கொண்டு, கோயிலின் பிறநிர்வாகப் பதவிகளை வகித்தோர் மேற்கொண்டது போன்று பதிபாதமூலத்தோரும் கோயிலுக்களிக்கப்பட்ட தானங்களைப் பாதுகாத்தனர் என அறியலாம்.

> ''இத்தளி அட்டுவோமானோம் பதிபாத மூலத்தோம்''33
> ''எரிப்பிடபோமானோம் இவ்வூர் பதிபாதமூலத்தோம்''34

சில வேளைகளில் சபையார், ஊரார், நகரத்தார் ஆகியோருடன் சேர்ந்து கோயிற் சருமத்தைச் செய்தனர்.

> ''பிரஹ்மாதிராயர் எமநாயகத்துத் திரைமூர்
> சபையாரும் ஊராரும் திருவிடைமருதில்
> நகரத்தாரும் பதிபாத மூலத்தாரும் இருந்து
> நந்தாவனம் திருத்தி இறைப்பளர்க்கு......''35

பதிபாதமூலம் என்ற பதவியின் பொருளை விளங்கிக்கொள்வதற்குத் தெளிவான ஆதாரங்கள் கிடைக்கவில்லை சில சாசனங்களில் இவர்கள், பதியாத மூலப்பட்டுடைப் பஞ்சாசாரியார் என அழைக்கப்பட்டுள்ளனர்.36 சிலவேளைகளில், பதியாத மூலப்பட்டுடைப் பஞ்சாசாரியத் தேவகன்மிகள் என அழைக்கப்பட்டுள்ளனர்.37 பதிபாதமூலத்தோர், தேவகன்மிகள் எனப்பட்டவருள் அடக்கப்பட்டிருத்தலைக் காணலாம். ஆகவே, மூலஸ்தானத்துக் கடவுளுக்குப் பட்டுடை உடுத்துவிக்கும் தொழிலை மேற்கொண்ட கோயிற்பணியாளர் என இப்பதவிக்கு விளக்கம் கொடுக்கலாம். இதில் வரும் பஞ்சாசாரியர் என்ற சொல் ஐவரை குறித்திருக்கலாம். ஆயினும், இந்த ஐவரும் யாவர் என விளக்கிக் கொள்வது கஷ்டமாகும். சில சந்தர்ப்பங்களில் பதிபாதமூலத்தோர் தேவகன்மிகளிலிருந்து வேறுபடுத்திக் கூறப்பட்டுள்ளனர்.

> ''எரிப்பரமானோம் பதிபாதமூலத்தோமும்
> பட்டுடைத் தேவகன்மிகளோடும்''38

இன்னும் சில வேளைகளில், பதிபாதமூலத்தோர், தேவகன்மிகள், பட்டுடையோர் என்பவர்கள் வேறுபடுத்திக் கூறப்பட்டுள்ளமையை அவதானிக்கலாம்.

> ''தேவகன்மிகளோடும் பதிபாத மூலத்தோமும்
> பட்டுடையோமும் மற்றும் இத்தளியுங்குடையோம்
> எப்பேர்ப்பட்டோமும்... செய்து குடுத்தோம்...''39

பதிபாதமூலத்தோரிலிருந்து பட்டுடையோர் வேறுபடுத்திக் கூறப்படுவதால் பட்டுடையோர் வேறானவர் என்றும், இப்பட்டுடையோரே மூலஸ்தானத்துக் கடவுளுக்குப் பட்டுடை உடுத்துவிக்கும் தொழிலை மேற்கொண்டிருக்கலாம் என்றும் கொள்ளவேண்டும். அப்படியெனில் பதிபாதமூலத்தார் எனப்பட்டோர் யாவர் என்பது இன்னும் விளங்காததொன்றாகவேயிருக்கின்றது. ஆலத்தூர் என்ற இடத்திலிருந்து கிடைக்கின்ற சாசனம் ஒன்றுபற்றி ஆராய்ந்தபோது அதில் இடம்பெற்றுள்ள 'பாதமூலம்' என்ற சொல்லுக்குக் கிருஷ்ணன் அவர்கள் கொடுத்த விளக்கம் நோக்கற்பாலது:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> "பதி, பாதமூலம் ஆகிய இரு சொற்களும் நடுக்கோயிலில் வழிபட்டுநிற்கும் குருவையும் பணியாட்களையும் குறித்தன வாகும். இவர்கள் பதி எனப்படுகின்ற கடவுளுக்கும் பாதம் என படுகின்ற அவரின் திருவடிகளுக்கும் தம்மை அர்ப்பணித்தவர்களாவர். தமிழ்நாட்டுச் சாசனங்களில் குறிப்பாகச் சைவக்கோயில்களின் சுவர்களிற் பொறிக்கப்பட்ட சாசனங்களில் இந்தப்பதி, பாதமூலம் ஆகிய சொற்கள் வருகின்றன".40

கிருஷ்ணன் அவர்களின் மேற்படி கருத்து பதி, பாதம் என்ற இரு சொற்களுக்கும் கொடுக்கப்பட்ட விளக்கத்தையே அடிப்படையாகக் கொண்டது. ஆனால், பதிபாதமூலத்தோர் ஏனைய கோயில் அதிகாரிகள்போலக் கோயில் நிர்வாகத்திலும் பங்கெடுத்துள்ளமையை நோக்குகையில், 'நடுக்கோயிலில் வழிபட்டு நிற்கும் குருவையும் பணியாட்களையும்' குறித்ததாக அச்சொல்லுக்கு விளக்கம் கொடுப்பது பொருந்தவில்லை. பதிபாதமூலத்தில் 'மூலம்' என்பது மூலத்தானத்தைக் குறிப்பதாகக்கொண்டு, மூலஸ்தானத்துக் கடவுளுக்குப் பொறுப்பாக இருந்தவர்களையே 'பதிபாதமூலத்தோர்' குறிக்கின்றது எனலாம்.

இவர்கள், கோயில்களுக்குக் கொடுக்கப்பட்ட தானங்களைப் பாதுகாத்ததோடு கோயிலின் நிர்வாக விடயங்களிலும் பங்குகொண்டிருந்தனர். இதுசம்பந்தமாக முதலாம் பராந்தகனின் இருபதாம் ஆண்டுச் சாசனம் தரும் தகவலைக் காணலாம்.

> "தேவகன்மிகளும் பன்மாஹேஸ்வரரும் பதிபாத மூலத்தாரும் சபையோமுக்கு வேதமும் அர்ச்சனாவிதியும் வல்லனாய் போக்கியனாய் உள்ளானொரு பிராமணனைத்தேடி நாங்களே போனித்திடுவோம்......"41

மேலும், பாசுபதீஸ்வரர் கோயிலைச் சேர்ந்த சில சிவப்பிராமணர்களுக்குத் தண்டனை விதிக்கப்படவிருந்தபோது அரசன், அத்தண்டனைக்குத் தனது சம்மதத்தை அக்கோயிலைச் சேர்ந்திருந்த பதிபாத மூலப்பட்டுடைப் பஞ்சாசாரியர், தேவகன்மிகள் மஹேஸ்வரக் கண்காணி செய்வார், ஸ்ரீகாரியஞ்செய்வார் எனப்பட்ட கோயில் அதிகாரிகள் எல்லோருக்கும் அறிவித்திருந்தான். 42 இவ்வாறு பெறப்படுகின்ற தகவல்களை அவதானிக்கையில், பதிபாதமூலத்தார் எனப்பட்டோர் கோயில் நிர்வாகத்தில் முக்கிய பங்கு கொண்டிருந்தனர் என அறியலாம். இருந்தும் இவர்கள் வரையறுக்கப்பட்ட கடமைகளைக் கொண்டிருந்தனர் எனவோ எத்தகைய அதிகாரம் அளிக்கப்பட்டனர் என்றோ அறியத் தகவல்கள் கிடைக்கவில்லை.

இதுவரை மேலே கவனித்த பன்மாஹேஸ்வரர், தேவகன்மிகள், பதிபாதமூலப் பட்டுடைப் பஞ்சாசாரியார் போன்ற அதிகாரிகள், நாம் ஏற்கனவே கவனித்ததுபோல பொலன்னறுவையில் உள்ள வானவன்மாதேவி ஈஸ்வரக் கோயில் நிர்வாகத்திலும் அதிகாரம் பெற்றிருந்தார்கள். சமகாலத்தில் சோழப்பேரரசு இலங்கைமீது கொண்ட நேரடியான ஆதிக்கத்தின் விளைவாகவே தமிழ்நாட்டுக் கோயில்நிர்வாகமுறை இலங்கை இந்துக் கோயிலிலும் ஏற்படுத்தப்பட்டதானபடியால், தமிழ்நாட்டுக் கோயில் நிர்வாக அதிகாரிகள் பெற்றிருந்த நிலையினையே வானவன்மாதேவி ஈஸ்வரக்கோயில் நிர்வாகிகளும் பெற்றிருந்தனர் என்பதில் தவறில்லை. இக்காலத் தமிழ்நாட்டு இந்துக் கோயில்களினது நிர்வாக அமைப்பு நன்கு ஒழுங்குபடுத்தப்பட்டதாய் அமையவில்லை என்பதற்கு நாம் மேலே கவனித்ததுபோல, இக்கோயில் நிர்வாகிகள் கொண்டிருந்த நிலையும் சான்றாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருத்திய கல்வெட்டுப் பாடப்பிரதி

1. ஸ்வஸ்தி ஸ்ரீ திங்களேர் மலர்ந்து வெண்குடை மண்டல
மன்னுயிர் தோறும் இன்னருள் சுரந்து நிறைந்தி—
2. மூல் பரப்பி நிரப்ப முறையையில் செங்கோல் இசைதொறுஞ் செல்லத் தங்கள் குலமுத-
3. ற் பருதியின் வலிசேர் புவனிக்கும் ஒற்றை ஆழி உலாவ நற்றவத் திருமலர்ச் செல்வி-
4. யும் இருநிலப் பாவையும் கீர்த்தியும் கிள்ளையும் போர்தனிப் பூவையும் மதுவையிற்—
புணர்ந்து
5. பொதுமை துரந்து தன் உரிமைத் தேவியராக மரபினில் சுடர்ம— —
6. ணி மகுடஞ்சூடி நெடுநில மன்னவர் முறைமுறை தன்னடி வணங்க வீரமுந்தி—
7. யாகமும் ஆரமெனப் புனைந்து மார்புகழ் மனுவுடன் வளர்த்த கோப்—
8. பரகேசரி பந்மரான உடையார் ஸ்ரீ அதிராஜேந்தி—
9. ர தேவர்க்கு
10. யாண்டு (3) ஆவது ..... சோழ மண்டலத்து தக்.....
கோட்டத்து விற்ப்பெட்டு நாட்டு மங்கலப்பாடி வெ—
11. ள்ளாளன்..... ன் சிராளன் இ யானுன எத... கொண்ட சோழப் பல்லவரையந்—
12. ராஜராஜேந்திர..... சோழவளநாட்டு ...ட்டு
ஜனநாத மங்கலத்து உடையார் வானவன் மாதே—
13. வி ஈஸ்வரமுடையார்க்குத் திருநொந்தா வி(ள)க்கு ஒன்றும் இதுக்கு நிசதம் எண்—
14. ணெ உழக்காக வேண்டும் எண்ணைக்கு ..... சித்திரைத் திங்கள் முதல் பலி
15. .....எண்ணை கொண்டு திருநொந்தாவிளக்(கு) (எரிப்) பிக்கக் கடவார்களாக
இக் கோயிலில் பதிபாத மூலப்பட்டுடைப் பஞ்சாசாரியத் தேவர்கன்மி
16. (ஆரா)தனை பண்ணும் பிராமணன் ..... இக்லைநாயகப் பட்டனும் உவ
17. (ச்சனும்.......ணமன் கொணநான கங்கைகொண்ட ெ..... ஆசாரியன் அட்டவும்
அரயன் காவல் ..... ராஜாயிராஜ முதக்க கரை நாடா . ...
18. ழ் வானும் இக்கோயிற் பந்மாகேஸ்வரக் கண்காணி............ன் குடிதாங்கியான
சண்டேஸ்வரரா ..... சனும் .....டவந் திருவியான கங்கைகொண்ட சோழமாணி—
19. க்கமும் காமந்திருவியான கொதுகுலமாணிக்கமும் கூந்தன் இரா...... ராஜேந்திர
விடங்க மாணிக்கமும் கோவிந்தன் ஆடவ(ல்) லானுன நாற்பத் தெண்ணாயிர
மாணிக்கமும் தேவன் காமியான ராஜேந்திர சோழமாணி—
20. க்கமும் தேவன் உய்யவந்தானுன முடிகொண்ட சோழ மாணிக்கமும் இவ்வனைவரும்
இவர்களுக்குப் பின்பு இவர்கள் தலைமாறு திருவாராதனை பண்ணுவாரும் பரிய்
சாரகரும் பந்மாயேஸ்வரக் கண்—
21. காணி செய்வாரும் நாட்டவரும் தேவர் அடியாரும் சந்திராதித்த வல் திருநொந்தா
விளக்கு ஒன்று எரிக்க கடவார்களாக இசைந்து கைக்கொண்ட காசு அஞ்சுயிரு
22. சாணை நால் விரல் நீளத்து—
23. த் தராநிலை விளக்கு ஒன்று இது பன்மாஹேஸ்வரரக்ஷை;

● அச்சில் பெறமுடியாத சிறந்த எழுத்துக்கள் இங்கு நீக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TRANSLATION

Lines 1 — 7

Hail prosperity! while (the king's) white parasol was raised, expanding like the moon, diffusing sweet mercy on all the creatures that abide on the globe, and affording royal protection; while (his) sceptre rightfully swayed all the quarters: (and) while the matchless wheel (of his authority) rolled about, in order to remove and wipe away the force (?) of the sun, the progenitor of his race; (he) took in marriage the goddess of the beautiful (lotus) flower (i. e. Lakshmi), whose austerities (thus) bore fruit, the Goddess of the great earth, the (Goddess of) fame, (who resembles) a parrot in beauty, and the matchless Goddess of (Victory) in war, and adorned (them) with crowns of brilliant jewels as his rightful queens.

While the princes of the vast earth worshipped his feet by turns (he) decked himself, as with garlands, with valour and liberality and was pleased to be seated on the throne of heroes together with (his queen) Ulagamulududaiyar, on the two - hundredth day of the third year (of the reign) of (this) King parakesarivarman, alias the lord Sri Adhirajendradeva, who (continually) increased (his) great fame by following (the laws of) manu,- the magistrate (adhikarin) puran (Adi)tta (deva)nar, alias Rajarajendra--muvendavelar or Pulan(gu)dai in Purakkiliyar nadu, a (sub - division) of (Pandikulasani Valanadu, (a district) of Solamendalam, and the Senapati Rajarajan Paranriparakshasan, alias Virasola Ilan(go).

Lines 7 — 15

In the (3rd) year (of the reign) of king (Parakesarivar)man alias the Lord Sri Adhirajendradeva, who (continually) increased (his) great fame by following (the Laws of) manu Ti ...n Siralan Ti ..... van alias ..... Kondasola-Pallavaraiyan Rajarajendra ..... a vellalan of Mangalappadi in Virppedu - nadu (a sub division) of ..... Kottam (a district) in ..... Solamandalam ..... one ..... perpetual lamp, to (the temple of) Vanavan madevi Isvaramudaiyar, the Lord of Jananathamangalam in ..... nadu (a sub - division of) ..... Solavalanadu and ..... for the oil required to (maintain) this (lamp) at one ulakku of oil per day ..... receiving oil ..... from the interest, from the Solar month chitra shall cause to burn (the) perpetual lamp.

Lines 15 — 23

Patipadamulappattutal pancha chariya deva kanmi ..... Kramavittan a brahmana worshiping Tillainayagabhattan... a Siva - brahmana of this temple, the temple drummer Num . namankonan alias Gangai Konda Solan alias Acharyan bhattan Araiyan .. Rajadhiraja mukkananadaivan Panmahesvaran Kuditangi alias Chandesvaradeva of this ..... temple daiyan, Tiruvayan, Gangai kondasolamanikkam, of this ..... Kamandiruvi alias Kotukulamanikkam Kuttan Rajarajendra Vitankamanikkam, Govindan Adavallan alias Narpattennayiramanikkam, Deva-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

kanmi alias Rajendrasolamanikkam and Devan Uyyavandan alias Mudikondasola manikkam - all these (persons) those that perfrom the sacred worship after them in this place, the temple Parisarakar, those supervising the Mahesvaras, the nattar (great men of t e country) and the Devaradiyar having agreed to burn a perpetual lamp till the moon and the sun last received five Kasu and one lamp stand on (bell - metal 2 spans and fingers long. This (charity) is under the protection of the Mahesvaras.

## அடிக்குறிப்புக்கள்

1. K. A. Nilakanta Sastri, **The Colas,** Madras University Historical Series- No. 3 Revised Edition, madras, 1955, P. 168.

2. **Archaeological Survey of Ceylon, Annual Report (ASCAR),** for 1891, (Colombo, 1904), P. 10; K. Indrapala, An Inscription of the time of Rajaraja Cola I from Padaviya, **Epigraphia Tamilica,** (Jaffna), 1971), PP. 32 - 36; SII, vol. IV, No. 1414, A. Veluppillai, Inscription from Matottam, **Ceylon Tamil Inscriptions,** Pt. II, (Peradeniya, 1972), PP.42 - 45; S. Gunasingam, **Two Inscriptions of Cola Ilankesvaradeva,** Trincomalee Inscriptions series - No. 1, (Peradeniya, 1974), PP. 1 - 22.

3. *This 'beautiful little' Siva Devale, 'Constructed of granite and limestone' which 'stands within the walled confines of the old city' of Polonnaruwa, is among the few Hindu Monuments of Ceylon, wich are still in a good state of preservation, and "its architectural form seems at once to class it with the Hindu fanes of South India erected from the 10th to the 12th cs. of which the great temple of Tanjore is the finest and most elaborate exponent".*
*K. A. Nilakantasastri,* **Ibid**, *p. 173*

4. SII, VOL, VII, No. 863

"செந்திருமடந்தை மன்சீராஜராஜன்
இந்திரசமானன் ராஜசர்வஞ்ஞனெனும்
புலியைப் பயந்த பொன்மான்......"

5. **Ibid.,** Vol. v, No. 982
6. **Ibid.,** No. 639
7. **Ibid.,** vol. VII, No. 863
8. **Ibid.,** vol. II, No. 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. மேலே இரண்டாம் அடிக்குறிப்பைப் பார்க்கவும்

10. பெல் அவர்கள் இதுபற்றிக் குறிப்பிட்டமை பின்வருமாறு:

"Owing to the regretable want of Tamil Scholars in Sri Lanka Capable of dealing with these old epigraphical records, the Archaeological Commissioner has had to depend on the generocity of Successive learned epigraphists attached to the Archaelogical Suyvey of India - Dr. E. Hultzsch (retired), the Late M. R, Ry. Rai Bahadur, V. Venkayya Avargal (a successor) and, latterly, the present Superintendent for Epigraphy, South India, M. R. Ry. H. Krishnasastri Avargal, without their kindly aid these old inscriptions must have remained virtually a closed book"

**Archaeological Survey of Ceylon Annual Report**, 1911 - 12, P. 9

11. **Ibid.**, P. 26, Appendix B.

12. **Annual report on South Indian Epigraphy for the Year 1912 - 13**, 594 of 1912.

13. **SII**, Vol. IV, No. 1388

14. **Ibid.**, Vol. III, No. 57

15. K A. Nilakantasastri, **The Colas**, PP. 168 - 169.

16. **SII**, II, No. 66

17. **Ibid.**, Vol. XVII, Nos. 135, 453, 576, 588, 595 and 624.

18. **Ibid.**, Vol. XIX, No. 108.

19. **Ibid**, No. 202.

20. **Ibid.**, No. 361

21. **Ibid.**, No. 418

22. **Ibid**, No. 430

23. செ. குணசிங்கம், சோழ இராச்சியத்து இந்துக் கோயில்களின் அமைப்பும் பணிகளும்; ஏறத்தாழ கி. பி. 850 முதல் 1070 வரை. இலங்கைப் பல்கலைக் கழகப் பேராதனை வளாகக் கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வுரை, பதிப்பிக்கப்படாதது, (1975), பக். 157.

24. **SII**, Vol. III, No 116.

25. **Ibid**, III, Pt. III No 142

26. "அருள்மொழி மூவேந்த வேளார் வெண்குன்ற கோட்டத்து பெருமண்டை நாட்டு பெருமண்டையிலேயிருந்து ஊர்களை விருவாயிருக்க சிங்கபுர நாட்டுக் கீழ்வழித்திருத்தான் தோன்றிபிராந் கோயிலுக்கு ஸ்தாநமுடைய ஈசான சிவனும் பிரஹ்மசிவனும் உள்ளிட்ட தேவகன்மிகள் வந்து இத்தேவர்க்கு நிவந்தஞ் செய்ததில்லை........ பற்றுப்பார்த்து நிவந்தஞ் செய்துதர வேண்டுமென்று சொல்ல"

**SII**, Vol, XVII, No. 243.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. **Annual Report On South Indian Epigraphy.** (ARE) 1946 — 47, Nos. 108, 113, 121, 126, 127, 128 and 138 of 1946-47

27a. T N. Subramaniam, **South Indian Temple Inscriptions** (SIII). **III**, Pt II, (Madras 1957), P, 1450; S. Krishnaswami Aiyangar, **Evolution of Hindu Administrative Institutions in South India**, Sir William Meyer Lectures 1929 - 30, Madras University, Madras, 1931, P. 382; Tamil Lexicon, IV, (Madras, 1930), P. 2065.

28. **SII**, vol. XIII, No. 102 (495 of 1918).

29. **Ibid**, No 133

30. **Ibid**, XIX, No. 300

31. **Ibid.** No. 162

32. **Ibid**, No. 442

32a. "...... கோயிலுக்கே கொணந்து இட்டு அளந்துகுடுப்பார் பூவழி முக்கலனெய் தூணியும் கடன் பற்றத நிலத்துத் தேவர்கன்மிகள் கண்காணித்து வருவார் களாவர் . "

T. A Gopinatha Rao, 'Suchindram Inscription of Rajaraja I: Regnal Year 14', **Travancore Archaeological Series**, IV, (Trivandrum,?), No. 29, PP. 127 - 130

33. **SII**, vol. XIX, No. 218.

34. **Ibid**, No. 433

35. **Ibid**, vol. XIII, No. 195

36. **Ibid**, vol. VII. No. 538; **ARE for 1931 - 32**, Pt. II, Para. 16

37. **Ibid**, vol. XVII, Nos. 730, 412, 453 and 538.

38. **Ibid**, XIII, No. 193

39. **Ibid**, No. 236

40. K. G. Krishnan, 'Tirukkunavay and the inscription from Alattur', **Journal of Kerala Studies**, I Serial No. 1, July 1973, P. 30

41. **SII**, vol. XVII. No. 475

42. **ARE for 1931 - 32**, Pt. 2, Para. 16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No..................

யாழ் சட்ட நிலையம்

பிரதான வீதி யாழ்ப்பாணம்

SITTAMPALAM
& CO.

NELLIADY KARAVEDDY

றேடியோ பாவனையாளர்கட்கு

இன்றைய நவீன சாதனங்களை
மிக உன்னதமான நிலையில் மீண்
டும் புதியதுபோல் இயங்க எம்
மை நாடுங்கள். கிடைத்தற்
கரிய உறுப்புகள் சீரமைக்கவும்
எந்தவிதமானஸ்பீக்கர் முதலிய
மீண்டும் சேவை செய்வதற்கு
ஒருமுறை விசயம் செய்யுங்கள்?

MODERN RADIO SERVICE

Chavakachcheri

புதுமையை விரும்பும் அன்பு வாடிக்கை
யாளர்களை பெருமைதரும்

புதுமைப் பிடவைகளுடன்

அன்புடன் அழைக்கின்றது
ராஜி
நெல்லியடியில் கைராசியான ஸ்தாபனம்

ராஜி

ரெக்ஸ்ரைல்ஸ்

நெல்லியடி - கரவெட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனக்கதவு திறக்கட்டும்

பூங்காற்றை முழுநிலவை சிரித்துப் பேசும்
பூவையர்கள் காதலினை அழகை வாழ்வை
பாங்காக கவிபடைத்து சலித்துப் போக
பாட்டாளி இலக்கியங்கள் சமைப்போம் என்று
நீங்காத பெருந்துயரில் நெடுநாள் சோர்ந்து
நிலைதவறித் தடுமாறும் எங்கள் முன்னே
ஆங்காரப் பொறி பறக்கப் புரட்சிக் கோசம்
அலங்கரிக்க ஐயாநீர் வந்துசேர்ந்தீர்.

அல்லலுறும் வாழ்வினிலும் என்றோ ஓர்நாள்
அறம்வெல்லும் நம்மவரைப் பிடித்து ஆட்டும்
தொல்லைகளும் தொலையுமென நினைத்தோம் அந்த
தொலைதூரத் தாரகையை விழைந்தோம் அந்தோ
எல்லையிலாப் பெருவெளியில் பசப்புச் சொற்கள்
எங்கேயோ எதிரொலித்துச் சிதற நாங்கள்
இல்லையெனக் கூவுகிற அழகை உங்கள்
இலக்கியத்தின் கருப்பொருளோ நன்று நன்று

வார்த்தைகளில் வறுமையினைச் செவ்விதாக
வடிப்பதிலே முனைபவரே உழைக்கும் கூட்டம்
வேர்த்தொழுக நடைமெலிந்து உள்ளம் சோர்ந்து
வெறுங்கையால் திரும்புவதை நிழலில் நின்று
பார்த்திது தான் ஆத்மாவின் கீதமென்று
பாடலிலே பெரிதாகக் கிறுக்கிவிட்டீர்
சீர்த்தமிழில் சிறுகதைகள் கவிதைச் செல்வம்
செழிப்பதற்கு உரமாய் நாம் சொல்லுகின்றீர்

நோய்நொடியும் நெறிபிறழ்வும் களவும் பொய்யும்
நிரந்தரமாய் உடன்பிறப்பாய் எங்கள் இல்லப்
பாய்களிலே படுத்துறங்கல் போதாதென்று
படையெடுத்தீர் நீர்வேறு இதற்குமுன்னர்
வாய்வலிக்க குரலெழுப்பி முழக்கம் போட்டு
வரலாற்றை அறைகூவித் தலைவர் சற்று
ஓய்வெடுக்கச் சென்றதனால் பேனாவோடு
ஓடோடி வந்தடைந்தீர் வேறு என்ன

கொடும்பசியில் உடல்தளர்ந்து வயிற்றுக்காக
குப்பைகளில் இரைதேடிக் கிளறும்போது
கடுங்குளிரில் பேய்மழையில் இழுத்துப் போர்த்தக்
கந்தலுடன் போராட்டம் நிகழ்த்தும்போது
நெடும்பிணியில் துடிதுடிக்க தெருவில் நாங்கள்
நெடுமூச்சு விடும்போது உணர்ச்சி மேவ
படும்துயரைத் துடைப்பதுவே பணியாமென்று
பாட்டெழுதப் புறப்பட்டீர் நல்ல கூத்து

மறுமலர்ச்சி நினைவுகளில் புகழில் பூத்த
மாக்சிசமும் லெனினிசமும் துணையாய்க் கொண்டு
வறுமைக்குப் புறங்காண வந்த உம்மை
வரலாறு கணிக்கும்நாள் தொலைவில் இல்லை
பொறுமைக்குச் சோதனையாய் நடத்துகின்ற
புத்தகத்துச் சித்தாந்த மோதல் எல்லாம்
மறுமைக்கும் உதவாது ஐயா உங்கள்
மனக்கதவு திறக்கட்டும் பிறிதுவேண்டாம்.

வி. ஜெயசீலன் ஸ்ரீ ஞானபீடம் - இறுதி வருடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**VENUS**

TUITION COLLEGE

Director

E. SRIDARAN

எங்களின் 4வது கிளைக்கு

ஒருமுறை விசயம் செய்யுங்கள்

Available at

**POOBALASINGAM BOOK DEPOT**

4, Central Bus Stand

199, RAILWAY BOOK STALL

JAFFNA

Phone 7631

RELIABLE PEOPLE

FOR

QUALITY PRINTING

THANGARAJAH PRINTING WORKS

393, MANIPAY RD JAFFNA


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பளிப்பு

நெல்லியடி அக்ரோ ஸ்ரோர்ஸ்

நெல்லியடி கரவெட்டி



எங்களிடம் சகலவிதமான நவநாகரிக
மான பாதணிகள் மலிவாகப்
பெற்றுக்கொள்ளலாம்

எமது விமலாஸ் தயாரிப்புக்களை
கேட்டு வாங்குங்கள்

விமலாஸ்

தனங்களப்பு வீதி, சாவகச்சேரி



WITH BEST COMPLIMENTS

FROM

V. M. K.
GOLD HOUSE

Dealers in
**Jewels Diamond & Sovereigns**

Kandy Rd, Chavakachcheri



With Best Compliments

from

**T. THAMOTHARAMPILLAI**

**AND SONS**

Kandy Rd Chavakachcheri



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவள்ளுவர் கூறும் ஒழிபியல்

**செல்வி. தவமணிதேவி சாம்பசிவம்**
*(உதவி விரிவுரையாளர் தமிழ்த்துறை பேராதனைப் பல்கலைக்கழகம்)*

திருக்குறள், 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாட்டுக்கே உரியதாக இல்லாது உலகப் பொது மறையாக உளது. பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுள்ளே அறம், பொருள், இன்பம், வீடு முதலிய உறுதிப் பொருட்களைக் கூறுவதிலே திருக்குறள் சிறப்பான இடத்தை வகிக்கின்றது. 1330 இரண்டடிக் குறட்பாக்களால் ஆக்கப்பட்டு அக் குறட்பாவினாலேயே சிறப்புப்பெயர்பெற்ற இந் நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் எனும் முப்பிரிவுகளாகவும் முப்பிரிவுகள் ஒவ்வொன்றும் இயல்களாகவும் அதிகாரங்களாகவும் வகுக்கப்பட்டுள்ளது. அறத்துப்பாலில் இல்லறம், துறவறம் முதலியவற்றைக் கூறியபின் பொருட்பாலில் அரசன், அமைச்சன் முதலியோருக்கு வேண்டிய இயல்புகளைச் சிறப்பாகவும் ஏனையோருக்கும் பொருந்தக்கூறிய பின் அதன் இறுதி இயலான ஒழிபியலில் அரசன் ஆட்சியின் கீழ் வாழும் குடிகளுக்குரியன கூறியதைத் தொடர்ந்து காமத்துப்பாலில் இருவகைக் கைக்கோளான களவியல், கற்பியல் விளக்கப்படுகிறது. ஆசிரியரின் நூல் வைப்பின்படி பொருட்பாலின் அரசியல் அங்கவியல் என்பவற்றில் அடங்காதன ஒழிபியலில் இடம் பெறுவதாக உளது.

ஒழிபியல் அல்லது எஞ்சியது எனும் கருத்தமைந்த பகுதி ஏனைய சில நூல்களில் இறுதியாக இடம் பெறுவது போலல்லாது திருக்குறளில் இடையில் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதொன்றாகும். இது குடிமை தொடங்கிக் கயமை ஈறாகப் பதின்மூன்றதிகாரங்களில் விளக்கப்படுகிறது. கோடிப் பொருள் பெறுவதாக இருந்தாலும் நற்குடியிலே பிறந்தவர்கள் முறைகேடான செயல்களைச் செய்யமாட்டார்கள் என்பதைக் குடிமையில் விபரித்த ஆசிரியர் அடுத்து அவ்வுயர் குடியிலே பிறந்தவர்களுக்கு இருக்க வேண்டிய பண்புகளாக மானம் பெருமை, சான்றாண்மை, நாணுடைமை முதலியவற்றையும் தொடர்ந்து இப்பண்புடையவர்கள் தம் குடிகளை உயரச் செய்வதற்கு உழவுத் தொழிலைச் சுட்டவும் அது செய்யத் தவறுவதால் ஏற்படும் துன்பங்களாக நல்குரவு, இரவு, இரவச்சம் முதலியன விபரிக்கப்படுகின்றன.

ஆசிரியர் தாம் கூற எடுத்துக்கொண்ட கருத்துக்களை மக்கள் மனதிலே பதிய வைப்பதற்காகப் பல உத்தி முறைகளைக் கையாளுகிறார். அதிகார வைப்பு முறையினைக் கையாளல், எடுத்துக் கொள்ளும் பொருளின் இலக்கணம் அல்லது அதன் தன்மையினைக் கூறல் அணிவகையினைக் கையாளுதல், நன்மை அல்லது சிறப்பு, சிறப்பின்மையினை ஒப்பிட்டுத் தான் ஒரு அதிகாரத்திலே கூற எடுத்துக் கொண்டதே தலையாயது என்னும் உறுதியினைக் கூறல், கேள்வி, ஐயம் முதலியவற்றை ஏற்படுத்தி வாசகரையே முடிவினை ஏற்படுத்துமாறு விடல், எதுகை, மோனை முரண்தொடைகளைக் கையாளல், எதிர்மறைமுகத்தால் விளக்கப்படுத்தல் முதலிய பல சிறப்பான உத்திகளை ஒழிபியலிற் கையாளும் திறன் சிறப்பானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல், அங்கவியலில் அடங்காதன ஒழிபியலில் இடம் பெறும்போது எங்கே ஆசிரியர் ஒவ்வொரு அதிகாரங்களிடையேயும் கையாளும் அதிகார வைப்பு முறைக்கு இடையீடு ஏற்படப்போகிறதே என்ற ஐயத்தை நீக்கிவிடுகிறார். ஒழிபியலின் கீழ் உள்ள குடிமக்கள் மேற்கூறிய அரசன் ஆட்சியின் கீழ் உள்ள குடிமக்கள் எனத் தொடர்பினை ஏற்படுத்துகிறார். குடிமைக்குரிய சிறப்புத்தன்மை கூறிவரும்போது இடையில், "நன்றியில் செல்வம்" எனும் அதிகாரம் இடம் பெறுகிறது. அது கூத்தாட்டுக் குழாம் போன்ற செல்வத்தைப் பண்பிலான் பெற்றால் அந்நிலை ஊரில் நிற்கும் நச்சுமரம் பழுத்தற்கு ஒப்பானது எனப்படுகிறது. இதன்மூலம் "நன்றியில் செல்வம்" உயர் குடிப் பெருமையுடையவனுக்கு இருக்கக்கூடாத பண்பு என எதிர்மறை முகத்தாற் தெளிய வைத்து அதிகாரங்களிடையே முறிவினை ஏற்படுத்தாது தொடருகிறார்.

சில அதிகாரங்களின் தோற்றுவாய்க்கு முன் அவ்வதிகாரம் பற்றிய சிறப்பை அல்லது இயல்பை அதன் முதல் அதிகாரத்தில் அறிமுகப்படுத்தவும் ஆசிரியர் தவறவில்லை குடிசெயல் வகையில் இடம்பெறும் 'உழவு' அதிகாரத்தின் இறுதிக் குறள்.

"இலமென் றசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்" —எனச் சோம்பு

வாரை நிலத்தாள் கண்டால் நகுவாள் என்று கூறிப் பின் நிலம் நல்லாள் நகும் நிகழ்ச்சி, அடுத்து வரும் நல்குரவில் நடைபெறுவதாகக் காட்டப்படுகிறது.

மனம், மொழி, மெய் பற்றி இருபாலருக்கும் நாண் ஏற்படுவதை உணர்ந்த ஆசிரியர், நன்மக்கள் தாம் தாம் செய்த இழிந்த கருமங்காரணமாக நாணுதலே நாணுதலின் இலக்கணம் என்பதை "நாணுக் கருமத்தால் நாணுதல்" என்கிறார் மனிதவர்க்கத்துக்கும் மிருகவர்க்கத்துக்குமிடையே உள்ள போராட்ட வாழ்க்கையில் அவையவை தத்தம் மானத்தைக் காப்பாற்றிக் கொள்வதில் வேறுபாட்டை ஏற்படுத்திக் கொள்கின்றன எனலாம் உயர் குடி மக்கள் தம் உயிர் போனாலும் தம் மானம் போனால், ஒரு மயிர் நீங்கினாலும் வாழாக் கவரிமா அன்னாராக உயிர் நீப்பர் என்றும் அவர்கள் மானம் போனால் "தலையின் இழிந்த மயிரனையர்" என்றும் ஒப்பிடப்படுகின்றனர். கள்வனைத் தீர விசாரியாது, கோவலனை அநியாயமாகக் கொலைசெய்வித்தமைக்காக. உயிர் நீத்துத் தன் மானத்தைக் காப்பாற்றிய பாண்டியன் கதையைச் சிலப்பதிகாரக் காவியம் எடுத்தியம்பியுள்ளது. இவ்வாறே, சிறைப்படுத்தப்பட்ட சேரன் கணைக்காலிரும்பொறை பகைவரின் கையால் நீர் அருந்தாது உயிர் நீத்துச் சேர குலப் பெருமையை நிலைநாட்டியமை போன்ற நிகழ்ச்சிகள் வள்ளுவர் வாய்மொழிக்கு அழியாத உதாரணங்களாகும்.

நாணுடைமை என்னும் அதிகாரத்தில் நாணுடைமை உயிருடன் ஒப்பிடப்பட்டு உயர் குடிமக்கள் தம் இழிந்த செயலுக்காகத் தம் அரிய உயிரையும் விடத்துணிவர் என்பதன் மூலம் தாம் ஒரு அதிகாரத்திற் கூற எடுத்துக் கொண்ட விடயமே அரியது மேலானது என்று வற்புறுத்துவார். அதே வேளையில் உழவு எனும் அதிகாரத்தில் "உழந்தும் உழவே தலை" என்பதால் உழவே எல்லாத் தொழில்களிலும் தலையாயது என வலியுறுத்துகிறார். இன்னும் தொடர்ந்து, "உழுவார் உலகத்தார்க்கு ஆணி", "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்", "பலகுடை நீழலும் தம் குடைக்கீழ்க் காண்பர்" என உழுதற் தொழில் மக்கள் மேல் ஏற்றப்பட்டும் உழவுத் தொழிலின் சிறப்பு விபரிக்கப்படுகிறது. இன்றைய பொருளாதாரப் போராட்டத்தில், வள்ளுவர் அன்று மொழிந்தவை இன்று சிறிதளவாவது பூர்த்தியாக்கப்படுமேயானால் உழவு பற்றிய அவர் கருத்துக்களுக்கு வரவேற்பளித்தவர்களாவோம் உழவுத் தொழிலை வற்புறுத்தும் ஆசிரியர் அதன் நற்பயன் அடையுமாறு,

,,ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு'' எனக் கூறிச் செல்லும்
குறளில் நெற்பயிர்ச்செய்கை முறையினைக் காட்டுகிறார்.

ஒருவர் தமக்குப் பொருந்தாதவற்றை இன்னொருவர் செய்தாலும் அதைப் பொறுத்து இன்னா செய்தார்க்கும் இனியவற்றைச் செய்யாவிட்டால் ''என்ன பயந்ததோ சால்பு?'' எனச் சான்றாண்மையில் ஒரு கேள்வித் துளையினை ஏற்படுத்திச் சிந்திக்க வைக்கிறார்.

எத்தொழிலையும் செய்யாமற் சோம்பித் திரியும் மடியுள்ளார்க்கு அறிவுறுத்தும் – நல்குரவு இரவு, இரவச்சம் முதலிய அதிகாரக் கருத்துக்கள் எக்கால மக்கள் வாழ்க்கையினையும் பிரதிபலிப்பனவாக உள்ளன. வறுமையினால் வாடும்போது உடனேயே இரக்கும்படி குறளில் இடம் அளிக்கப்படவில்லை. முதலில் நல்குரவின் கொடுமைகள் காட்டப்படுகின்றன. பெற்றதாயாலேயே வறுமையுள் அகப்பட்டான் வேற்றான் போலக் கருதப்படும் கொடிய துன்பம் வேறில்லை. அவனை பல்குரைத் துன்பங்கள் சென்று படும் என எச்சரிக்கும் ஆசிரியர் வழி சிந்திக்க வைக்கிறது. அடுத்த நிலையில் உலகில் ஈந்து மகிழ்வதற்கும் ஒரு கூட்டம் இருப்பதை உணர்ந்து போலும் ''இரவு'' என்பதில் இருப்பதற்கு அனுமதியளிக்கிறார். அப்படி இருக்கும் போதும் சில கட்டளைகளை இட ஆசிரியர் மறக்கவில்லை. ஈவார் முன்னே சென்று இருக்கும்படி கூறுகிறார் அவ்வாறு இருத்தல் இருப்போர்க்கு அழகு என்பதை ''இரப்பும் ஓர் ஏஎர் உடைத்து'' எனக் கூறும் ஆசிரியர் சிந்தனை அதிசயமாக இருக்கின்றது. அதுமட்டுமல்ல இவ்வுலகம் இருப்பாரை உடையதாக இல்லாவிட்டால்,

''இரப்பாரை யில்லாயின் ஈர்க்கணமா ஞாலம்
மரப்பாவை சென்றுவந் தற்று'' என உலகைமரப்பாவையுடன் ஒப்பிடுகிறார்.

இரக்குமாறு கூறியமைக்காகத் தொடர்ந்தும் உலகம் இருத்தலில் ஈடுபட்டு விடுமோ என்ற பயத்தினாற் போலும் மீண்டும் இரத்தலினால் ஏற்படும் அச்சத்தைக் கூறுகிறார். நீர் வேட்கையுடைய பசுவின் தாகத்தைத் தீர்க்குமாறு கேட்டல் போன்ற நாவிற்கு இளிவான செயல் வேறொன்றுமில்லை எனக் கூறும் ஆசிரியர் ஒரு கட்டத்தில் தாமே இரவலராக மாறிவிடுகிறார். உள்ளத்தில் மறைவில்லாத சிறந்தார் மாட்டும் இருக்கவேண்டாம் என

''கரவா துவந்தீயும் கண்ணன்னார் கண்ணும்
இரவாமை கோடி உறும்''
இக் குறளில் இருக்கும் கட்டம் இரவச்சத்தின் ஒரு உச்ச நிலையைச் சுட்டுகிறது. இறுதியாக மேற்கூறிய எவ்வகை நிலையினையோ, குணங்களையோ பெறாதவர் தோற்றத்தில் மக்களானாலும் ஏனைய நடவடிக்கைகளிற் கயவர் என அவர்தம் செயல்களைக் 'கயமை' அதிகாரம் கூறுகிறது

மேற்கூறிய சிறப்பான குடிக்குரிய தன்மைகளைக் கூறும் இவ்வியலுக்கு ஒழிபியல் எனப் பெயரிட்டது அதன் சிறப்பைச் சிறிது குறைக்கிறது போலவும் உளது. இவ்வியலைக் குடியியல் அல்லது குடிக்குரியன என வகுத்திருந்தால் இன்னும் சிறப்பைக் கொடுத்திருக்கலாம். ஆசிரியர் குடிக்கு வேண்டிய தன்மைகளாக அவர் கருத்துக்கள் மட்டுமல்ல அவற்றைக் கூற அவர் கையாண்ட குறிப்பாக அணிகள் தவிர ஏனைய உத்திகள் நூலுக்கு இன்றுவரை இறவாப் புகழை அளித்துள்ளது. அத்துடன் அவர் குறளை எடுத்தாளாத இலக்கியங்களோ மேடைப் பேச்சுக்களோ இல்லை எனலாம் அதிலும் முக்கியமாக ஒழிபியலில் வருகிற கருத்துக்கள் ஒரு சாதாரண குடிமகனுக்கும் உரியவையாக இருப்பதால் அவை பலவாறு நினைவூட்டப்படுகின்றன எக்கால மக்களுக்கும் வேண்டியனவாக இரண்டடிக் குறளில் அவர் விட்டுச் சென்ற ஆழமான அகலமான அறவுரைகளை மக்களாகிய நாம் போற்றி வாழ்வதே அவர் ஆக்கிய நூலுக்கு நாம் அளிக்கும் நன்றிக் கடனாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இலக்கிய வடிவங்கள்

சி. தில்லைநாதன்
(சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்த்துறை பேராதனைப் பல்கலைக்கழகம்)

விண்ணிலும் மண்ணிலும் கடலிலும் இதுவரை எத்தனையோ புதுமைகளைக் கண்டுபிடித்த மனிதவரலாற்றிலே, மனிதன் கண்டுபிடித்த அனைத்திலும் இணையற்றதாய்த் திகழ்வது மொழியாகும். மனிதகுல விளக்கத்துக்கும் ஒற்றுமைக்கும் உயர்வுக்கும் பயன்படும் மொழியை நிகர்த்த சாதனம் வேறில்லை. எழுத்துக்களை - அவற்றால் ஆகும் சொற்களை - அவற்றால் ஆகும் மொழியைப் பொருள் வெளியீட்டுச் சாதனமாகச் சிறப்பாகப் பயன்படுத்துவது ஒரு கலை. 247 தமிழ் எழுத்துக்களை எப்படியெப்படியோ ஆண்டு, மனித உள்ளங்களையும் உணர்ச்சிகளையும் சிந்தனைகளையும் இலட்சியங்களையும் சித்திரிக்கும் இலக்கிய வடிவங்கள் பல ஆக்கப்பட்டுள்ளன.

செய்யுளுருவிலேயே இலக்கியம் வடிவம் பெறும் என்ற எண்ணம் பல நூற்றாண்டுக் காலமாக எல்லா மக்களிடையேயும் நிலவி வந்திருக்கிறது. காலத்தால் முந்தியவையான சங்ககாலச் செய்யுள் இலக்கியங்களை எடுத்து நோக்கினால், அவை அகம் புறம் என இரு பெரும் பிரிவுகளாக அமைந்திருப்பதைக் காணலாம். இவ்விரு துறைகளையும் சார்ந்த அனுபவ உணர்வுகளை அழகோடு வெளியிட ஏற்ற வாகனங்களாகப் பல வடிவங்கள் - உருவங்கள் - இலக்கிய வகைகள் கையாளப்பட்டிருப்பதை அவதானிக்கலாம். காதல் அனுபவங்களையும் புறகிர்த்திகளையும் நேரிடையாக நயந்து பாடுவதோடமையாது, தோழி கூற்று, சிறைப்புறக் கூற்று, உடன்போக்கு, கண்டோர் கூற்று, காமம் மிகுந்த கழிபடர் கிளவி, பாடாண்டிணை, வாகை, ஆற்றுப்படை என எத்தனையெத்தனையோ வகைகளை அக்காலப் புலவர்கள் வகுத்திருப்பதை ஆழ்ந்து நோக்கும்போது, அப்புலவர்கள் தம் அனுபவங்களைத் தாங்கி நிற்கத் தகுந்த பல வடிவங்களைப் புனைந்து ஆண்ட சிறப்புத் தெளிவாகும்.

''காலத்துக்கேற்ற வகைகள்'' என்ற மகாகவி பாரதி கூற்றுக்கிணங்க, இலக்கிய வடிவங்களும் இலக்கிய வரலாற்றின் ஒவ்வொரு காலகட்டத்திலும் அவ்வக் காலத்து அனுபவ வெளியீட்டுத் தேவைகளைப் பொறுத்துத் தோன்றியும் வளர்ந்தும் மாறியும் மறைந்தும் வந்திருக்கின்றன. ஒவ்வொரு செய்யுளையும் ஒவ்வோர் உரைநடை இலக்கியத்தையும் இலக்கிய வடிவமென்றே கொள்ளக் கூடுமெனினும், காலத்துக்குக் காலம் தலைமை பெற்ற சில முக்கிய இலக்கிய வடிவங்களை மட்டும் இங்கு பார்க்கலாம்.

சங்ககாலத்தில் எழுந்த இலக்கிய வடிவங்களுட் சிறப்புமிக்க பொருட்டொடர்நிலை இலக்கிய வடிவம் ஆற்றுப்படை என்றே தோன்றுகிறது. சங்கமருவிய காலத்தில் ஒழுக்க, அறக் கருத்துக்களைத் தனிச் செய்யுட்களில் அமைத்துக் கூறுவதே பெரு வழக்காயினும் சில வாழ்க்கை முறைகளையும் ஒழுக்க சீலங்களையும் உண்மைகளையும் வற்புறுத்துவதை முக்கிய நோக்கமாகக் கொண்டெழுந்த காவியங்கள் என்று பாராட்டப்படும் தகுதி பெற்ற, பொருட்டொடர்நிலை இலக்கியங்களான சிலப்பதிகாரமும் மணிமேகலையும் சிறப்பாகக் குறிப்பிடப்படவேண்டியவையாகும். சங்கமருவிய காலப் பிற்பகுதியிலே பக்தியியக்கத்துக்கு வித்திட்ட காரைக்காலம்மையார் பாடிய பதிகமும் அந்தாதியும் இரட்டை

மணிமாலையும் ஒரே உணர்ச்சியைப் பல செய்யுட்களில் வெளியிடும் தொடர்நிலை இலக்கியங்களாகும்; சொற்றொடர் நிலையாக அமைந்தவற்றிலும் பார்க்கப் பொருட்டொடர் நிலையாக அமைந்த இலக்கியவடிவங்களே சிறப்பு மிக்கவையாக விளங்குகின்றன.

பக்தியியக்கம் உயிர்த்துடிப்புடன் நடைபெற்ற பல்லவர் காலப்பகுதியிலே இலக்கியப் பொருள் மரபும் வளர்ச்சிபெற்றது. இக்காலத்திலே நாயன்மார்களும் ஆழ்வார்களும் தம் பக்தியனுபவங்களைச் செம்மையாக வெளியிடப் பதிகம், மடல், எழுகூற்றிருக்கை, கோவை, உலா, கலம்பகம், அந்தாதி, மறம் திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை, ஊசல், தூது முதலிய பல வடிவங்களைப் பயன்படுத்தியிருக்கின்றனர்; பல வேறுபட்ட இலக்கிய வடிவங்களை உயிர்த்துடிப்புடன் கையாண்டவர்கள் என்று சிறப்பாகக் குறிப்பிடப்படும் தகுதி பெற்றவர்கள் மாணிக்கவாசகரும் திருமங்கையாழ்வாரும் எனலாம்.

உலகியற் சாதனைகள் குறிப்பிடத்தக்களவு நிகழ்ந்த சோழப் பேரரசுக் காலத்திலே அச்சாதனைகளையும் அவற்றின் பெருமைகளையும் விஸ்தாரமாகக் கூறும் பல இலக்கிய வடிவங்கள் கையாளப்பட்டன. அவற்றுட் சில சமயக் கருத்துக்களையும் கூறின. காவியம், பரணி, உலா, பிள்ளைத்தமிழ், மெய்க்கீர்த்தி, புராணம் முதலியவை இக்காலத்திலே தலைமைபெற்ற இலக்கிய வடிவங்களாகும்.

சமயச்சார்பும் தத்துவச்சார்பும் வித்துவத்திறனும் காட்டுவனவாக விசயநகர நாயக்கர் காலத்தில் பல இலக்கிய வடிவங்கள் கையாளப்பட்டன. உலகியல் பாட முன்பு கையாளப்பட்ட வடிவங்களுக்குட் சமயக் கருத்துக்களைப் புகுத்திக்காட்ட இக்காலப் புலவர்கள் முனைந்தனர். வடிவங்களைக் கெட்டித்தனமாகக் கையாள முனைந்த இக்காலப் புலவர் பலர் உள்ளடக்கச் சிறப்பைக் கவனிக்கத் தவறிவிட்டனர் என்பது இலக்கிய ஆய்வாளர்களின் பொதுவான கருத்தாகும். இக்காலப் பிற்பகுதியில் பொதுமக்களின் யதார்த்த வாழ்வினைத் தழுவிய எளிய, இனிய, குறவஞ்சி, பள்ளு, நொண்டி நாடகம் போன்ற இலக்கிய வடிவங்கள் தோன்றின.

ஐரோப்பியர் காலத்திலே முன்னைய புராணம், பிள்ளைத்தமிழ், தூது, அம்மானை, அந்தாதி முதலிய இலக்கிய வடிவங்கள் கையாளப்பட்டாலும் அவை முக்கியத்துவம் இழந்தன. சமூக, அரசியல், பொருளாதார நிலைகளுக்கேற்ப, தன்னேரில்லாத் தலைவரும் தெய்வங்களும் இலக்கியத்துக்குப் பொருளாவமையும் நிலைமாறி, சாதாரண மக்களும் அவர்களது வாழ்க்கைப் பிரச்சினைகளும் இலக்கியத்துக்குப் பொருளாயின. மானிட உரிமைகள் பெருக, மானிட சக்தியின் பலமும் தேவையும் கூடுதலாக உணரப்பட, அம் மானிடத்துக்குத் தேவையான விடயங்கள் இலகுவிற் புரிந்து கொள்ளப்படத்தக்க நிலையில் வெளிவரவேண்டியது தவிர்க்க முடியாததாயிற்று. எளிய நடையிலே செய்யுட்கள் இயற்றப்பட்ட போதிலும் செய்யுள் இதுவரை வகித்திருந்த இலக்கிய உலக ஆட்சிப் பீடத்தை உரைநடை வென்று கொண்டது. வீரமாமுனிவர் பரமார்த்த குருகதை எழுதிய காலமுதல் உரைநடை இலக்கியம் தமிழகத்திலே மேனிலை பெற்றது. உரைநடையிலமைந்த சிறுகதையும் நாவலும் நாடகமும் தலைமை பெற்றன.

இலக்கிய வடிவத்தைப்பற்றிப் பேசும்போது ஓர் அச்சம் தோன்றுகிறது. வடிவ அமைப்பையும், சிறப்பையும், தோற்றத்தையும், வளர்ச்சியையும் பற்றி ஆராய்பவர்கள் அவ்வடிவத்தை வாகனமாகப் பயன்படுத்தி வெளிக்கொணரப்படும் விடயத்தைப்பற்றி எண்ணத் தவறி விடுவார்களோ என்பதுவே அந்த அச்சமாகும். எடுத்துக்கொண்ட விடயத்தைக் கலையழகுடன் இலக்கியமாக உருவாக்கப் பயன்படுவதே வடிவமாகும். செய்யுட்கள், பிரிவுகள் ஏனைய விபரங்கள் பற்றிய வரையறைகள் வெளித்தோற்றம் பற்றியனவாகும். யாக்கப்பட்ட நோக்கம் அல்லது யாருக்கு என்ன எவ்வாறு கூறப்படுகின்றதென்பதே முக்கியம். இலக்கியத்தின் உயிர்நாடியும் அதுதான்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறவந்த வெண்பாப் பாட்டியல் பேதை, பெதும்பை முதலிய ஏழுபருவ மகளிர் மயங்க உலா வந்தான் ஒருவன் என்று கலி வெண்பாவிற் பாடப்படுவது அது என்கிறது.

பொதுவாக நோக்குப்போது, வழக்கிலிருந்த இலக்கிய வடிவங்களிற் கூறப்பட்ட சில செய்திகளையும் கையாளப்பட்ட யாப்புக்களையும் பற்றிய பட்டியல்களாகவே இப் பாட்டியற் சூத்திரங்கள் அமைந்திருக்கின்றன. வழங்கிய இலக்கிய வடிவங்களின் உள்ளடக்கமான நோக்கங்களையோ, அடிநாதமான பொருள் மரபுகளையோ, எத்தகைய சூழ்நிலையில் எத்தகைய தேவைகளை நிறைவேற்ற அவை தோன்றினவென்பதையோ இப்பட்டியல் நூல்கள் விண்டுரைக்கவில்லை. அவற்றின் இலக்கண வரையறைகள் பெரும்பாலும் வடமொழிக் காவிய அலங்கார இலக்கணங்களைப் பின்பற்றியவை என்றே தோன்றுகிறது. மரங்களைக் காடெனக் கருதி மயங்கும் ஒரு நிலையை அவற்றில் அவதானிக்கலாம். காட்டினியல்பைக் கேட்டால், இன்னின்ன மரங்களையுடையது அதுவென்று மரங்களின் பட்டியல் ஒன்றினைத் தயாரித்துத் தரும் செயலினையே அவை நினைவுபடுத்துகின்றன.

19-ம் நூற்றாண்டுக்குப்பின் வரலாறு, சமூக, அறிவியல் நோக்குப் படிப்படியாக வளர்ந்து வந்ததையின் விளைவாக வரலாற்றுக் கண்ணோட்டத்திலே சமூக, அரசியல், பொருளாதார அமைப்புக்களையும் நிலைமைகளையும் உறவு முறைகளையும் உணர்ந்து அவற்றின் பின்னணியில் இலக்கிய வடிவங்கள் எழுந்த நோக்கங்களையும் அவற்றின் இயல்புகளையும் அவை பூர்த்தி செய்த தேவைகளையும் புரிந்து கொள்ளும் முயற்சி வளர்ந்து வருகிறது. அதன் விளைவாக இலக்கிய வடிவங்களைப் படைத்தவர்களின் உண்மையான புலமைத் திறனையும் சரியாக மதிப்பிட முடிகிறது.

பாண்டிக்கோவை அகப்பொருட்டுறைகளையும் கட்டளைக் கலித்துறைச் செய்யுட்களையும் பாடுவதை அடிப்படைக் குறிக்கோளாகக் கொண்டதல்ல; பாண்டிய மன்னன் ஒருவனைப் புகழ்ந்துரைப்பதையே அடிப்படை நோக்கமாகக் கொண்டது என்பதையும், உலா பருவமகளிர் மயக்கத்தையும் கலிவெண்பாவையும் நம்பித் தோன்றியதல்ல; ஒரு தலைவனின் தோற்றப் பொலிவையும் கீர்த்தியையும் பாராட்ட எழுந்ததே என்பதையும் பரணி எண்ணி ஆயிரம் யானைகளைக் கொலை புரிந்தமையும் கலித்தாழிசையையும் நம்பிப் பிறந்ததல்ல; பெரும் போர்களை நடத்திய சோழப் பெருமன்னர் ஆட்சிக் காலத்திலே போர் வெற்றியை மையமாக வைத்து அரச புகழையும் ஆட்சியையும் நிலைநாட்டத் தோன்றியதே என்பதையும், பள்ளு மூத்தபள்ளி இளையபள்ளி சண்டை சமாதானங்களைக் கூற எழுந்ததல்ல; அரசபுரவலரை இழந்த புலவர் கவனம் பொதுமக்கள் வாழ்வின் பக்கம் திரும்பிய வேளையிலே உலகியல் வாழ்விற் கலகலப்பையும் பிடிப்பினையும் ஏற்படுத்தும் நோக்கோடு கோவில் திருவிழாக்களில் நடிக்கப்படும் நாடகமாக - சமூக நடவடிக்கையாக உருவாகியது என்பதையும், சிறுகதையும் நாவலும் பத்திரிகை, அச்சுவாகன, ஓய்வு நேர நெருக்கடித் தேவைகளினாலன்றிக் குலமும் நிலமும் முக்கியத்துவமிழந்து தனி மனித உழைப்பும் வாழ்வும் அவனது அகப்புறப் பிரச்சினைகளும் தலைமைபெற்ற தறுவாயில், அம்மனிதப் பிரச்சினைகளைச் சித்திரிக்கும் தேவைக்கமையத் தோன்றியவை என்பதையும் இன்று உணரத் தலைப்பட்டுள்ளோம். சுருங்கச் சொன்னால் வரலாற்று, பொருளாதார, சமூக, அரசியல் நியதிகளின்படி இலக்கிய வடிவங்களும் அவற்றின் பொருள் மரபும் மாறிச் சென்ற வகையினை ஆராய்ந்து காணும் அறிவுத் தாகம் இன்று வலுத்து வருகின்றது அதே வேளையில், எல்லாம் தமிழில் அன்றே இருந்தன. எல்லாவற்றுக்கும் தமிழில் ஆதிமூலம் உண்டு என்று கூறும் ஒரு போக்கும் சற்றும் பிடிவாதமானதாகக் காணப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவமும் அதன் உள்ளடக்கமான பொருளும் ஒன்றையொன்று தழுவியவை. வடிவம் சிறந்தமையும் ஓர் இலக்கியத்தின் உள்ளடக்கம் அர்த்தமுள்ளதாயும் சிறப்புப் பொருந்தியதாயும் அமையாதுவிடின் அவ்விலக்கியம் நிலைபெறுதல் சாலாது. அந்தாதி பார்த்தெழுதப்பட்ட பல அந்தாதிகளும், கலம்பகம் பார்த்தெழுதப்பட்ட பல கலம்பகங்களும் இப்படியான இன்னும் பலவும் காலகதியில் மறக்கப்பட்டுவிட்டதை இங்கு கருத்திற் கொள்ளல் சாலும்.

இலக்கிய வடிவத்தை மதிப்பிடும்போது வெளித்தோற்றத்தை மட்டுமன்றி உள் அழகையும் நோக்கவேண்டும். வடிவத்தை மாறாத, வளையாத, வளராத வெறும் சடப் பொருள் என்று நினைத்தல் ஆகாது. ஒருவன் ஒரு வடிவத்தைக் கையாளலாம். அதன் மூலம் தான் கூறத் துடிப்பவற்றை வெளியிடலாம், திருவுடைத் தாக்கலாம், அதன் திருவினைச் சிதைக்கலாம். உருவினை மாற்றலாம், உள்ளொளியும் ஊட்டலாம். திறமையுள்ளவர்கள் புதியவற்றை ஆக்கவும் முடியும். உள்ளத்தில் உண்மை ஒளியற்றவர்கள் பழைய வடிவங்களிற் பழைய செய்திகளையே திரும்பத்திரும்பக் காலத்தொடர்பற்றுக் கூறி அவ் வடிவங்களைத் தேய்க்கலாம் அல்லது மாய்க்கலாம். தமிழிலக்கிய வரலாற்றை நுணுகி நோக்குபவர்கள் இவற்றை அவதானிக்கலாம்.

வடிவங்கள் உண்மை அனுபவத்தோடு ஒட்டாதவையாகவும் வெறும் சம்பிரதாயத் தோற்றங்களாகவும் உபயோகிக்கப்படும்போது, எதார்த்த உண்மை தழுவிய அனுபவங்களும் அவற்றுக்குத் தோதான புதிய வடிவங்களும் விரும்பி வேண்டப்படும். ஒரே வடிவத்தை எப்போதும் அப்படியே நயக்கும் தன்மையும் புதுமை நாடும் மக்களுக்கு இல்லை. உடுக்கும் உடை, இருக்கும் ஆசனம், ஓட்டும் கார் முதலியவற்றிற் புதுமை காணும் வேட்கையுள்ள மனிதன் இலக்கிய வடிவங்களிலும் மாற்றங்களையும் புதுமைகளையும் நாடுவதுண்டு. பழைய வடிவங்களை மாற்றிப் புத்துயிரளித்தாலும் அவற்றின் பயன்பாடு குறைந்து போகலாம். கடவுட்தன்மை உடையவர்களையும் தேவர்களின் தோழர்களையும் அவதார புருடர்களையும் தலைவர்களாகக் கொண்ட வீரயுகத்துக் காவியங்களை அடியொற்றி இக்காலத்தில் இலக்கியம் படைக்க முயல்வது சாலாது.

மாறும் உலகிலே தன்னையும் தன்னைச் சூழ்ந்துள்ள மக்களையும் நிலைமைகளையும் அவதானிக்கும் மனிதனுக்குப் புதிய புதிய உண்மைகள் தோன்றும்; புதிய புதிய உறவு முறைகள் புலனாகும்; புதிய புதிய அனுபவங்கள் ஏற்படும்; அவற்றுக்கேற்ப அவனது தேவைகளும் எண்ணங்களும் இலட்சியங்களும் மாற்றமடையும். அவற்றுக்கேற்ப இலக்கியத்தின் தேவைகளும் நோக்கங்களும் அமையும்போது இலக்கிய வடிவங்களும் தோன்றும், மாறும், மறையும். இவ்வாறாகத் தோன்றியும் மாறியும் மறைந்தும் வந்துள்ள இலக்கிய வடிவங்களை எவ்வாறு நாம் வரையறை செய்தும் மதிப்பிட்டும் புரிந்துகொண்டும் உள்ளோம் என்பதையும் எண்ணிப்பார்த்தல் வேண்டும்.

தமிழ் இலக்கிய வடிவங்கள் வளர்ச்சி பெற்றமையைத் தொடர்ந்து 12-ம் நூற்றாண்டுக்கும் 18-ம் நூற்றாண்டுக்கும் இடையே தோன்றிய பாட்டியல் நூல்களும் வீரமாமுனிவரின் சதுரகராதியும் இவ்வடிவங்களுக்கு இலக்கணம் கூறின. அவற்றை இலக்கிய வடிவங்களை இனங்கண்டு கொள்வதற்கான முதல் முயற்சிகள் எனலாம். அவை இலக்கிய வடிவங்களை எவ்வாறு நோக்கின என்பதை அறியச் சில உதாரணங்களை நோக்கலாம்.

காவியம் பற்றிப் பேசும்பொழுது வாழ்த்து, வணக்கம், வருபொருள், தன்னேரில்லாத் தலைவன், நாடு, நகர், மலை, கடல் வர்ணனைகள், செலவு, இகல், வெற்றி.... இப்படி நீண்டதொரு பட்டியல் தரப்படுகிறது. கோவை பற்றிக் கூறும்போது, அகப் பொருளைத் தழுவிக் களவு கற்பினுக்குரிய கிளவிகளையுடையதால் 400 கட்டளைக் கலித் துறைப் பாடல்களிற் செய்யப்படுவது அது என்கிறது பன்னிருபாட்டியல். உலா பற்றிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலா, பிள்ளைத்தமிழ், பள்ளு, தூது முதலியவைபற்றி மட்டுமன்றிப் 'பொருள் மரபு இல்லாப் பொய் மொழி' என்றதன் மூலம் நாவல், சிறுகதை குறித்தும் தொல்காப்பியர் கூறியிருக்கிறாரென்றும், அவர் இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர் என்றும் சிலர் இறுகப் பிடிப்பர். மனித வரலாற்று நியதிகளுக்கும் அவ்வரலாற்றைத் தழுவிய இலக்கிய வளர்ச்சி நியதிகளுக்கும் பொருந்தாத, சுயதிருப்திக்காகப் பழமை பாராட்டும் இம் மனப்பான்மை மகிழ்ச்சிக் குரியதல்ல. காலத்துக்கேற்ற வகைகளைத் திறமையோடு அமைத்தாண்ட தமிழ்ப் புலவர்களின் இலக்கியத்திறனை முறையாக மதிப்பிடுவதற்கும் அது தடங்கலாகும். இத்தகைய மனப்பாங்கின்றி இலக்கிய வடிவங்களை அவை கையாளப்பட்ட காலப் பின்னணியில் வைத்து ஆராய்வதே பொருத்தமுடையதாகும்.

சங்ககாலத்திலேயே தனியானதோர் இலக்கிய வடிவமாக வளர்ச்சி பெற்ற பெருமைக்குரியது ஆற்றுப்படை ஆகும். வழிப்படுத்துதல் என்பதே ஆற்றுப்படை என்பதன் பொருள். பரிசில் பெற்ற ஒருவன் இன்னொருவனுக்கும் அப்பரிசில் பெறும் மார்க்கத்தைக் கூறுவதாக அமைவது இது. கூத்தர், பாணர், புலவர் முதலியோர் பரிசில் வேண்டி ஆட்சித் தலைவர்களை நோக்கிச் செல்வதைச் சங்க இலக்கியங்களிற் பார்க்கக் காணலாம். ஆட்சித் தலைவனிடம் பரிசில் வேண்டிச் செல்லும் புலவன் அவனது கொடை ஆர்வத்தைப் பலவகையாகத் தூண்டுவான். கொடைச் சிறப்பால் இசை பெறுவது அவன் குலமெனவிதந்து அக்குலப் பெருமையை நிலைநாட்டுமாறு தூண்டுவான்; தலைவனது வீரத்தையும் நாட்டையும் கொடையையும் புகழ்வான்; கொடுப்பதே மறையாத புகழுக்கு உரியவழி என்பான்; தன் வறுமை நிலையைக் கூறி இரப்பான்; கொடைத்திறன் குறித்துக் கேள்விப்பட்டதாக விதந்துரைப்பான். இவ்வாறு பலவழிகளைக் கையாண்ட புலவர்கள் ஆற்றிடைக் கண்ட இன்னோர் இரவலனுக்கு அதனைப் பெறும் வழி கூறும் நாடக பாவ அமைப்பினைக் கையாண்டமை குறிப்பிடத்தக்க வளர்ச்சியாகும். புறநானூற்றிலும் பதிற்றுப்பத்திலும் புலவராற்றுப்படையாக, விறலியாற்றுப்படையாக, பாணாற்றுப்படையாக, பொருநராற்றுப்படையாக அமைந்த செய்யுட்களைக் காணலாம்.

ஆற்றுப்படையைப் பாடாண்டிணைக்குரிய, அதாவது பாடப்படும் தலைவனுடைய கீர்த்தியைப் பாடுவதற்குரிய ஒரு துறையாகக் கூறிய தொல்காப்பியர்,

> ''கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
> ஆற்றிடைக் காட்சி உறழத் தோற்றிப்
> பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
> சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்'' என்பர்.

பெற்ற பரிசிலைப் பற்றியும் அதனைப் பெறவேண்டின் எவ்வழியாக யாரிடம் செல்லவேண்டும் என்பதையும் கூறும் இவ் விலக்கியம் பாடப்படுபவரின் கொடைத்திறனையும் நாட்டு வளத்தையும் கீர்த்தியையும் சித்திரிக்க மிகவாய்ப்பானதொரு வடிவமாக அமைந்து சங்கப் புலவர் தேவையை அழகுடன் பூர்த்தி செய்தமையால் இதனை அவர்கள் விரிவாக்கி வளர்த்துக் கொண்டனர். பத்துப்பாட்டில் ஐந்து, ஆற்றுப்படையாக அமைந்தன. ஆற்றுப்படுத்தப்படுபவர் பெயராலன்றிப் பாட்டுடைத் தலைவன் பெயரால் அழைக்கப்படும் திருமுருகாற்றுப் படையைப் பாடிய நக்கீரர் ஆற்றுப்படை வடிவத்தின் வளத்தை உணர்ந்து, தம்முன்னோரிலிருந்து மாறுபட்டு இறை அனுபவத்தைப் பாட அதனைத் திறனோடு கையாண்டார். அரசபுகழையும் இறையருட் பெருமையையும் மட்டுமன்றிப் புதிய சாதனைகளையும் கண்டு பிடிப்புகளையும் செய்திகளையும் கூற ஏற்ற வளைந்து கொடுக்கத்தக்க ஒரு வடிவமாக ஆற்றுப்படை காணப்பட்ட போதிலும், நூற்றுக்கணக்கான அந்தாதிகளையும் சதகங்களையும் கோவைகளையும் பாடிய பிற்காலப் புலவர்கள் ஆற்றுப்படையினை வெகு அருமையாகவே கையாண்டுள்ளமை விந்தையானது.

சங்ககாலத்தில் ஆட்சித் தலைவர்களின் கொடைச்சிறப்பில் ஈடுபட்ட புலவர் தம் அனுபவத்தை வெளியிட உருவாக்கிய ஆற்றுப்படை வடிவத்தைப் போலவே பல்லவர் காலத்தில் அருட்சிறப்பில் ஈடுபட்ட புலவர் தம் பக்தி மிகுதியை வெளியிடக் கையாண்ட மடல் என்ற வடிவம் சிறப்புடைத்து. பக்தி வேட்கை மிகுதியை, இறைவனை அடையா திருக்க முடியாத அவன் மேற் கொண்ட காதலின் முன் எதனையும் பொருட்படுத்தாத நிலையினைக் காட்ட மடல் ஏற்றதொரு வாகனமாக அமைந்தது.

காதலியை அடைய முடியாத தலைவன் தன்னை வருத்திக்கொள்ள, பிறரது அனுதாபத்தைப்பெற மடலேறப் போவதாகப் பயமுறுத்துவதைச் சங்க இலக்கியங்களிற் சிலவிடத்துக் காணலாம். இதனைத் தொல்காப்பியர் பெருந்திணையுள் அடக்குவர். பெண்கள் மடலேறப் போவதாகப் பேசுவதில்லை. கடல் போன்ற காமம் தோன்றியவிடத்தும் மடலேறாப் பெருமைக்குரியவர் பெண்கள் என்பர் திருவள்ளுவர். ஆனால் மடலைத் தன் அனுபவத்தை வெளியிடத்தக்க ஒருவடிவமாக முதலில் உருவாக்கி ஆண்ட திருமங்கையாழ்வார் பெண் மடலேறப்போவதாகப் பயமுறுத்தும் பாவனையிற் பாடியுள்ளார். தன்னைத் திருமால் மேற் காதல் கொண்ட பெண்ணாகப் பாவனை செய்து கொண்டு அவனை அடையவியலாத ஆற்றாமை காரணமாக அவ்வாறு பயமுறுத்தும் பாங்கில் அவர் தனது சிறிய திருமடலையும் பெரியதிருமடலையும் அமைத்துள்ளார்.

அதன் விளைவாகப் பெண்கள் மடல் ஏறல் சாலுமா என்ற சர்ச்சை எழுந்திருக்குமென்று தோன்றுகிறது. தலைவன் கடவுளாயின் பெண்ணும் மடலேறலாமென்று பிற்காலப் பாட்டியல் நூல்கள் விதிவிலக்களித்தன. பெண்கள் மடலேறலாமா அது ஏற்குமா என்ற கேள்வியே அர்த்தமற்றது. பெண்கள் மடலேறும் பிரச்சினையே எங்கும் அறியப்படவில்லை. தன் பக்தி அனுபவத்தை வெளியிட வாய்ப்பானதொரு வாகனமாகத் திருமங்கையாழ்வார் மடல் வடிவத்தைக் கையாண்டார் என்பதே உண்மை. திருமாலின் தோற்றப் பொலிவையும் அவதாரந்தோறும் அமைந்த சாதனைகளையும் கீர்த்தியையும் அருட்சிறப்பினையும் நயமாகச் சித்திரிக்க இவ்வடிவம் பயன்பட்டது. அவ்வாறு பயன்பட்ட சிறப்பினை நோக்காது, பெண்கள் மடலேறுவது எவ்வாறு ஏற்கும், எவ்விடத்துப் பொருந்தும் என்ற ஆராய்ச்சியில் ஈடுபடுவது இனிய பழக்கத்தின் உட்பொருளை ஒதுக்கி விட்டுத் தோலினைச் சுவைத்துப் பார்க்கும் செயலுக்கே ஒப்பாகும்.

விரத்திக்குப் பெயர்போன விசயநகர மன்னர் காலத்தில் மடல் வடிவம் சிற்றின்ப உணர்வுகளைத் தூண்டவும் பயன்பட்டது. இரட்சணிய யாத்திரிகம் பாடிய கிருஷ்ணபிள்ளை மானிடர்மீது கொண்ட காதலால் அவர்களுக்காகத் தன்னை மாய்த்துக் கொள்ளற் பொருட்டு இயேசுநாதர் உவந்து சிலுவையிலேறியதை மடலேறியதாகக் கூறுவது குறிப்பிடத்தக்க புதுமையான ஒரு கற்பனையாகும்.

பேரரசின் மாபெரும் உலகியற் சாதனைகளைப் பாடப் பல இலக்கியங்கள் தோன்றிய சோழர் காலத்திலே மாபெரும் போரிற் பெற்ற பெருவெற்றியை விஸ்தாரமாகவும் அழகாகவும் பாட அமைக்கப்பட்ட பரணி வடிவம் முக்கியமானது. கிடைக்கும் பரணிகளுக்குள்ளே தலை சிறந்ததும் காலத்தால் முந்தியதும் கலிங்கத்துப் பரணியாகும். கலிங்கப் போரிற் பெற்ற வெற்றியின் விளைவாக ஜெயங்கொண்டாரால் இப் பரணியிற் பாடப்படும் பேறுபெற்ற குலோத்துங்கனைப் 'பாடற் பெரும்பரணி தேடற்கருங்கவி கவிச்சக்ரவர்த்தி பரவ' என்று ஒட்டக் கூத்தர் பாராட்டுவதை நோக்கும்போது பரணி பாடப்படும் புகழ் மிக உயர்ந்ததாக அக்காலத்திற் கருதப்பட்டமை தெளிவாகும்.

பரணியின் அமைப்பையும் இசைக்கும் நடனபாவங்களுக்கும் பொருந்திய செய்யுள் நடையையும் வேறு பல அகப்புறச் சான்றுகளையும் நோக்கும்போது, பெண்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றப் பெண்களையும் துயிலெழுப்பிப் பெரும் போரில் வென்ற வேந்தன் கதையை மக்கள் முன்னிலையில் ஆடி நடிக்கும் வகையில் அது அமைந்திருக்கிறதென்று தோன்றுகிறது. இவ்வாறு நாடகவடிவில் அமைந்த பரணி மன்னன் புகழையும் வீர உணர்வையும் வளர்க்க வல்ல உன்னதமான ஒரு கருவியாகக் காணப்படுகிறது.

முற்கால வழக்கிலும் செய்யுளிலும் காணப்பட்ட சில நிகழ்ச்சிகளை ஒருமுகப் படுத்தி உலகியற்போர் வெற்றி பாட அமைந்த இவ் வடிவத்தை, தக்கன் வேள்வியை வீரபத்திரக் கடவுள் அழித்த வரலாற்றைப்பாட ஒட்டக்கூத்தர் கையாண்டார். இவ்வாறு புராண நிகழ்ச்சியைப் பொருளாகக் கொண்டமைந்த தக்கயாகப் பரணியிலும் சோழர் காலத் தேவைக்கிணங்க இரண்டாம் இராசிராசன் புகழ் சாற்றுவகையாற் பாடப்படுகிறது. சோழப்பேரரசு சாய்ந்த பின் உலகியற் சாதனைகளாற் தூண்டப்படாது ஆத்மீகத் துறையில் நாட்டங் கொண்ட புலவர், ஞானவாசிரியர்களும் கடவுளரும் அறியாமை பாசம், மோகம் முதலியவற்றையும் அரக்கரையும் வென்றமையைப் பாடப் பரணியிலக்கிய வடிவினை உபயோகித்தார். பரணி வடிவத்துக்குப் பொருந்தக் கூடியவை என்று கருதிய விடயங்களைப் பிற்காலப் புலவர் அதன் மீது செயற்கையாகத் திணிக்க முனைந்த போது, போர்க்களச் சாதனையைப் போற்றவெழுந்த பரணி தன் அடிப்படையையும் வலுவையுந் தேவையையும் இழந்தது.

தலைவனொருவனின் கீர்த்தியையும் மயக்கும் வசீகரத்தையும் வர்ணிக்க ஏற்றதாக உருவாக்கப்பட்ட வடிவம் உலாவாகும். ஏழு பருவ மகளிர் மயங்கும் வகையில் ஒருவன் உலாவருதலைக் கலிவெண்பாவிற் பாடுவது உலாவென்கிறது வெண்பாப்பாட்டியல். உலா இலக்கியத்தின் முதனிலை பாடப்படும் தலைவனது குடிப்பிறப்பு, நீதிமுறை, ஈகை முதலியவற்றையும் அவன் உலாப் புறப்பட்டுச் செல்வதையும் வர்ணிக்க, பின்னெழுநிலை அவனைக் கண்டு மதிமயங்கிய ஏழுபருவ மகளிர் செயல்களையும் அவர்கள் தலைவன் நலம் பாராட்டுதலையும் சித்திரிக்கும். அதனை மேலெழுந்தவாரியாக நோக்கும்போதே தலைவனது கீர்த்தியையும் கவர்ச்சியையும் பாட எழுந்ததென்பது புலனாகும்.

ஆயினும், பருவமகளிர் தலைவன்மீது மோகம் கொள்வதாகப் பாடப்படுவதை வைத்துக்கொண்டு, அது ஒருதலைக் காமமாகையாற் பெண்பாற் கைக்கிளையின் பாற்படும் என்னும், கற்புடைப் பெண்டிருக்கு அது சாலாதென்றும் இலக்கணப்புலவர் அங்கலாய்த்தனர். அவ்வாறு மோகமேலிட்டு மயங்குவது பொதுமகளிரேயென்று சமாதானமுரைத்தார் நச்சினார்க்கினியர். ஆனால், மனம் பறிகொடுத்து மயங்குவது பொது மகளிர் என்பதற்கு உலா இலக்கியங்களிலோ, அவற்றுக்கு இலக்கணம் வகுத்த பாட்டி நூல்களிலோ சான்றில்லை. அத்தோடு, உலா பெயர்சுட்டிப் பாடுவது தலைவனையேயன்றிப் பாடுவது பெண்களையல்ல. அது மட்டுமன்றிப் பொதுமகளிர் கண்டு மயங்க வீதியில் கம்பீரமாகப் பவனிவருவதாகப் பாடுவது தலைவனது பெருமையையும் தோற்றத்தையும் ஒப்பற்றவையாகக் காட்ட உதவாது. பொதுமகளிரைத் தம் தோற்றப் பொலிவாலும் கீர்த்தியாலும் கவர்வது தேவர்களுக்கும் அரசர்களுக்கும் சிறப்புச் சேர்ப்பதாகுமா என்பது கடா.

புகழைக் கேட்டிருந்த பெண்டிர் அதற்குரியாரைக் கண்டபோது மால்கொண்டு மயங்குவதாகப்பாடுவது தலைவர் பொலிவையும் புகழையும் உயர்வு நவிற்சியாகக் காட்டும் ஓர் இலக்கிய உத்தியென்பதை உணராது, உண்மையிலேயே பெண்கள் நிறையிழந்ததாக அமைவது இலக்கியச் சிறப்பையும் மதிப்பிடத் தடங்கலாகும். பல்லவர்காலப் பகுதியிலே தோன்றிய திருக்கைலாய ஞான உலா சிவன் உலாச் சென்றதை வர்ணிக்கும். இவ்வடிவம் சோழர்காலத்தில் அவனிநாரணர்களாக மதிக்கப்பட்ட அரசரைப் பாடப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்பட்டது. பிற்காலத்திலே தோன்றிய உலாக்கள் அநேகமாகத் தெய்வங்களையும் ஸ்தலங்களையும் பாடின. பழைய இலக்கிய மரபுகளைக் கைக்கொள்ளும் ஆசையும் தனி மனித வழிபாட்டில் ஈடுபாடும் இருக்கும்வரை இத்தகைய நூல்கள் ஆங்காங்கு தோன்றலாம்.

தன்னேரில்லாத் தலைவர்களை நம்பிவாழ்ந்த நிலைமாறி, தம் உலகியல் வாழ்வை ஊர்க்கோவில்களோடு இணைத்துக்கொண்ட மக்கள் வாழ்வின்பால் புலவர் கவனம் திரும்பியபோது, கிராமிய வாழ்வை அடித்தளமாகக் கொண்ட எளிய இனிய நாடகவகையினதாக பள்ளுக்களும் குறவஞ்சிகளும் நொண்டிகளும் தோன்றின. பதினெட்டாம் நூற்றாண்டையொட்டி ஆலயங்களிலே நடிக்கப்பட்ட இவை சமயத்தையும் இலக்கியத்தையும் பொது மக்கள் சொத்தாக்கின. உலகியல்வாழ்விற் கலகலப்பை ஏற்படுத்துவதோடு சாதாரண மக்களுக்குச் சமய ஈடுபாட்டினை ஏற்படுத்தும் அம்சங்களை இவை கொண்டிருந்தன. உலகியலின் கீழ்மட்டத்தினரெனக் கருதப்படும் குறவர் வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்ட குறவஞ்சி ஜனரஞ்சகமான முறையிலே தலப்பெருமைகளையும் பாட உகந்ததாயமைந்தது.

நிலத்தில் உழைக்கும் பள்ளர்தம் வாழ்க்கையையும் நம்பிக்கைகளையும் பழக்க வழக்கங்களையும் சுவைபடச் சித்திரிப்பதோடு தலப்பெருமையையும் கூறுவது பள்ளு. நில மான்ய அமைப்பினதும் நிலச்சுவாந்தாரினதும் பலவீனங்கள் நாசூக்காகக் கிண்டல் செய்யப்படுவது அவதானிக்கத்தக்கதாகும்.

நொண்டிச்சிந்து யாப்பிலே பாடப்படும் நொண்டி நாடகம் பொதுவாகத் தீய செயல்களின் பயனாகக் கைகால் சேதிக்கப்பட்டுத் துன்புற்ற ஒருவன் தெய்வத்தை வழிபட்டதன் பயனாகக் கைகால் பெற்றுத் தெய்வத்தைப் போற்றுவதாக அமையும். துன்பம் நீங்கக் காரணமாகும் தெய்வத் தலத்துக்கும் இது புகழ் சேர்ப்பது. ஒருவனே பாடிநடிக்கும் காரணத்தால் இது ஒற்றைக்கால் நாடகம் என்றும் அழைக்கப்படும். பலர் தோன்றி நடிப்பது பிந்திய வளர்ச்சியாயிருக்க வேண்டும். தன் வரலாற்றைக் கூறும் நொண்டி நகைச்சுவை யாலும் சிருங்கார வர்ணனையாலும் தன் சாகஸங்களைச் சுவைபடக் கூறுவதாலும் சபையோருக்கு அலுப்புத்தட்டாத வகையிற் கதையினை நடாத்திச் செல்வான். இடையிடையே சமூகத்தில் மதிப்பான இடம் பெற்றுள்ளவர்களைக் கிண்டல் செய்வதும், ஆட்சியதிகாரிகள் லஞ்சம் போன்றவற்றினால் முறைதவறுது சுட்டப்படுவதும், சமூக ஒழுக்கவீனங்களும் நெறிபிறந்த செயல்களும் காட்டப்படுவதும், தவறு செய்தவர்களும் திருந்தி நல்வாழ்வு பெறலாகுமென்ற நம்பிக்கை ஊட்டம்படுவதும் நொண்டி நாடகத்திற் கவனிக்கத்தக்கவையாகும்.

காலத்தின் தேவைகளையும் கூற எடுத்துக்கொண்ட விடயத்தையும் ஆசிரியனது நோக்கையும் பொறுத்தே பொதுவாக இலக்கிய வடிவங்கள் நிர்ணயமாகும். இந்த ஜனநாயக யுகத்திலே மனிதசமத்துவத்திலும் மனிதப்பிரச்சினைகளிலும் நாட்டம் செலுத்தப்படும் நேரத்திலே ஒப்பாருமிக்காருமற்ற அமானுஷ்ய சாதனைகளைக் கற்பனையழகுடன் பாடும் காவியங்களும் உலாக்களும் தோன்றுமென எதிர்பார்க்க முடியாது. இன்று சதாரண மனிதவாழ்வையும் உறவுமுறைகளையும் பிரச்சினைகளையும் பொருளாகக் கொள்ளும் சிறுகதைகளும் நாவல்களும் நாடகங்களுமே பெரிதும் வழக்கப்படுகின்றன. நெருங்கி வரும் உலகநாடுகள் பலவற்றிலும் இந்நிலையேயுள்ளது.

சிறுகதையும் நாவலும் மேல்நாட்டார் நமக்கு அறிமுகப்படுத்தியவை எனலாம். சிறுகதை அதன் உருவத்திலும் உள்ளடக்கத்திலும் தமிழிலே கணிசமான வளர்ச்சி பெற்றுள்ளது. உரைநடை ஆக்க இலக்கியம் செய்யுள் இலக்கியத்தை முக்கியத்துவத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்திக் கொண்ட வேளையிலே செய்யுட்துறையில் மூழ்கியிருந்த பல மேனாட்டவரும் கீழ் நாட்டவரும் புனைகதைத்துறையுட் புகுந்தது போலச், சமீபகாலத்திற் பல தமிழ் எழுத்தாளர் சிறுகதையுலகிலிருந்து நாவலுலகினை நாடுகின்றனர், குறுநாவல்களிலும் நாவல்களிலும் கூடுதலான ஆர்வம் காட்டப்படுகிறது. சமகால மனிதவாழ்வையும் மன ஓட்டங்களையும் பிரச்சினைகளையும் ஆழமாகவும் அகலமாகவும் உணர்ந்து கொண்ட அனுபவ விரிவின் விளைவான நாவலே அது இருக்கவேண்டும்.

'ஒவ்வொரு தேசத்தின் குணரசானுபவமளவில் நாகரிகத்தை அளவிட்டுக் காட்டுவது'' என்று பாரதி போற்றும் நாடகம் தமிழ் நாட்டிலும் சமயச்சடங்குகளின் அடியாகத்தோன்றி, ஆட்டத்தையும் பாட்டையும் தழுவி சமய பிரசார கருவியாகப் பயன்பட்டு, உரைநடை உருப்பெற்றுச் செல்வாக்குமிக்க சமூகநடவடிக்கையாகியுள்ளது. பதினெட்டாம் நூற்றாண்டுகளுக்குப் பின் விசேட வளர்ச்சிபெற்ற தமிழ் நாடகம் மக்கள் மத்தியில் மதிப்புப் பெற்றிருந்த காவிய புராணக் கதைகளின் அடித்தளத்தில் ஒழுக்க நெறிகளையும், சமய உணர்வையும் பரப்பப் பயன்பட்டது. தேசிய விடுதலை இயக்கங்களுக்கும், சமூக சீர்திருத்த இயக்கங்களுக்கும், அரசியல் இயக்கங்களுக்கும் சக்திமிக்க ஆயுதமாக உதவியது. சமூக, பொருளாதார அரசியற் பிரச்சினைகளை அலசியுணர்த்தவும் வாழ்வை வளம்படுத்தவும் இன்பமுடைத்தாக்கவும் இன்று பயன்படுத்தப்படுகிறது.

காலத்தின் தேவைகளுக்கமைய ஓரங்கநாடகம், வானொலிநாடகம், வசனகவிதை முதலிய புதிய பல வடிவங்களும் தோன்றுகின்றன; வளர்கின்றன தமிழ் இலக்கிய உலகம் பல்வேறு வடிவங்கள் சிறந்த ஒன்றாய் மிளிர்கின்றது.

இளங்கதிருக்கு நல்லாசிகள்

# SIVASAKTHY STORES

Prop R. PANCHADCHARAM

NELLIYADY KARAVEDDY



தரமான கைத்தறிப் பிடவைகளுக்கு

# கைத்தறி மாளிகை

டச்சு வீதி, சாவகச்சேரி

போன்: 219



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Wishes to

TAMIL SANGAM

## Vimal & Brothers

- Engineering Consultants
- Architectural Designer
- Builders & Contractors
- Civil and Mechanical Dranghtsman
- Quantity Surveyors and also fo, your Electrical Installations Blue Printing etc.

MEESALAI SOUTH MEESALAI

## NELLIADY DIAMOND

## WELDERS

Gas welding, Turning works Gate,

Grill Makers

Nelliady Karaveddy

## Sellamuthu's

Textile Merchants

Nelliady Karaveddy

Branch

## Sellamuthu's

55, 56, Modern Market

Jaffna

## Thirumagal Stores and

## Book Depot

Neillady Karavedy



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கைதடி கிறைண்டிங் மில்**

கண்டி வீதி கைதடி

இலங்கை உரக்கூட்டுத்தாபனம் பெற்
றோலியக் கூட்டுத்தாபனத்தின்
ஏகவிநியோகஸ்தர்கள்

சகல ரசாயனப் பொருட்களும் நியாய
மான விலையில் கிடைக்கும்

**Kaithady Grinding Mills**

Kandy Road Kaithady



WITH THE BEST COMPLIMENTS

FROM

**Kavitha Photo**

CHAVAKACHCHERI



**சரவணபவன்**

ஆபரண மாளிகை

உரிமை கே. கே. யோகநாதன்

கண்டி றோட் சாவகச்சேரி



**Thiagarajah & Bros.**

Textile Merchants

NELLIADY KARAVEDDY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH THE BEST COMPLIMENTS

FROM

## ELECTRONICS

ELECTRICAL DEALERS AND CONTRACTORS

Prop: R. BALAN

MAIN STREET CHAVAKACHCHERI

WITH THE BEST COMPLIMENTS

FROM

## GEEVANA PHOTO

CHAVAKACHCHERI

Prop, K. V. MUTHULINGAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதி ஏற்பாடு

பகவான் ஸ்ரீஸ்ரீ நந்தகோபாலகிரி ஸ்தாபகர் சர்வமத சங்கம்
அன்னை சர்வமத சங்கம்

காலங்களும் நிலையும் இயற்கையும் மாறும்போது உண்மையாகவே நாமும் நம் கொள்கைகளும் மாறியாகவேண்டும். இல்லையென்றால் நாம் அந்தச் சூழ்நிலையில் சீவிப்பது கஷ்டம், இதைத்தான் யுகமாற்றம் என்கிறோம். இந்துக்களின் ஆசாரப்படி கலிக்குப்பின் வருவது கிருதயுகம் என்பது ஐதிகம். அப்படியானால் இக்கிருத யுகத்தால் கோவில்களோ திருவிழாக்களோ காணிக்கைகளோ இருக்கப்போவதில்லை. எல்லோரும் சமவெளியில் ஒன்றி மானசீகமாக இறைவனைப் பிரார்த்திப்பார்கள். அவன் உடனே அவரவர் நினைவுக்கு உகந்தவாறு காட்சியாகி தேவையானதைப் பூர்த்திசெய்வான்.

இந்நிலையில் நாம் இன்றைய காலத்தையும் தற்போதய மக்கள் தேச சூழ்நிலையையும் உற்றுப் பார்க்கும்போது எங்கள் தெய்வ வழிபாட்டில் இன்னும் பழைய கண்மூடித்தனத்தையே காண்கிறோம். இவற்றை நாம் நல்ல சீரான முறைக்குக் கொண்டுவரக் கூடாதா? தெய்வ வழிபாடு என்ற போர்வையில் அது இது என்று பயமுறுத்தி பணத்தையும் நேரத்தையும் பறித்து ஏமாற்றுவேலை செய்பவர்களைப் பார்த்துக்கொண்டு இன்னும் நாம் பயந்தாங்கொள்ளிகளாக இருப்பதா? அப்படி இருப்பதால் ஒரு சில தனிப்பட்ட சுயநலக்கார முதலாளி வர்க்கத்தினர் பணமூட்டைகளாகுவதையே பார்த்துக்கொண்டிருக்கிறோம், இது கண்ணிருந்தும் குருடராய் இருப்பதற்கு ஒப்பான செயல் அல்லவா?

ஆத்மீகம் என்று கூறிக்கொண்டு கோயிலுக்கு கும்பாபிசேகம் சுவாமிக்கு நீராட்டு ஊஞ்சல் திருவிழா திருக்கல்யாணம் போன்றவற்றை ஏன் கோவிலில் வைக்கிறார்கள்/ இதனால் மக்களுக்கு என்ன பலன் ஏற்படுகிறது உண்மையாகவே இன்று சுவாமி காட்சி தருகிறாரா? அதே நேரத்தில் மக்களும் உண்மையாகவே பக்தியுடன்தான் கோவிலுக்குப் போகிறார்களா? இல்லை. தங்கள் உடையையும் நகையையும் காட்டப்போய், தாம் சில நாட்களாக தேடிவைத்திருந்த பணத்தை அர்ச்சனைக்கும் அங்குள்ள கடைகளுக்கும் சிலவேளை திருடருக்கும் கொடுத்துவிட்டு வீடுதிரும்புவதுதான் அவர்கள் கண்ட பலன். இவற்றை நாம் ஒவ்வொரு திருவிழாக்களிலும் பார்க்கிறோம். இவைபற்றிய செய்திகளைப் பத்திரிகைகளிலும் படிக்கிறோம். இப்படி நாம் கோவிலுக்குச் சென்று அர்ச்சனை செய்வதால் இறைவனை அடையவோ அல்லது அநுக்கிரகம் பெறவோ முடியுமானால் இன்று எல்லோருக்கும் அது எளிதில் கிட்டியிருக்குமல்லவா அன்று சுவாமி விவேகானந்தர் சொன்னதுபோல் மரக்கறிமாத்திரம் தின்று மனிதன் முத்தியடையலாம் என்றால் இந்தப்பசுக்கள் மிருகங்கள் எல்லாம் எப்பவோ முக்தி அடைந்திருக்கவேண்டுமல்லவா இந்தப் பிராமணன் உங்களுக்கு அர்ச்சனை செய்தவுடன் உங்கள்மீது இறைவன் கருணை வருமென்றால் அவன் சதா சொல்லிக்கொண்டிருக்கும் அவன் நிலையைப் போய்ப் பாருங்கள். இந்தச் சடங்கு செய்யவேண்டும் அந்தச் சடங்கு செய்ய வேண்டும் என்று சதா உங்கள் காலைச் சுற்றி வருவதும் இந்த ஐயர நல்லாய்ச் செய்கிறார் அந்த முதலாளி நல்லாய்ச் செய்கிறார் என்று அவன் சொல்லித் திரிவதும் எதற்கு. சதா உங்களால் பணம வரவேண்டுமே என்னும் ஆசையே சொல்லும் சிந்தனையுமாய் இருக்கும் இந்தப் பிராமணரும் குருமாரும் உங்கள் பணத்திலேயே கண்வைத்திருக்கும் முதலாளிப் பெருச்சாளிகளையன்றி ஆத்மீகத்தின் காவலரோ உண்மையான ஆண்டவரின் தொண்டரோ அல்லர் இவர்கள் வெறும் ஆசையின் முதலாளிகள் மும்மலங்களால் பிணிக்கப்பட்டவர்கள். இந்தப் பிராமணரும் குருமாரும் மக்களைச் சுரண்டி வாழும் முதலாளிமார்கள் வளர்த்துவிடும் பெருச்சாளிகள்தான். இத்தகைய பத்தாம் பசலிகளை நாம் தொந்திகொழுக்க வைப்பது அதுவும்

நாம் கண்ணீர்விட்டு வேர்வைசிந்த தேடிய பணத்தைக் கொண்டுபோய் கொடுத்து தொந்தி கொழுக்க வைப்பது நியாயமா? இதைத் திருப்பணி என்று சொல்லலாமா?

எங்கும் நிறைந்த பரம்பொருள் ஒன்றே அந்தப் பரம்பொருளை இதயசுத்தியோடும் அந்தப் பரம்பொருளின் அன்பொன்றிற்காக நமது எல்லா பிக சுகங்களையும் சொத்துக்களை யும் இழக்கத் தயாரான மனத்துணிவோடும் வழிபடுவதே உண்மையான இறைவழிபாடா கும்; அந்தத் துணிவே உண்மையான துறவாகும்;

ஆகவே உண்மையான இறைவழிபாட்டுக்கு காசு வேண்டுமா? திருவிழாக்கள் என்று நேரமும் சிரமமும் வீணாக்குவது சரியா? திருப்பணி என்ற பெயரில் இன்னும் நாம் மூலைக்கு மூலை கோவில்களைக் கட்டி எழுப்புவது சரியா? அவற்றிற்கு செலவிடும் பணத்தைக்கொண்டு ஆயிரம் ஏழைகள் வாழ வழிவகுப்பது இன்று நாம் செய்யும் அதிஉன்னத திருப்பணி ஆகாதா? எங்கும் நிறைந்த பரம்பொருளுக்கு இனியும் ஒரு தனிக்கோயில் வேண்டுமா? அங்குள்ள ரூபங்களை தெய்வமென நினைத்துப் பூசிப்பதைப் பார்க்கிலும் அந்த எங்கும் எதுவாய் நிறைந்த பொருளை மனதில் வைத்து அதில் நாம் சொற்பநேரம் நிலைத்து நிற்பது சரியல்லவா? அப்படி யானால் ஒருவனே தலைவன் ஒருவனே கடவுள் என்பதும் சரியல்லவா? எல்லாச் சமயங்களும் கூறும் கடவுளும் ஒரு கடவுளல்லவா? மதங்களுக்கிடையேயுள்ள வேற்றுமை ஆணவத்துக் குட்பட்ட நமது மனதின் வேற்றுமை அன்றி கடவுளின் வேற்றுமை ஆகாதல்லவா? எனவே ஒரு கடவுளை எல்லோரும் ஒன்றுகூடித் தியானித்து அதன் அடிப்படையில் எழும் இணக்கு முறையில் நமது சுகதுக்கங்களை அணுகுவதும் நமது வாழ்க்கை முறையை அமைத்துக்கொள்வ தும் அவசியமாகிறதல்லவா? இதுவே எதிர்காலத்தின் வழியுமாகிறதல்லவா?

காலங்களும் நிலையும் இயற்கையும் மாறும்போது உண்மையாகவே நாமும் நம்கொள் கைகளும் மாறியாகவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவரும் ஒழுக்கமும்

மாணவ சமுதாயம் ஓர் உயர்ந்த சமுதாயம். அறிவு என்னும் ஏணியில் இவர்கள் மேல் நோக்கி சென்று கொண்டிருக்கும் காரணத்தால் இவர்களை உயர்ந்த சமுதாயம் என்று கூறுவது மிகையகாது. இங்ஙனம் அறிவுத்துறையில் ஈடுபாடு கொண்டவர்க்கு ஒழுக்கம் அணிகலனாகும். ஒழுக்கமில்லாத அறிவு மணம் இல்லாத மலர்போலாகும். ஆகவே மாணவப் பருவத்திலிருந்தே ஒழுக்கமும் அறிவுடன் சேர்ந்து வளர்ந்தோங்க வேண்டியது மிகவும் அவசியமாகும். இன்றைய மாணவர்கள் நாளைய பிரசைகளாவர். சாதாரண பிரசைகள் மாத்திரமல்ல, அரசியல் துறையிலும், அறிவுத்துறையிலும், நீதி நிருவாகம் முதலிய பலதுறைகளிலும் உயர்ந்த இடத்தை வகித்து முன் மாதிரியாக வாழப் போகிறவர்கள். இன்றைய மாணவர்கள். ஆகவே மாணவர்களுக்கு அறிவுமட்டும் இருந்தால் போதாது ஒழுக்கமும் மிகமிக அவசியமாகும். அப்போதுதான் மாணவர்கள் மதிப்புக்குரியவர்களாகி பயனுள்ள பிரசைகளாக இருக்க முடியும்.

> ''ஒழுக்கம் விழுப்பந் தரலால் ஒழுக்கம்.
> உயிரினும் ஓம்பப் படும்''

இக் குறளிலிருந்து ஒழுக்கம் எத்தகைய மாண்புடையது என்பதை அறியக் கூடியதாக இருக்கிறது எனவே அறிவும் ஒழுக்கம் சேர்ந்துதான் ஒருவரை பண்புடைய மனிதனாக்குகிறது

இத்தகைய இலக்கணத்துக்கு இலக்கியமாகவுள்ள மாணவ சமுதாயம் ஒரு சிலரின் ஒழுக்கம் குறைவாலும். அவதூறான நடத்தைகளாலும் பலவாறான குறைகளுக்கு ஆளாகியிருப்பது வருந்தத்தக்கது இக் காரணத்தால் இன்றைய பல்கலைக்கழக மணவர்கள் சுதந்திரமாக அறிவு வளர்ச்சியைப் பெற வேண்டியவர்கள் பலவகையான தடைச் சட்டங்களுக்கு ஆளாக வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றனர்கள். இந்நிலைக்கு ஓரளவு நாமும் பொறுப்பாளிகளென்பதை மறுக்கமுடியாது. ஏனெனில் எம்மில் சிலர் தம்மைத் தாங்கள் கட்டுப்படுத்தி நடத்தமுடியாத நிலையில் அனைவரும் இக் குற்றத்திற்குப் பொறுப்பாளிகளாகவேண்டி இருக்கின்றது. இதனால் மாணவர்கள் மாத்திர மன்றி எமது நாடும் பாதிக்கப்படுகிறது.

இதற்கும் பொருத்தமன ஓர் உதாரணத்தை நாம் ஈண்டு கவனிப்பது இன்றியமையாதாகும்

ஆங்கிலத்தில் The Battle of Waterloo was wen at eten'' என்றுஒரு பழமொழிஉண்டு வரலாற்று மாணவர்கள் அனேகமாக இதைத் தெரிந்துகொண்டிருப்பார்கள். இதன் கருத்து என்னவென்றால் நெப்போலியனுடைய யுத்தங்களின் ஈற்றில் அவன் தோற்கடிக்கப்பட்டது வாட்டர்லூ என்னுமிடத்தில் வெலிங்டன் தலைமையிலுள்ள ஆங்கிலச் சைநியத்தால். எனவே ஈற்றனுக்கும் இந்த யுத்தத்துக்கும் என்ன தொடர்புண்டு என்ற கேள்வி எழுவது இயல்பே.

இங்கிலாந்தில் ஹரோ, ஈற்றன் ஆகிய இரண்டு பழம்பெரும் கல்விநிலையங்கள் உண்டு. இந்நிலையங்களில் தனிய ஏட்டுச்சுரக்காய் கல்வி மாத்திரம் போதிக்கப் படுவதில்லை. சிறுபராயத்தில் ஒழுக்கம், பண்பு, கடமை, கண்ணியம், கட்டுபாடுடன் வாழ்க்கையில் ஒருவரை தன்னம்பிக்கையுடன் எந்த பெரிய பொறுப்பையும் ஏற்றுச் செய்து முடிக்கக் கூடிய தகுதியுள்ளவராக்குவதே இக்கல்விநிலையங்களின் பணியாகும். இவற்றிலிருந்து வெளியேறுபவர்கள் திறமைசாலிகளாகவும் ஒழுக்கசீலர்களாகவும் இருப்பர்களென்பதில் எட்டுணையும் சந்தேகமில்லை. ஆங்கில நாட்டின் பெரும்பாலும் வரலாறுபடைத்த பெருமனிதரெல்லாம் இக்கல்விநிலையங்களில உருவாகப் பெற்றவர்களே இங்கே எவருக்கும் படிக்க அனுமதிகிடையாது. அரசகுடும்பத்தை சேர்ந்தவர்களும் பிரபுக்களாக உள்ள பாரம்பரிய குடும்பங்களில் உள்ளவர்களுமே பெரும்பாலும் அனுமதிக்கப்படுவர். எமக்குத் தெரிந்த ஒருவரை கூறப்போனல் அவர்தான் நவபார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நத்தின் தலைப்புதல்வன் ஜவஹர்லால் நேரு. இவரும் ஹரோவில் கல்விகற்றவர்தான். எனவே தான் அவரால் பெரும் சாதனைகளை நிலை நாட்டமுடிந்தது.

வாட்டர் லூவில் வெலிங்டன் தலைமையில் போராடிய சைநியத்திலுள்ள பெரும்பாலோர் ஈற்றன் கல்விநிலையத்தில் உருவாகப்பெற்றவர்கள் எனவேஅவர்களால்வரலாறுகண்டமா பெரும் யுத்தமேதை நெப்போலியனையும்கூடத்தோற்கடிக்கமுடிந்ததுஎன்பதற்கெடுத்துக்காட்டாக இப் பழமொழியே தோன்றியது.இதேபோன்று மாணவர்களாகியநாமும்பெரும் சாதனைகளை நிலைநாட்டவேண்டுமாயின் நாம் அதற்கேற்ற பண்பும் ஒழுக்கமும் உள்ளவர்களாகத் திகழவேண்டும்.

ஆனல் தார்மீக சனநாயக சோசலிசசமுதாயம் ஒரு குறிப்பிட்ட காலத்தில் முடிவடைவதல்ல பல்லாண்டுகளுக்கு நீடித்து இருக்கவேண்டியது. இனிமேல் வரப்போகின்ற சமுதாயங்களிலேயே உள்ளது முக்கியமாக அறிவு ஆற்றலுக்கு நிலைகளனுகவுள்ள பல்கலைக்கழக மாணவரிடையே இப்பொறுப்பு பெரும்பாலும் உள்ளது என்று சொல்லுவது பொருத்தமானதே இன் நிலையில் பல்கலைக்கழக மாணவர்கள் சுதந்திரமாகச் சிந்தித்தும்பேசியும்எழுதியும் செயலாற்றியும் பூரண வளர்ச்சிபெற்று மலர வகைசெய்ய வேண்டிய பொறுப்பு அரசையே சாரும். இந்நாட்டின் எதிர்கால நலனையும் அந்நலனுக்குப்பொறுப்பாகவுள்ளமாணவ சமுதாயத்தையும் தகுதியான வகையில் அணுகி ஒருசிலரின் அசம்பாவிதச் செயல்களுக்கு எல்லோரையும் பொறுப்பாளாக்கி அவர்களுடைய வளர்ச்சிக்குப் பாதகமாக் அரசு நடவாமலிருப்பது மிகவும் விரும்பத்தக்காகும்.

உதாரணமாக பல்கலைக்கழக வளவுக்குள் அரசியல் கருத்தரங்குகள் நடத்துவதற்குத் தடைவிதிக்கப்பட்டால் இச்செயல் சரியா? அல்லது பிழையா? என்பதை ஆராய வேண்டிய அவசியம் அரசியல் விஞ்ஞானம் (Political Science) ஒருபாடமாக பல்கலைக்கழகத்தில் கற்பிக்கப்படுகிறது. இதில் சனநாயகம் முதலாளித்துவம் சோசலிசம்,பாசிசம் முதலியபல்வேறு வகையாக அரசியல் தத்துவங்களுக்கும் அடங்கும் அப்படியாயின் அவரவரர் நம்பிக்கைக்கு ஏற்றவாறு நடந்து கொள்வதில் ஏன் தடை இருக்கவேண்டும்? பலன் இல்லாத செயல் முறைகளுக்கு ஒவ்வாத கல்வி வெறும் ஏட்டுச்சுரைக்காயாகவல்லவா இருக்கும் இத்தகைய சூழ்நிலைக்குமாணவர்களைத் தள்ளி பின்பு அவர்கள் கட்டுப்பாடு ஒழுங்குக்கு முரணாக நடக்கிறார்களென்று வீண் குற்றங்களைச் சுமத்தி தடைச்சட்டங்கள் போடுவது தார்மீகச் செயலா.

ஒருவரை யொருவர் பாதிக்காமல் பொது உடைமைகளுக்குச் சேதம் ஏற்படாமல் நடந்து கொள்ளும் பொறுப்பு ஒழுக்கம் மாணவரைச் சார்ந்தது. சனநாயக ரீதியில் அங்ஙனம் நடந்து கொள்ளும் வாய்ப்பை நிலைநாட்டுவது அரசின் கடமையாகும். இவ்விரு துருவங்களும் ஒன்றுசேர்ந்து இயங்குவது. நாட்டின் அபிவிருத்திக்கும் சுபீட்சத்துக்கும் சிறந்ததாகவும் அதுவுமல்லாமல் சிற் சில மாணவர்களின் வரம்புமீறிய செயல்களுக்கு ஏதுவாகவுள்ளகாரணங்களையும் நீக்கிவிடும்.

ம. சிவகுமாரன்
விஞ்ஞானம் பீடம் பேராதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல்தரமான சிற்றுண்டி

வகைகளுக்கும்

குளிர்பான வகைகளுக்கும்

நாடுங்கள்

**Selva Vilas**

81, Powerhouse Road

JAFFNA



அன்பளிப்பு

சுந்தரம் பிறதர்ஸ்

175. மின்சார நிலைய வீதி

யாழ்ப்பாணம்



SPACE DONATED

BY

**NATHAN'S**

17, POWER HOUSE ROAD

New Market

JAFFNA



சிறுவர்க்கான விளையாட்டுப்

பொருட்களை

மலிவான விலையில் பெற்றுக்கொள்ள

இன்றே விசயம் செய்யுங்கள்

**Baby Needs**

59, Modern Market

JAFFNA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH BEST COMPLIMENTS

FROM

**Singhams Pharmacy**

25, Power House Road

JAFFNA



*Visit for your Tailoring*

**REFINE**

DRESS MANUFACTORY

H' O. Grand Bazaar

JAFFNA

F 3 Jummah Mosqe Lane



**New Victors**

23, Clock Tower Rd

JAFFNA

நியூ விக்ரேர்ஸ்

றெக்கோடிங் பார்

23, மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணம்

தொலைபேசி 7804



BEST COMPLIMENT

FROM

**Dia Watch Works**

6, Jubilee Bazaar

JAFFNA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டு உடைகளை
றைக்கிளீன் செய்வதில்
39 வருட அனுபவம்
பெற்றவர்கள்

**சன்லைற்**
றைக்கிளீனேர்ஸ்

ராணி சினிமா அண்மையில்
யாழ்ப்பாணம்

For all your requirements

of

**DRUGS AND MEDICINES**

PATRONISE

**CITY MEDICALS**

487, Hospital Road,

JAFFNA

முதல்தரமான
சிற்றுண்டி வகைகளுக்கு
இன்றே விஜயம்செய்யுங்கள்



**Vijaya Tea Room**

6, J. M. C. BUILDING

Central Bus Stand

JAFFNA

For Your

**ELECRICAL GOODS**

Visit

**Victor & Sons**

109, Stanley Road

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ந்த
தமிழில்
மலர்ந்த சங்கம்
வாழ்க

வாழ்த்துகிறோம் பெருமையுடன்

**R. T. S. TEX**

TEXTILE DEALERS
THOLPURAM CHULIPURAM



வண்ணத் துணியுகத்து
வளமார் வகையனைத்தும்
எண்ணம்போல் தேர்ந்தெடுக்க
ஏற்றதோர் எழிற்கூடம்

**KANESAN STORES**

63, 78, K. K. S. ROAD
JAFFNA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகத்தான வாழ்விற்கு உண்மையான உழைப்பின் பங்களிப்பு

வாழ்க்கை என்பது என்ன?

அதனது உட்பொருள் யாது?

அதன் நோக்கங்கள் எவை?

இந்தக் கேள்விப் பாறைகள்மேல் பட்டு எத்தனையோ ஈட்டிகள் முறிந்துவிட்டன. அந்தக் கேள்விகளையும், விவாதங்களையும், எண்ணங்களையும் நினைத்துப்பார்க்கையில் விசித்திரமாகத்தான் இருக்கிறது. இவற்றிற்குத் தெளிவான விடை கண்டுபிடிப்பதென்பது ஒரு கற்பனையே! இந்தக் கற்பனையில் லயித்து இவற்றிலே ஓர் அழகு கண்டு இவற்றினை உண்மை என்று ஏற்றுக்கொள்வது ஒரு மனமயக்கமே தவிர அறிவு ஆகாது.

வாழ்க்கை என்றால் அது எல்லோருக்கும் ஒன்றே! இந்த ஒரே வாழ்க்கைதான் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருமாதிரி இருக்கிறது. காரணம்; அவரவரினதும் வேறுபட்டமனோபாவம்தான். ஒத்த மனோபாவமுள்ள இருவர் ஒன்றுபடுகையில் அந்த வாழ்க்கையில் பிரச்சனைகளுக்கே இடமில்லை. மாறாக எதிரெதிரான மனோபாவம் கொண்ட இருவர் ஒன்றுபட்டால் அந்த வாழ்க்கையே ஒரு பிரச்சனையாயிருக்கும். எப்படித்தான் பிரச்சனைகளோ, சிக்கல்களோ இருந்தாலும் ஒருவருக்கொருவர் பயன்பட்டோம் ஒருவரையொருவர் பயன் படுத்திக்கொண்டோம் என்று வாழ்கின்ற வழ்ாவில்தான் ஒரு நிறைவு உண்டு.

நான் ஒருவருக்கும் தேவையில்லை என்ற நிலைமையே—நினைவே யாவற்றிலும் கடினமானது. ஆற்றல்கள் மலர்ந்திருக்கும் இளமைப்-பருவத்திலும் சரி; அவை தளர்ந்திருக்கும்முதுமைப்பருவத்திலும் சரி; நமது சமூகத்துக்கு அதன் வளர்ச்சிக்கு— நாம் எதுவிதத்திலும்பயன்படவில்லை — பயன்படமுடியாது என்ற உணர்வே ஒரு மனிதனுக்கு ஏற்படக்கூடிய மிகப்பெரிய தண்டனை இக்கொடிய தண்டனையிலிருந்து தப்புவதற்கு நம்மெல்லோரிடமுள்ள எளிமையானதும், வலிமையானதுமான ஆயுதம் ''உழைப்பு'' ஒன்றேதான்.

தன் உழைப்பால் உலகை அழகுபடுத்தாதவன் என்றென்றும் இறப்பை எய்திவிடுகின்றான் வழக்கமான-நேர்மையான உழைப்பு உழைக்கும் வாய்ப்பை மனிதனிடமிருந்து பறித்துவிட்டால் வாழ்க்கையின் மகத்துவங்களெல்லாம் பொருளற்றுப்போய்விடும். ஆமாம்; உழைப்பிற்கு முதன்மை கொடுக்கவிடால்-உழைப்பே இல்லாவிட்டால், வாழ்கையின் உட்பொருள் என்ற பேச்சுக்கே இடமேது.

தான் யார்? எப்படிப்பட்டவன் வாழ்க்கையில் என்னென்ன செயல்திறன் உள்ளவன் என்பதை தன் சோம்பல்த்தனத்தால் உணர்த்தத் தவறியவன் பிற்காலச் சந்ததியினரின் செயல்களில் நினைவிலும் வாழ்வதற்கு அருகதையற்றவனாகிவிடுகிறான். ''வாழ்கைக்கு மரணம் இல்லை, வாழ்க்கை அமரத்தன்மை வாய்ந்தது'' என்பனவெல்லாம் எவ்வளவு உண்மையோ! அல்லது எவ்வளவு சத்தியமோ! அவ்வளவு உண்மை அவ்வளவு சத்தியம்தான் மனிதன்தன் வாழ்நாளில் நல்லது எதுவும் செய்யாதபோது நற்செயல்கள் எதுவும் புரியாதபோதுதான் மரிக்கிறான் என்பது; அதுவும் மிக உண்மையான, மிகப் பயங்கரமான மரணமடைகிறான் என்பது.

உழைக்கும் ஒவ்வொருமனிதனுக்கும்வாழ்க்கை இனியதே. அவன் எப்படிப்பட்டவனாக இருந்தாலும் சரியே; வாழ்க்கையில் மேம்பாடு வரும் என்னும் இடையறாத நம்பிக்கையுடன் உழைக்கும் ஒவ்வொருவனுக்கும் வாழ்க்கையின் சகல இன்பங்களும் மிகுந்த மரியாதையுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்கும் இந்த ''மேம்பாடு'' என்பதை ''பொருள் வளம்'' என்று சிலர் நினைக்கிறார்கள் சிலர் ''மனத்திருப்தி'' என்று எண்ணுகிறார்கள். இன்னும் சிலரோ—இவர்களே பெரும்பான்மையினர்-இவை இரண்டுமே என்று கருதுகிறார்கள். மனிதர்களை வேறுபடுத்துவது இந்தப்பிரச்சனைதான். இவர்கள் சிந்தனைகளில் முதன்மை பெறுவது பொருள் வளமா? மனத் திருப்தியா இந்தக் கேள்விகளைக் கருத்திற் கொண்டு பார்க்கும் போதுதான் சிலர் வாழ்வதை விரும்புகிறவர்கள் என்றும் சிலர் வாழ்க்கையை விரும்புகிறவர்கள் என்றும் வகைப்படுத்தப்படுகிறார்கள் முன்னவர்கள் கூறுகிறார்கள் ''நாம் உண்கின்றோம் அதனால் வாழ்கின்றோம்'' என்று மற்றவர்களோ! [நாம் மக்களுக்குப் பயன் படுகின்றோம் அதனால் வாழ்கிறோம்] என்று ஆனால் இவ்விருவகையினரில் எவருமே சாகவிரும்புவதில்லை. மேலும் இங்கு நடப்பது யாதெனில் வாழ்க்கையை விரும்புகிறவர்களால்த்தான் வாழ்வதை விரும்புகிறவர்கள் வாழ்க்கையை விரும்புகிறார்கள் சாகடிக்கப் படுகிறார்கள். அதாவது வாழ்க்கை பாழ்படுத்தப்படுகின்றது இதனால்தான் வர்க்கங்களும், சாதிகளும், இனபேதங்களும், சுரண்டல்களும் தோன்றிப் பெருகி—பொய்யான ரசனைகளும் போலியான ஆடம்பரங்களும் மலிந்து இந்த மண்ணின் வாழ்வு சீர் குலைந்து போகின்றது.

இந்தச் சீர்குலைவிற்குக் காரணம் வாழ்வதை விரும்புகிறவர்கள் சுயநலவாதிகள் மலிந்து பெருகி வருவதே இந்த நூற்றாண்டு மனிதனுக்கு இந்த நூற்றாண்டிற்குரிய வாழ்க்கை பற்றிய சிந்தனைகளும் கண்ணோட்டங்களும் குறைந்து வருவதே!

இதற்கு என்ன காரணம்?

உழைப்பதில் சோம்பலும் லைதாரித்தனத்தில் சுகமும் கண்டு இப்படித்தான் என்று இல்லாமல் எப்படியேனும் என்ற எண்ணத்தில் வாழும் இந்த இருபதாம் நூற்றாண்டு அறிவுலகப் பிரஜைகளின் பெருக்கமே தவிர வேறொன்றல்ல. இங்கு முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டியது என்னவெனில் உழைப்பு என்பது உத்தியோகமல்ல, அது அதனிலும் உயர்ந்தது.

தற்போது இவ்வண்ணம் பெருகிவரும் சமூக-பொருளாதார, தனிமனித வாழ்க்கைச் சீரழிவுகளையெல்லாம் மாற்றலாம், திருத்தலாம், மகத்துவமாக்கலாம் என்பதையெல்லாம் சாத்தியமே இல்லை என்ற எண்ணமே மனிதர்களிடையன்றி இவற்றின் பெருக்கத்தை அதிகரித்து வருகின்றன இந்த வாழ்க்கையின் பிரச்சனைகளுக்குரிய சகல விடையங்களையும் தெரிந்து-புரிந்து திருத்திக்கொள்ளுவதற்கு ஒரு தனி-மனித-ஆயுள் அன்பமது தான். ஆனால் நமது ஒற்றுமை எவ்வளவு பெரிது! நமது உழைப்பு எவ்வளவு வலிது! இவற்றில் பிணைந்து அவற்றிலே இபலமும்-தரமும்-தன்மையும்-நேர்மையும் வளர்த்து இந்த உலக வாழ்க்கையை திருத்தியமைப்பது நடக்கமுடியாததல்ல.

இது சாத்தியமா? சாத்தியமற்றதா? என்று ஆராய்ந்து கொண்டிருந்தால் அது வீண்என்பதும் இந்தக் கேவலங்களெல்லாம் மேலும்-மேலும் பெருகி நிறையும்என்பதும் நமக்குப் புரியாததும்மல்ல. மேலும்! இதில் ஆராய்ச்சி எதற்கு? — முடியுமா முடியாதா? இருக்கிறதா இல்லையா? உண்மையா பொய்யா? என்கிற எல்லா எதிர் மறை வியாயங்களைவிடவும் ''முடியும்'' என்கிற, ''இருக்கும்'' என்கின்ற, ''உண்மை'' என்கிற நம்பிக்கைதான் பெரிது இந்த மகத்தான நம்பிக்கையின் பேரில்தான் இன்று மக்களெல்லாம் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனவே வாழ்க்கையின் வசந்தங்களெல்லாம் இவர்களது நம்பிக்கையில் தோன்றி உழைப்பதில் வளர்ந்து மலரத்தான் போகிறது—மலரத்தான்வேண்டும்.

அ. தவஞானதாஸ்
பொறியியல் 3 வருடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையும் ஈழமும் - சிலவரலாற்றுக் குறிப்பு

வரலாறு தொடங்கிய காலத்தில், நம்நாட்டுக்குப் பல பெயர்கள் வழங்கின. அப்பெயர்கள் யாவும் இந்திய மொழிகளோடு தொடர்புடையன. இந்திய உபகண்டத்தின் தென்கிழ்த்திசையில் அமைந்துள்ள நம்நாட்டில் இந்தியாவின் வெவ்வேறு பகுதிகளிலிருந்து ஆதியில் மக்கள் குடியேறியிருக்க வேண்டும். வெவ்வேறு மக்கள் கூட்டங்கள் நாட்டுக்கு ஆரம்பத்தில் வெவ்வேறு பெயர்களை வழங்கியிருக்க வேண்டும். இந்து சமுத்திரத்தின் நடுவிலே, கிழக்கும் மேற்குமாகச் சென்ற கடல்கடந்த வணிகப்பாதையிலே, முத்துவளமும் மாணிக்கக் கல்வளமும் பெற்றுவிளங்கிய நம்நாடு, பல பகுதி மக்களேயும் கவர்ந்திழுத்தது நம்நாட்டுக்குத் தமிழில் வழங்கிவரும் பெயர்கள் இலங்கையும் ஈழமுமாகும்.

இலங்கை என்னும் பெயர் இராமாயணத்தோடு தொடர்புடையது. இராமாயண த்தில் இராவணனின் இராசதானியாக 'லங்கா' கூறப்படுகிறது. சங்கத மொழியில் தோன்றிய இராமாயணம் தமிழ்நாட்டிலே பிரசாரமெய்தியபோது 'லங்கா' என்பது 'இலங்கை' என மாற்றமடைந்திருக்க வேண்டும். கம்பராமாயாணம் தோன்றுவதற்குப் பல நூற்றாண்டுகள் முன்பே இராமாயணக் கதை தமிழ் நாட்டிலே பரவி விட்டது. இராமாயணக் கதைக் குறிப்புகள் சில, சங்க இலக்கியங்களிலும் இடம் பெற்றுவிட்டன' ஆனல், இலங்கை என்ற சொல் வழக்கு தமிழ் இலக்கியத்திலே முதன் முதலிற் சிலப்பதி காரத்திலேயே காணப்படுகிறது சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்கு விழா எடுத்த போது 'கடல்சூழ் இலங்கைக்கயவாகு வேந்தன்' அங்கு அழைக்சப்பட்டிருந்ததாகவும் அவனே பத்தினி வழிபாட்டை இந்நாட்டுக்குக் கொண்டுவந்ததாகவும் கூறப்படுகிறது.

இலங்கை என்ற பெயருக்குக் 'கடல் சூழ் இலங்கை' என்று கடல்சூழ் என்ற அடைகொடுத்துக்கூற வேண்டிய தேன் என்ற கேள்வி எழுகிறது. கடலாற் சூழப்படாத இலங்கையும் உண்டா என்று நோக்க வேண்டும். இலங்கை என்பது ஆற்றிடைக்குறை யைக் குறிக்கும் என்கிறது பழைய தமிழ் நிகண்டு. தமிழ் நாட்டின் காவிரிநதியிலே மிகப்பிரபலமான ஆற்றிடைக்குறை 'ஸ்ரீரங்கம்' 'திருவரங்கம்' முதலிய பெயர்களால் வழங்கப்படுகிறது. ஸ்ரீ, திரு முதலிய அடைமொழிகளை நீக்கி விட்டால், அரங்கம், (அதா வது 'ரங்கம்' தமிழ் மொழிக்குரிய மகர ஈறையும் நீக்கி விட்டால், 'ரங்க') என்பது எஞ்சுகிறது. இன்னெரு திராவிட மொழியான தெலுங்கில் 'லங்க' என்ற சொல், தமி ழில் அரங்கம் என்பதற்கு நேரான சொல்லாக, அதே பொருளான 'ஆற்றிடைக்குறை' என்பதில் வழங்குகிறது. நிகண்டு குறிப்பிடும் இலங்கை தெலுங்கு மொழியிலுள்ள 'லங்க' என்பதுடன் தொடர்புடையதாக இருக்க வேண்டும். மேலும் சங்ககாலத் தமிழகத்திலே சோழமண்டலத்துக்கு வடக்கிலே, தொண்டைமண்டலத்தின் தென்பகுதியிலே 'மாவிலங்கை' என்னெரு பிரதேசம் இருந்தது சிறுபாணற்றுப் படையிலிருந்து தெரியவருகிறது. தெலுங் கிலும் தமிழிலும் வழங்கிய பிற இலங்கைகளிலிருந்து நம் நாட்டை வேறுபடுத்திக்காட்டு வதற்காக, 'கடல்சூழ் இலங்கை' என்ற தொடர் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

'லங்க', 'ரங்க' என்ற இருவடிவங்களேயும் ஒப்பிடும் போது, ர, ல என்னும் ஒலி கள் மாறிநிற்பதைக் காணலாம். கிழக்கு இந்தியாவில் ரகரம் லகரமாக ஒலிக்கப்படுவது உண்டு. மகதம், கலிங்கம், முதலிய பகுதிகளிலே இந்த ஒலிமாற்றம் பயின்று வழங்கியது; கலிங்கத்திலிருந்து சிங்களவரின் முன்னேரும் மகதத்திலிருந்து பௌத்தமும் நம் நாட்டுக்கு வந்ததாகக் கருதப்படுகிறது. 'லங்கா' என்பது இந்நாட்டின் பெயராக நிலைபெற்றமைக்கு இத்தொடர்புகள் காரணமாக இருக்க வேண்டும். ஆனல் இராமாயண கால மன்னன் பெயர்மட்டும் இலாவணன் என்று வழங்காது இராவணன் என்றே பொதுவாக வழங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறது. ஆனால், யாழ்ப்பாண இராச்சியத்தில் அரசகேசரி இரகுவம்சம் இயற்றியபோது இராவணனை இலாவணனென்று குறித்துள்ளார். யாழ்ப்பாண அரசகுலம் கலிங்கனாகிய உக்கிரசிங்கனால் ஆரம்பித்து வைக்கப்பட்டதென யாழ்ப்பாணவைபவமாலை கூறுவது இங்கு கவனிக்கத்தக்கது.

இலங்கை என்ற பெயரை இந்த நாட்டைக் குறிப்பதற்கு வழங்கிய முதல் தமிழ் நூலாகிய சிலப்பதிகாரம் எழுந்த காலம் எது என்பதிலே அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு காணப்படுவது துரதிருஷ்டமாகும். கயவாகுவின் காலம் கி. பி இரண்டாம் நூற்றாண்டு எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சிலப்பதிகாரக் காலம் கி. பி. நான்காம் நூற்றாண்டு என்று கூறுவோர். வாதங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியனவாக உள்ளன. எனவே கி. பி. இரண்டாம் அல்லது நான்காம் நூற்றாண்டிலே நம்நாடு இலங்கையெனத் தமிழில் வழங்கப்பட்டமைக்கு நிச்சயமான சான்று உண்டு.

தேவார காலத்திலே, தமிழ்ப்பெரியோர்கள் நம்நாட்டை இலங்கையென வழங்கியதற்குப் பரவலான குறிப்புகள் காணப்படுகின்றன. அவற்றுள் மிகப்பெரும்பாலான இராவணனைக் குறிப்பிடும்போது அவனுடன் தொடர்புபடுத்தி இலங்கையைக் கூறுவனவாம். கடல் சூழ்ந்த இலங்கை என்று அவர்கள் சில இடங்களிலே குறிப்பிடுவதால், அவர்கள் கருதுவது நம் நாட்டையே என்று கூறலாம். 'அதிர்கடல இலங்கை', 'அலையார் கடல் இலங்கை', 'எறியார் கடல் சூழ் இலங்கை', கடல் வேலி இலங்கை', 'திரையார்ந்த மாகடல் சூழ் தென்னிலங்கை' முதலியன திருஞானசம்பந்தர் தேவாரத்திலே, கடல் சூழ்ந்த இலங்கை என்ற பொருளில் வருகின்றன. 'கடலிலங்கை', பொருகடல் இலங்கை' முதலியன திருநாவுக்கரசர் தேவாரத்தில், இதே பொருளில் வரும் எடுத்துக் காட்டுகளாகும். இராவணன் கதையோடு நேரடியாகச் சம்பந்தப்படாத குறிப்புகளுக்கு உதாரணமாக, தொண்டரடிப்பொடியாழ்வார் திருவரங்கத்திற் பள்ளிகொள்ளும் திருமாலைப்பாடும்போது 'வடதிசை பின்புகாட்டித் தென்றிசை இலங்கை நோக்கி கடல் நிறக்கடல்' துயிலுவதைப் பாடியுள்ளமையை எடுத்துக் காட்டலாம்.

இலங்கை என்னும் பெயரின் வழக்கு இவ்வாறாக, ஈழம் என்றபெயர் தூய தமிழ்ப் பெயராகக் காணப்படுகிறது. ழகரம், திராவிடத்துக்கும் சிறப்பாக உரிய ஒலியாகும். எனவே, ழகர ஒலியை உடைய இப்பெயர் ஆரியம் முதலிய பிற மொழிகளில் இருந்து வந்ததாக இருக்க முடியாது. இச்சொல் நம்நாட்டுக்குப் பெயராக எப்படி வந்தது என்றது தெளிவாகத் தெரியவில்லை. ஈழம் என்ற சொல்லுக்கு பொன் என்று ஒரு பொருளும் கள் என்ற இன்னொரு பொருளும் உண்டு. பொன் என்ற பொருளில், ஈழம் என்பது இந்த நாட்டுக்கு வழங்கத் தொடங்கியிருக்கலாம், இந்தியர்கள் கடல்கடந்து வணிகம் செய்து பெரும் பொருளீட்டிய நாடுகளுட் சிலவற்றை சுவர்ணபூமி (பொன்பூமி) என்றும் சுவர்ணதீப (பொன்தீவு) என்றும் வழங்கினர். இந்தோ சீனு, இந்தோனேசியா முதலியவை முறையே இவ்வாறு பெயர் பெற்றன. இலங்கையின் செழிப்பை நோக்கிய தமிழர் ஈழம் என்ற பெயரை வழங்கியிருக்க வேண்டும்.

தமிழ் நாட்டின் எல்லைகளை வகுத்துக் கூறும் மிகப் பழைய தமிழ் நூலாகத் தொல்காப்பியத்தையும் சிலப்பதிகாரத்தையும் கூறலாம். இவை தமிழ் நாட்டின் வட எல்லையாக வேங்கடத்தையும் தென்னெல்லையாகக் குமரியையும் கூறுகின்றது. குமரிமுனை இன்றைய தமிழ்நாட்டின் தென்னெல்லையாகக் காணப்படுகிறது. சிலப்பதிகாரத்துக்கும் தொல்காப்பியத்துக்கும் உரையெழுதிய இடைக்காலப் பெரியோர்கள் குமரி என்பது குமரிமுனையை அன்றிக் குமரியாற்றைக் குறிக்கின்றதெனக் கூறியுள்ளனர். குமரியாற்றை அடுத்திருந்த பகுதியைக் கடல்கொண்டு விட்டதென்பது அவர்களின் விளக்கம். இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்குச் சான்றாக அவர்கள் எடுத்துக் காட்டுவது முச்சங்கம் பற்றி இறையனாரகப் பொருளுரையிற் கூறப்படும் கதையாகும். முச்சங்கம் பற்றிய பிற பல விடயங்களைப் போல், கடல் கொண்ட நாடுகளைப் பற்றிய விடயங்களும் செயற்கைத் தன்மை வாய்ந்தனவாக, நம்புதற் கரியனவாகக் காணப்படுகின்றன. நாற்பத்தொன்பது நாடுகள் கடல் கொண்டனவாம். அவற்றின் விபரங்கள்:— ஏழ்தெங்க நாடு, ஏழ்மதுரை நாடு, ஏழ்முன்பாலை நாடு, ஏழ்பின்பாலை நாடு, ஏழ்குன்ற நாடு, ஏழ்குண காரைநாடு, ஏழ்குறும்பனை நாடு ஏழு ஏழு நாடுகள் குறிப்பிடப்பட்டு, நாற்பத்தொன்பது என்ற கணக்கு காட்டப்படுகிறது. ஏழ் என்பது மேற்காட்டிய தொடர்களில் ஏழு என்ற எண்ணைக் குறியாது வேறுபொருளில் வந்திருக்கலாம் போலத் தெரிகின்றது. ஈகாரமும் ஏகாரமும் நெருங்கிய ஒற்றுமையுடைய ஒலிகள். இவை ஒலிநூலாரால், முன்னண்ண உயிர்களெனக் கூறப்படும். முன்பல்லும் அடிநாவிளிம்பும் உறப்பிறக்கும் ஒலிகள் இவை. தென்னிந்தியத் தமிழ் நாட்டுக்குத் தமிழகம் என்ற பண்டைய பெயர் இருந்ததுபோல, இலங்கைக்கும் ஏழகம், என்று பெயரிருந்து, அது மருவி ஈழகம், ஈழம் என்று வந்திருக்கக்கூடும். இன்று ஆராய்ச்சி உள்ள நிலையில், ஈழம் என்ற பெயர் இந்த நாட்டுக்கு எப்படி வந்ததென நிச்சயமாகக் கூறமுடியவில்லை.

சங்க காலத்திலேயே இலங்கைக்கு ஈழம் என்ற பெயர் வழங்கியதற்குச் சான்று காணப்படுகின்றது. சங்ககாலம் என்பது கி. பி. மூன்றாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட பகுதி என்பது. இன்றைய ஆராய்ச்சியாளராற் பொதுவாக ஒப்புக் கொள்ளப்படுகின்றது. சங்க காலத்து வாழ்ந்த வலிமை மிக்க தமிழ் மன்னர்களுள் ஒருவனான சோழன் கரிகாற் பெருவளத்தானைப் பாடிய பட்டினப் பாலையில், 'ஈழத்துணவும காழகத்தாக்கமும்' காவிரிப்பூம்பட்டினத் துறைமுகத்தில் வந்திறங்கியமை கூறப்படுகிறது சோழநாடு வளம்மிக்கது; சோறு உடைத்து என்று ஔவையாராற் சிறப்பித்துப் பாடப்பட்ட பெருமையுடையது; காவிரியாற்றுப் பாசனத்தால் சோழவளநாடு என்ற சிறப்புப் பெயர் பெற்ற சோழ நாட்டுக்கு, ஈழநாட்டிலிருந்து உணவு போயிருக்கிறது. ஆனல் துரதிஷ்டவசமாக, போன உணவு என்ன என்ற விபரம் கிடைக்கவில்லை திராவிடமொழிகளுக்குச் சிறப்பாக உரிய 'ழகரம்' ஈழம் என்பதில் இடம்பெற்றிருப்பது போலச் சோழநாடு என்பதிலும் இடம் பெற்றிருக்கின்றது. சோழநாடு என்பதிலும் இடம் பெற்றிருக்கின்றது. சோழநாடு என்ற பெயர் சோழர் ஆட்சி செய்தமையால், ஏற்பட்டிருக்கவேண்டும். ஈழநாடு என்ற பெயருக்கு அதுபோன்ற விளக்கம் கொடுக்கச் சான்றில்லை.

ஈழம் என்ற வழக்குச் சங்க காலத்திலேயே இருந்ததற்குச் சோழநாட்டில் இருந்த மட்டுமல்லாது, பாண்டிய நாட்டிலிருந்தும் சான்று கிடைக்கின்றது. பண்டைக் காலத் தமிழகத்தில், தமிழைச் சிறப்பாக வளர்த்த நாடு பாண்டிய நாடேயாகும். சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பெருமை பாண்டியருக்கே வழங்கப்படுகின்றது. முதற் சங்கமும் கடைசிச் சங்கமும் இருந்த இடங்களின் பெயராக மதுரை என்பது குறிப்பிடப்படுகிறது.

சோழவளநாட்டைச் சோறுடைத்து என்று பாடிய ஔவையார் பாண்டிய நாட்டையே தமிழ் உடைத்து என்று பாடியுள்ளார். தமிழ் நாடு என்ற பெயர் பாண்டிய நாட்டுக்கே சிறப்புப் பெயராக வழங்கியுள்ளது சங்ககாலத் தமிழ்ப் புலவர்களுள் ஒருவர் ஈழத்துப் பூதந்தேவனார் ஆவார். சங்ககாலத் தமிழ்ப் புலவர்கள் வரிசையிலே, ஈழத்துப் பதந்தேவனார் மதுரை ஈழத்துப் பூதந்தேவனார் என்று இரண்டு பெயர்கள் இடம் பெறுகின்றன. மதுரையிலே குடியேறி வாழ்ந்த ஈழநாட்டுப்புலவராகிய பூந்தேவனார் என்ற பொருளிலே மதுரை ஈழத்துப்பூதந்தேவனார் என்ற பெயர் வழங்கியிருக்க வேண்டும். சங்க நூல்கள் இவர் பாடியனவாக ஏழு பாடல்கள் காணப்படுகின்றன. அகநானூறு;- 88,231, 01, குறுந்தொகை:- 189, 343, 360, நற்றிணை ;- 366. இவையாவும் தூய காதலொழுக்க

மாகிய அன்பின் ஐந்திணையை மரபு பாடுவனவாக அமைந்துள்ளமையால் இவற்றிலிருந்து வரலாற்றுச் சான்றுகள் எவற்றையும் பெற்றுக் கொள்ள முடியாமல் இருக்கின்றது சங்க காலப் புலவர்களும் ஒரு சிறு பகுதியினர் வடமொழித்தொடர்பான பெயர்களை உடையவர்களாக இருக்கின்றனர். பூதந்தேவனார் என்ற பெயருள் அமைந்துள்ள 'பூத, தேவா, என்பன வடமொழித் தொடர்புடையனவாகக் காணப்படுகின்றன.

மேற்காட்டியன போன்ற இலக்கியச் சான்றுகளுக்கு வரலாற்றாசிரியர் அதிக முக்கியத்துவம் கொடுப்பதில்லை. இலக்கியச் சான்றுகளிலும் கூடிய முக்கியத்துவம் தொல்பொருள்களுக்குக் கொடுக்கப்படுகிறது. தொல்பொருள்களில் கூட பண்டைய இடைக்கால வரலாறுகளிலே சாசனச்சான்றுகளுக்கும் இக்கால வரலாற்றிலே ஆவணச் சான்றுகளுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இலங்கைக்கு மிக அண்மையிலே புவியியல் ரீதியில் அமைந்துள் பாண்டிநாட்டுக்கும் இலங்கைக்கும் ஆதிகாலத்திலிருந்து நெருங்கிய உறவு இருந்திருக்கிறது போலத் தெரியவருகிறது. அந்த உறவை விளக்க வேண்டிய தேவையே விசயனுக்கும் தோழர்களுக்கும் மனைவிமார்களும் உதவியாளர் தொழிலாளர்களும் மதுரையில் இருந்து வந்து சேர்ந்தனரெனச் சிங்களவர்களுடைய மரபுவழிவரலாறான மகாவம்சம் கூறுகிறது. இலங்கையில் உள்ள மிகப்பழைய சாசனங்களுக்குச் சமகாலத்தனவான தமிழ்நாடுச்சாசனங்கள் ஒன்றில் ஈழம் பற்றிய குறிப்பு வருகிறது.

பாண்டிய நாட்டுத் தலைநகரான மதுரைக்கு அண்மையிலுள்ளதும் முருகனுடைய ஆறுபடைவீடுகளில் முதலாவதுமாகிய திருப்பரங்குன்றத்துமலையிலே அச்சாசனம் கிடைத்துள்ளது இச்சாசனம் ஆதிகாலத்துக் குகைச்சாசனங்களாகும். பௌத்த-சமண துறவிகள் மாரிகாலத்திலே தங்குவதற்காக ஊரின் ஒதுக்குப்புறமாக உள்ள குன்றுகளிலே குகைகள் அமைந்துள்ள பகுதிகளிலே படுக்கைகள் அமைத்துக் கொடுக்கப்பட்டு அவ்விபரங்கள் சுருக்மாகக் குகைகளிலே வரையப்பட்டுள்ளன. அத்தகைய சாசனங்களுள் ஒன்றான திருப்பரங்குன்றத்துச் சாசனம் 'ஈழகுடும்பிக' ளைக் குறிப்பிடுகிறது. இது ஈழத்தைச் சேர்ந்த இல்லறத்தானைக் குறிப்பிடுவதாக இருக்க வேண்டும் துறவிகளுக்குப் படுக்கை வசதி செய்து கொடுத்த ஒருவர் தாம் துறவியல்ல என்பதைச் சுட்டுவதற்காகக 'குடும்பிகள்' என்று தன்னைக் கூறிக்கொண்டிருக்க வேண்டும்.

இந்தச் சாசனத்தின் காலத்தினைப்பற்றிக் கருத்து வேறுபாடு காணப்படுவது துரதிஷ்டவசமானது. கே. வி. சுப்பிரமணிய ஐயர் என்ற சாசனவியலாளர் தமிழ் நாட்டுக் குகைச் சாசனங்கள் யாவும் கி.மு மூன்றும் நூற்றுண்டைச் சேர்ந்தவை என்று கொண்டார். சென்னை பல்கலைக்கழகத்துப் பண்டைய இந்திய வரலாறு, தொல்லியல் என்பவற்றிற் பேராசிரியராக இருந்தவரான ரீ. வி. மாகாலிங்கம் திருப்பரங்குன்றத்துச் சாசனக்காலம் கி. மு. முதலாம் நூற்றுண்டு என்று கொண்டார். தமிழ் நாட்டுக் குகைச சாசனங்களைச் சீராக வாசித்து அண்மையிலே புகழ் கொண்ட ஐராவதம் மகாதேவர் திருப்பரங்குன்றத்துச் சாசனம் கி. பி. முதலாம், இரண்டாம் நூற்றுண்டு காலப்பகுதியைச் சேர்ந்ததெனக் கொண்டார். எவர் கொள்கையை ஏற்றாலும், இன்று சங்க இலக்கியங்களெனக் கொள்ளப்படுபவை தோன்றிய காலத்தில் அல்லது அதற்கு முன்பே இந்தச் சாசனம் தோன்றிவிட்டது என்பது தெளிவு.

ஈழம் என்ற பெயரின் தோற்றம் பற்றி உவில்ஹெல்ம் கெய்கர் என்பவர் பல ஆண்டுகளுக்கு முன்பு வெளியிட்ட பொருந்தாக் கூற்று ஒன்று பேராசிரியர் மகாலிங்கத்தாலும் எடுத்தாளப்பட்டுள்ளதால், அதைப்பற்றிச் சிறிது நோக்க வேண்டும். சிங்கள என்ற சொல் பாளிமொழியிலே சீஹள என்று வழங்க இடையிலுள்ள வலியற்ற ஒலியான உறகரம் மறைய சீளஎன நின்று அது ஈள என மாறி அது ஈழ என மாறியிருக்க வேண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டும் என்பதே கெய்கரின் ஆராய்ச்சி. அந்தச் செருமானியர் கருத்து வெளியிட்ட காலத்தில், ஆராய்ச்சி இன்றுள்ள நிலைக்கு வளரவில்லை. ஈழம் தொன்மையான வழக்கு என்பது உணரப்படவில்லை. சிங்கள, சீஹள என்பனவற்றுக்குத் தொன்மையான சாசனச் சான்று எதுவும் கிடைக்கவில்லை. சங்ககாலத்துக்கு முற்பட உருவான இலக்கியங்களிலே தானும் இப்பெயர் வடிவங்கள் காணப்படவில்லை. கெய்கர் கூறியதுபோல, சிங்கள என்பதிலிருந்து ஈழம் வந்ததாக இருந்தால், இரண்டு பெயர்களுக்குமிடையே பல நூற்றாண்டுகள் இடைவெளியிருக்க வேண்டும். ஆனால், இன்றுள்ள நிலையில், ஈழம் மிகத் தொன்மையான பெயர் என்பதை மறுக்கமுடியாது.

இலங்கையைக் குறிப்பதற்கு ஈழம் என்ற பெயர் தொடர்ந்து வழங்கிவந்ததற்குச் சாசனச் சான்று காணப்படுகிறது. பல்லவர்காலத்திலே ஸ்ரீமாறவர்மன் ஸ்ரீவல்லபன் என்ற பாண்டிய மன்னன் இலங்கை மேற்படையெடுத்துள்ளான். அச்செய்தியைக் குறிக்க வந்த பராந்தகன் வீரநாராயணபாண்டியனுடைய செப்பேட்டுச் சாசனம் கரைகடல் ஈழங் கொண்டு என்று கூறியுள்ளது. ஒலிக்கின்ற கடலாற் சூழப்பட்ட ஈழத்தைக் கைப்பற்றி என்று இத்தொடர் விளக்கப்பட வேண்டும்.

சோழப்பெருமாமன்னர் காலத்திலே இலங்கை ஈழம் என்ற பெயராலேயே சாசனங்களுட் கூறப்படுகிறது. முதலாம் இராசராசனுடைய சாசனங்களுள் அமைந்துள்ள மெய்க்கீர்த்தி சிங்களர் ஈழமண்டலம் என்று குறித்துள்ளது. சோழர் படையெடுப்பு நடந்தபோது இலங்கை ஆட்சி சிங்களவர்கையில் இருந்திருக்க வேண்டும். மேலும் கெய்கர் சிங்கள என்பதன் திரிபாகவே ஈழம் வந்திருக்க வேண்டும் என்று கூறியதற்கு இந்தத் தொடரே காரணமாக இருந்திருக்க வேண்டும். முதலாம் இராசராசன் காலத்தில் அனுராதபுர மன்னன் உருகுணைக்கு ஓழித்து ஓடிவிட்டான். உருகுணையையும் அடிப்படுத்தி இலங்கை மன்னனைச் சிறைப்பிடித்த முதலாம் இராசேந்திரன் ஈழமண்டலம் முழுவதும் கைப்பற்றியதாக அவனுடைய சாசனமெய்க்கீர்த்தி கூறுகிறது

இலங்கையின் வடபகுதியிலே தோன்றிய யாழ்பாணம் என்பதற்கும் ஈழம் என்பதற்கும் பெயரளவில் யாழ்ப்பாடி ஒருவருக்குப் பரிசிலாக வழங்கப்பட்டதாகவும் அப்பாணர் தென்னிந்தியாவிலிருந்து மக்களைக் குடியேற்றி ஆட்சி செய்ததால் யாழ்ப்பாணம் என்ற பெயர் வந்ததாவும் யாழ்ப்பாண வைபவமாலை கூறுகிறது. யாழ்ப்பாணம் என்ற பெயர் பண்டைக்காலச் சான்றுதாரங்களில் இடம் பெறவில்லை. ஏழ்ஈழ் என்பனவற்றுக்கான ஒலி ஒற்றுமை முன்பே சுட்டிக் காட்டப்பட்டது. ஈழ் என்பதும் யாழ் என்பதும் அதேபோல ஒலி ஒற்றுமை உடையவை. யகரம் அரைவாசி உயிரெழுத்துத் தன்மையும் அரைவாசி மெய்யெழுத்துத் தன்மையும் பெற்றுள்ளமையினால் மொழியியலாளர் அதனை அரையுயிர்என்பர் யகரம் இடையான ஒலியாகும். சொற்களின் இறுதியில் இகரமும் யகரமும் ஒன்றுக்குப் பதிலாக ஒன்று வரலாம் என்ற கருத்திலேயே இகரயகரம் இறுதிவிரவும் என்று தொல்காப்பியரே சூத்திரம் அமைத்துள்ளமையை நச்சினார்க்கினியர் எடுத்துக் காட்டியுள்ளார். சொற்களின் இறுதியிலே இடம்பெற இவ்வொலி மாற்றம் சொற்களின் முதலிலும் இடம் பெற்றிருக்கக் கூடும். எனவே ஏழ் ஈழ் யாழ் என்பவை ஒரே சொல்லின் பல்வேறு வடிவங்களாக இருக்கக் கூடும்.

தமிழ் நாட்டு மண்டலம். ஒவ்வொன்றன் சிறப்பையும் கூறுவதற்குத் தமிழ்ல் ஒவ்வொரு சதகம் தோன்றியுள்ளது நூறு செய்யுள்களால் அமைந்த பிரபந்தம் சதகம், எனப்படுகிறது. தமிழ் நாட்டிலே பாண்டியமண்டல சதகம் சோழமண்டல சதகம் கொங்குமண்டல சதகம் தொண்டைமண்டல சதகம் என்பவை இயற்றப்பட்டது போல இலங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையிலும் ஈழமண்டல சதகம் எழுந்துள்ளது. ஈழமண்டலம் என்பது இங்கு நாடுமுழுவதுமே உள்ளடக்குகிறது.

கொழும்புக்கு வெளியேயிருந்து வெளிவந்த வெளிவருகிற இலங்கைத் தினசரிச் செய்திப்பத்திரிகைகள் யாழ்ப்பாணத்திலிருந்தே வெளிவந்துள்ளன. அவை தமிழ்ப் பத்திரிகைகளாக அமைந்து ஈழகேசரி ஈழநாடு எனப் பெயர் பெற்றுள்ளன.

ஈழம் என்பதும் இலங்கை என்பதும் அண்மைக் காலத்தில் வெளிவந்த தமிழ்நூல்களின் பெயர்களில் அமைந்துள்ளன. ஈழம் என்பதைக் கொண்டமைந்த தமிழ் நூல்களுக்கு உதாரணங்கள்:- ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரித்திரம் ஈழவாசகம் ஈழத்துத் தமிழ் நாவல்கள் ஈழநாட்டின் தமிழ்ச் சுடர்மணிகள் ஈழத்துத் தமிழ் நூல்வரலாறு ஈழத்துத் தமிழ் கவிதை கவிதைக் களஞ்சியம் தமிழ் இலக்கியத்தில் ஈழத்தறிஞரின் பெருமுயற்சிகள் ஈழத்து வாழ்வும் வளமும் என்பன. இலங்கை என்பதைக் கொண்டமைந்த தமிழ் நூல்களுக்கு உதாரணங்கள் – இலங்கைச் சரித்திரச் சுருக்கம் இலங்கை மான்மியம் இலங்கை வளம் இலங்கையிற் கலை வளர்ச்சி இலங்கைச் சுதந்திரம் இலங்கைப் பூமி சாத்திரம் இலங்கையில் கத்தோலிக்க சமய அபிவிருத்தி முதலியன.

1972ம் ஆண்டு அமுலுக்கு வந்த அரசியல் திட்டத்தின் படி இலங்கையின் பெயர் ஸ்ரீலங்கா என்று சிங்களத்திலும் தமிழ் தவிர்ந்த பிற மொழிகளிலும் வழங்கும் என அறிவிக்கப்பட்டது தமிழில் லங்கா என்பதற்கு நேரான பதமாக நீண்டகாலம் வழங்கிவந்த இலங்கை என்று வழங்கலாமென அறிவிக்கபட்டுள்ளது. பழந் தமிழ்ப் பெயரான ஈழம் என்பதற்கு அங்கீகாரம் கிட்டவில்லை.

ஆ. வேலுப்பிள்ளை பேராசிரியர் தமிழ்த்துறை பேராதனை

நம்மை நாமே தாழ்வாகக் கருதும் மனப்பான்மை நம்மிடம் தடித்திருக்கிறது. அதனாலேயே நாம் அன்னியருக்கு அடிமைப் பட்டிருக்கின்றோம். மனித சமூகத்தில் ஏற்றத்தாழ்வு என்பதே கூடாது சமதருமத்தையும் சுதந்திரத்தையும் நிலைநிறுத்தவே நாம் பாடு பட்டு வருகிறோம் எல்லோரும் தலைநிமிர்ந்து நிற்கவேண்டும் நம்பிக்கையுடன் வாழவேண்டும்;

ஜவகர்லால் நேரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH BEST COMPLIMENTS

FROM

**Rasheed's**

85 Castle Street

Kandy



சகல பலசரக்கு சாமான்களுக்கும்

இன்றே விஜயம் செய்யுங்கள்

**Sridaran's Stores**

64, King Street

Kandy



*For*

WEDDING SUITS

BELL BOTTOMS

SHIRTS

CLOTHS (covered) BUTTON

undertaken

**MENS TAILOR**

QUEENS HOTEL

KANDY



VISIT US FOR

QUALITY PHOTOGRAPHS

AT

**Midland Studio**

46, King Street,

Kandy



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பளிப்பு


இலங்கைப் பல்கலைக்கழக வெளிநிலை பட்டப்படிப்புகள்

நிறுவனம்

சட்டம், கலை, விஞ்ஞானம், வர்த்தகம், தொலைக்காட்சி, குளிர்சாதனம்.

148/1, STANLEY ROAD — JAFFNA


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH BEST COMPLIMENTS

OF

**RADIOS PATHY**

58, KASTHURIAR RD — JAFFNA

WITH THE BEST COMPLIMENTS

FROM

**S. P. SAMY & Co.**

193, POWER HOUSE Rd.

JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BEST COMPLIMENTS

FROM

**Studio Mallika & Co.**

KANDY

---

கன்னியரின் கனவுலக மலராக

திகழ

**சலூன் ராணிக்கு**

ஒருமுறை விஜயம்செய்து உங்கள்

அழகை உறுதிசெய்யுங்கள்

**Saloon Ranee**

13, Rajaveedy

Kandy

---

BEST COMPLIMENTS

FROM

**Studio Venus**

KANDY

---

**FOR** BELL BOTTOMS

SHIRTS

**The Golden Best Tailors**

41, Kotugodella Veethy

Kandy

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்கள வாத்தியம்: நாகசுரம்

சச்சி. சிறீகாந்தா.
உதவி விரிவுரையாளர் (உயிரிரசாயனத்துறை) மருத்துவ பீடம்

இந்துக்களின் திருமண நிகழ்ச்சிகளில் தாலிக்கு அடுத்தபடியாக முக்கிய பங்கை வகிக்கும் பொருள் உண்டாயின் அது நாகசுரமே. நாகசுர ஓசையின் பின்னணியில்தான் எம் திருமணச் சடங்குகள் இன்றுகூட நிகழ்வது கண்கூடு இம்மங்களகரநாளில் முக்கிய இடம் பெறும் காரணத்தாலோ என்னவோ நாகசுரமே இசைக்கருவிகளில் மங்களவாத்தியம் எனும் சிறப்புப் பெயரைப் பெற்றுள்ளது.

## தோற்றம்

இது மிகப் பிற்காலத்திலே பழக்கத்துக்கு வந்த இசைக்கருவியாகும். சங்ககாலத்து இடைக்காலத்து தமிழ் நூல்களிலே இக்கருவியைப் பற்றி ஒரு செய்தியுங் காணப்படவில்லை கோயில்களிலே இசைக்கருவி வாசிப்போருக்கு மானியம் அளிக்கப்பட்ட செய்திகளைக் கூறுகின்ற சோழ பாண்டிய அரசர் சாசனங்களிலும் இக்கருவி கூறப்படவில்லை. கி. பி. 17ம் நூற்றுண்டிலே இயற்றப்பட்ட பரத சங்கிரகம் என்னும் நூலிலே இக்கருவியின் பெயர் காணப்படுகின்றது.

பூரிகை நாகசுரம் பொற்சின்னம் எக்காளை
தாளை நவரிசங்கு வாய்வீணை — வீரியஞ்சேர்
கொம்பு தித்தி காளை குழலுடன் ஈராறும்
இன்பார் துணைக்கருவி என்

என்றொரு வெண்பா. இந்நூலிலே இடம்பெற்றுள்ளது இதனிலேயே முதன்முதலாக நாகசுரத்தின் பெயர் கூறப்படுகிறது எனக்கொள்ளின் சுமார் 350 ஆண்டுகளாகவே இக்கருவி பழக்கத்துக்கு வந்துள்ளது என்று ஊகிக்கலாம்.

## பெயர்க்காரணம்

தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த நாகூர் நாகபட்டினம் முதலிய இடங்களில் இருந்த நாகர் எனும் குடியினரைச் சேர்ந்தவர்களாலேயே இக்கருவி உண்டாக்கப்பட்டு என்றும் அதனுல் இந்தப்பெயர் கருவிக்கு ஏற்பட்டதென்றும் கருதப்படுகிறது. நாகத்தின் உருவம்போல நீண்டிருப்பதால் இதனை நாகசுரம் என்றூர்கள் எனினும் பொருந்தும்.

## கருவியின் அமைப்பு

இக்கருவி ஆச்சா மரத்திஞற் கடைந்து உருவாக்கப்படும் உடலின் மேற்பாகம் சிறுத்தும் அடிப்பாகம் வரவரச் சற்றுப் பெருத்தும் இருக்கும். இதன் மேலுங் கீழுமாக இரு அணைசுகள் பொருத்தப்படும் முற்காலத்தில்வெண்கலத்தால் இந்த அணைசுகள் செய்யப்பட்டன; இப்போது உடலாகிய நடுப்பாகத்தைச் செய்யும் மரத்திஞலேயே இவையும் செய்யப்படுகின்றன.

மேல் அணைசு சுமார் 4 அங்குல நீளம் உடையது இந்த அணைசிலே செருகி உதட்டிலே வைத்து வாசிக்க உதவியாக இருக்கும் பகுதி சீவாளி அல்லது நறுக்கு எனப்படும். இதனை நேரே அணைசில் பொருத்தி வாசித்தல் இயலாது; அணைசிற்கும் சீவாளிக்குமிடையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெண்டை என்னும் பகுதி அணைசோடு பொருத்தப்படும் ஓரங்குல நீளத்திற்கு மேற்பாகத்தை காட்டிலும் அடிப்பாகம் சற்று விரித்திருக்கும் செப்புத் தகட்டாலான குழாயே கெண்டையாகும் இதன் இரு நுனிகளிலும் தேங்காய் ஓட்டினால் செய்த இரு வளையங்கள் கோர்த்து வரிந்து கட்டப்பட்டிருக்கும்.

கொறுக்கைத்தட்டை 2 அங்குல நீளத்துக்கு நறுக்கி நெல் வேகவைக்கும்போது அதனுடன் சேர்த்துப் பதமாக வேகவைத்து எடுத்துகிட்டிப் பலகையில் கொடுத்து நன்றாக நெருங்கும்படி செய்து ஈரம் உலர்ந்தபின் அதன் அடிப்பாகத்தை முறுக்கிய நூலால் ஐந்து அல்லது ஆறு சுற்று இறுக்கிக் கட்டி அமைப்பதே சீவாளியாகும்.

கெண்டையின்மேல் சீவாளியானது செலுத்தப்பட்டு வாசிக்கப்படும். வாசிக்கும் போது உதட்டின் அழுக்கத்தால் சீவாளியின் துவாரம் சிலசமயங்களில் ஒட்டிக்கொள்ளும் இதனைத் திறக்கச்செய்ப சுமார் 4 அங்குல நீளமுள்ளதான தந்தந்தாற் செய்யப்பட்ட ஊசி போன்ற குச்சில் எனும் பகுதி பயன்படும். கச்சேரியின் தொடக்கத்தில் நாயனம் வாசிப்பவர் குச்சிலால் சீவாளியை நீவி பிப்பீ பீங்பி எனும் ஒலி எழுப்புவதை யாவரும் அறிவீர்கள் மேல் அணைசுக்குக் கீழ சுமார் 4 அங்குல இடைவெளியிலிருந்து சுமார் அங்குலத்திற்கு ஒன்றாக உடற்பாகத்திலே 7 துளைகள் வரிசையாக இடப்பட்டுள்ளன. இவற்றிற்குக் கீழே 4 அங்குலந் தள்ளி ஒரு துளையும் அதனை மையமாகக் கொண்டு அதன் இரு பக்கங்களிலும் இரண்டிரண்டு துளைகளும் உள்ளன.

கீழ் அணைசு வட்ட வடிவமாக அடிப்பாகம் சுமார் 6 அங்குலம் விட்டமுடையதாக இருக்கும் இதன் வாய் விரிந்திருப்பதால் நாகசுர ஒலி வெகுதூரம் கேட்கக்கூடியதாயுள்ளது காற்றை அழுத்தமாகவும் மென்மையாவும் ஊதுவதால் 7 துளைகளிலிருந்து $2\frac{1}{2}$ ஸ்தாயிவரை 7 சுரங்களும் வாசிக்கப்படுகின்றன. உதட்டின் பிடிப்பால் அரைச்சுரம் கமகம் பிருக்கா முதலியவைகள் மிகுந்த பிரயாசத்துடன் வாசிக்கப்படுகின்றன எவ்வளவு விளம்ப சௌக்க காலமாயினும் சாதக பலத்தினால் வாசிக்க நாகசுரம் இடமளிக்கிறது.

**வகைகள்**

நாகசுரத்திலே திமிரி பாரி என இருவகைகள் உண்டு திமிரி அளவிற் சிறியது பாரி பெரியதாகும். திமிரியில் 3 கட்டைச் சுருதிக்கும் குறையாமல் 5 கட்டைச் சுருதிவரை வாசிக்கலாம் பாரி என்பது $2\frac{1}{2}$ கட்டைச சுருதிக்கு மேற்படாமல் 1 கட்டைச் சுருதிவரை வாசிக்க உதவுகிறது.

முற்காலத்தில் திமிரி நாயனந்தான் கையாளப்பட்டுவந்தது. இதனை மிடுக்காகவும் சரளமாகவும் கையாளலாம். இதற்குப் போதியளவு சாதகம் அத்தியாவசியமானது.பின்னர் நாகசுரச் சக்கரவர்த்தி திருவாவடுதுறை டி. என். இராசரத்தினம்பிள்ளை அவர்களின் காலத்தில்தான் 1903—1956 பாரி நாயனம் கையாளப்படத் தொடங்கியது, பாரி வகையானது கமகப் பிரயோகங்களை இலகுவாகச் செய்யுந் தன்மையையும் மென்மையையும் நிரப்பியது.

**தமிழகக் கலைஞர்கள்**

ஓர் இசைக்கருவி காலத்தால் அழியாது இருந்து வருவதற்கும் அது வழக்கொழிந்து போவதற்கும் காரண கர்த்தாக்கள் அதனைக் கையாண்டுவரும் கலைஞர்களே. நாகசுரத்தை நன்கு வாசிப்பவர் அனைவருமே தமிழகத்தின் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று பொதுப்படையாகவே கூறலாம்.

திருவாரூர் நடேசப்பிள்ளை அவர் தம்பி கிருஷ்ணப்பிள்ளை நாகசுரச் சக்கரவர்த்தி திருவாவடுதுறை டி, என் இராசரத்தினம்பிள்ளை இவரின் குருவும் தாய் மாமனுமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமருகல் நடேசபிள்ளை ஆகியோர் பெரும்புகழ் பெற்ற தஞ்சை மாவட்ட நாகசுர வித்தகர்களாவர். மேலும் கும்பகோணம் சிவக்கொழுந்து குளிக்கரை பிச்சையப்பா வேதாரண்யம் வேதமூர்த்தி கூறைநாடு நடேசப்பிள்ளை மன்னார்குடி சின்னப்பக்கிரியாபிள்ளை செம்பொன்னார் கோவில் இராமசாமிப்பிள்ளை கோவிந்தசாமிப்பிள்ளை திருவிடை மருதூர் வீருசாமிப்பிள்ளை திருவெண்காடு சுப்பிரமணியபிள்ளை திருவீழிமிழலை சகோதரர்கள் காக்காயி நடராசசுந்தரம் நாமகிரிப்பேட்டை கிருஸ்ணன் போன்றோரும் தஞ்சை மாவட்டம் தந்த நாகசுர மேதைகளாவர்

இவர்களைத்தவிர மற்றைய மாவட்டங்களைச் சார்ந்தவர்களில் காருகுறிச்சி அருணாசலம்பிள்ளை சேக் சின்ன மௌலானா சாகிப் மதுரை சேதுராமன் பொன்னுசாமி சகோதரர்கள் போன்றோரும் புகழ்பெற்ற நாகசுரக் கலைஞர்களே.

ஈழத்துக் கலைஞர்கள்

ஈழத்துக் கலை உலகிலும் தமக்கென்று ஒரு தனித்துவமான இசைப்பரம்பரையில் பழமை மீறுமல் பேணிவருபவர்கள் எம் நாகசுரக் கலைஞர்களே. மேலும் இவ்விசைக்கருவிகளைக் கையாளுபவர்களே இன்றுகூட இதனைத் தம் முழுநேரத் தொழிலாகக் கைக்கொண்டு வருகின்றார்கள் என்பது கண்கூடு.

யாழ்ப்பாண மாவட்டத்திலேயே ஈழத்து நாகசுரக் கலைஞர்கள் செறிந்து காணப்படுகிறார்கள். இங்குகூட அநேக நாகசுரக் கலைஞர்களை ஈந்தபெருமை இரு ஊர்களான இணுவிலையும் அளவெட்டியையுமே சாரும். ஈழத்து நாகசுரக் கலைஞர் அட்டவணை தயாரிக்கப்படின் அதனில் மாவிட்டபுரம் இராசா மாவிட்டபுரம் உருத்திராபதி இணுவில் உருத்திராபதி அப்புலிங்நம்பி எஸ் ஆறுமுகப்பிள்ளை அளவெட்டி என். கே. பத்மநாதன் அளவெட்டி எம். பி. பாலகிருஸ்ணன் சோண்டாவில் ஏ. பாலகிருஷ்ணன் இணுவில் என். ஆர். கோவிந்தசாமி இணுவில் கே. ஆர். சுந்தரமூர்த்தி இணுவில் கானமூர்த்தி பஞ்சமூர்த்தி இணுவில் சுந்தசாமி சாவகச்சேரி எஸ் பஞ்சாபிகேசன் எம். எஸ். சண்முகநாதன் பல்லவி இராசதுரை ஆகியோர் பற்றிய குறிப்புகள் கட்டாயம் இடம்பெறும். மேலும் கொழும்பில் வதியும் இந்திய வம்சாவழி நாகசுரக் கலைஞர்களில் பி, கந்தசாமி கே. பி. இராசமாணிக்கம் போன்றோரும் குறிப்பிடத்தக்கவர்கள்.

வெள்ளம்போல் தமிழர் கூட்டம்
வீரங்கொள் கூட்டம் அன்னார்
உள்ளத்தால் ஒருவரே மற்
றுடலினுற் பலராய்க் காண்பார்
கள்ளத்தால் நெருங்கொ ணுதே
எனவையம் கலங்கக் கண்டு
துள்ளும் நாள் எந்நாள் உள்ளம்
சொக்கும்நாள் எந்த நாளோ

பாரதிதாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவர் தருவது

உங்கள் கரங்களிலே தவழுகின்ற இளங்கதிர் உங்கள் அகங்களிலே எங்கள் முயற்சியின் முழுப்பயனையும் அளிக்கவேண்டுமென நான் விரும்பினேன். விருப்பங்கள் எல்லாம் அப்படியே நிறைவேறுவது இல்லை. இந்த இளங்கதிர் கடந்ததவணை கலைவிழாவிலே வெளிவிடப்படுமென எதிர்பார்க்கப்பட்டது அதற்காக நாமும் முயற்சித்தோம் ஆனால் அந்த முயற்சி எமது விருப்பம்போல் நிறைவேறவில்லை. எனினும் ஆரம்பத்தில் நாம் நிச்சயமாக இளங்கதிரை வெளியிடுவோம் என உங்களுக்குத்தந்த வாக்குறுதியைக்காக்க மாட்டோம் என்று நீங்கள் நம்பிக்கொண்டிருக்கின்ற ஒரு சூழ்நிலையிலே எமது இளங்கதிரின் எழுச்சி மகிழ்ச்சி அளிக்கிறது. மனநிறைவு தருகிறது குறித்தகாலத்தில் வெளிவரவில்லை என்ற குறை மறைகிறது. இந்த எழுச்சியினை எதிர் காலத்தில் இருள் மேகம் மூடிவிடாதபடி செயற் திறமை உள்ள செயற்குழுவினரைத் தெரிவு செய்கிற உரிமை சரியானமுறையிற் தமிழ்ச் சங்கஉறுப்பினர்கள் பயன் படுத்துவார்களென நம்புகிறேன். தமிழ் அனைவருக்கும் பொதுவானது. அதேபோல் தமிழ்ச்சங்கமும் பல்கலைக்கழக மாணவர்கள் அனைவர்க்கும் உரியதாகும். பேராதனைப்பல்கலைக்கழக தமிழ்ச்சங்க உறுப்பினரிடையே பிடவேறுபாடுகள் மறையவேண்டும். செயற்குழுவிற் செயல்வீரர்கள் நிறையவேண்டும்

எதிரே வருகின்ற செயற்குழுவினர் விவாதப்போட்டி பேச்சுப்போட்டி கவியரங்கம் நடத்தல் சங்க சஞ்சிகையான இளங்கதிர் வெளியீடு என்பவற்றுடன் மட்டும் நில்லாது பல்கலைக்கழகத்துடன் உள்ள திறமைமிக்க எழுத்தாளர்களை ஊக்குவித்து சிறுகதைத் தொகுதி நாவல் போன்ற இலக்கிய வடிவங்களின் வெளியீடுகளையும் செய்ய முயற்சிக்க வேண்டும்.

பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் இறையவனின் துணையொடு இந்த இளங்கதிரினை வெளியிட உதவியவர்கட்டு நன்றி சொல்லுகின்ற கடமையை இதழாசிரியர் நிறைவேற்றியுள்ள போதிலும் என்னைப் பொறுத்தவரையில் நான் சிலருக்கு குறிப்பாக நன்றி சொல்லக்கடமைப்பட்டுள்ளேன். பெருந்தலைவர் பெரும் பொருளாளர் ஆகியோர் தமிழ்ச்சங்க விடயங்களை நான் கவனித்தபோது பலவிதங்களில் பல இடங்களில் எனக்கு ஆலோசனை வழங்கியுள்ளனர். மாணவர் நலன்புரிப் பகுதி இயக்குனர் கலாநிதி பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்களும் பலவிதங்களில் உதவியுள்ளார். மேலும் பல சிரேஷ்ட விரிவுரையாளர்களும் உதவி விரிவுரையாளர்களும் ஊக்கமும் உதவியும் நான் கேட்டவேளைகளிலும் நான் சோர்ந்தபோது தேவையெனக்கண்டபோதும் தாமாகவே தந்தார்கள் இவர்கள் அனைவர்க்கும் எனது மனம்நிறை நன்றிகள்.

இறுதியாக எனது கல்வியாண்டோடு முடிந்து விட்டபோதும் இளங்கதிரின் வெளியீட்டு முயற்சிகளைத் தொடர்ந்து நடத்தி அதனை வெளிக்கொணர்ந்த இதழாசிரியருக்கும் ஏனைய செயற்குழு உறுப்பினர்கட்கும் எனது உளமுவந்த நன்றி.

கு. பரராஜசேகரம்
தலைவர்

WITH BEST COMPLIMENTS

OF

RADIOS PATHY

58, KASTHURIAR RD — JAFFNA

WITH THE BEST COMPLIMENTS

FROM

S. P. SAMY & Co.

193, POWER HOUSE Rd.

JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BEST COMPLIMENTS

FROM

**Studio Mallika & Co.**

KANDY

கன்னியரின் கலையுலக மலராக
திகழ
**சலூன் ராணிக்கு**
ஒருமுறை விஜயம்செய்து உங்கள்
அழகை உறுதிசெய்யுங்கள்

**Saloon Ranee**

13, Rajaveedy
Kandy

BEST COMPLIMENTS

FROM

**Studio Venus**

KANDY

**FOR** BELL BOTTOMS
SHIRTS

**The Golden Best Tailors**

41, Kotugodella Veethy

Kandy

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளங்கதிர் மேலோங்க

வாழ்த்துகிறோம்

**Niranjini Stores**

200, Hospital Road

JAFFNA

For all your requirements of

Aluminiumwares

Door Locks Pad Locks

Electroplating

VISIT

**Yarl Metal Industries**

250, 254, K. K. S. Rd. Jaffna

Grams: Yarl Metal Phone: 7049

Branches

**YARL METAL SALES CENTRE**

6, New Market, Jaffna

Phone: 7596

63, Bankshall Street Colombo 11

Phone 26150

**ஸ்ரீ வாணி**

SRI VANI

தேசிய கூட்டுத்தாபன

விநியோகஸ்தர்கள்

பாடசாலைப் புத்தகங்கள் உபகரணங்

களும் பெற்றுக்கொள்ளலாம்

திருநெல்வேலி

WITH THE BEST COMPLIMENTS

FROM

**Cambridge Tutorial College**

44, Stanley Road Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் பிடவைத் தேர்வுகளுக்கு
இன்றே வருகை தருக

கூறைச் சாறிகள்

நைலெக்ஸ் சாறிகள்

அங்கோபா சாறிகள்

கைத்தறி }
மின் தறி } சாறிகள்

குறைந்தவிலையில் பெற்றுக்கொள்ள

**T. Kumarasamy**
**Textiles**

PHONE 7034

Grand Bazaar, Jaffna

சகலவித இரும்பு பித்தளைச்
சாமான்கள் பலவர்ண

மைவகைகள்

சகாயமான விலையில் கிடைக்கும்

**மலாயன் றேடிங் கொம்பனி**

**சிங்கப்பூர் கொம்பனி**

கே. கே. எஸ். வீதி யாழ்ப்பாணம்

போன் 547

ஆண் பெண் சிறுவர்கட்குரிய
நவீன ஆடைகள்

றெடிமேட்டாகவும் ஆடருக்கும்

குறித்த தவணையில்
தைத்துப் பெற்றுக்கொள்ளலாம்

மறுமுறை விஜயம் செய்யுங்கள்

**நியூ டிசன்ஸ்**

15, கீழ் 7, மேல்மாடி
58, பெரியகடை யாழ்ப்பாணம்

பல்கலைக்கழக ஆசிரியர்களாலும்
அநுபவமிக்க பட்டதாரி ஆசிரியர்
களாலும் வகுப்புக்கள் நடாத்தப்
படுகின்றன

**School of Science**

Palaly Rd, Kandarmadam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

IF YOU SELECT UNIVERSAL

YOU WILL BE SELECTED TO THE

**UNIVERSITY**

# UNIVERSAL SCIENCE CENTRE

KANDARMADAM JUNCTION
JAFFNA

PARAMESWARA JUNCTION
THIRUNELVELY



அதிசிறந்த ரக கைத்தறி பிடவை
உற்பத்தியாளரும் மொத்தசில்லறை
விற்பனையாளரும்
திருமண மற்றும் வைபவங்களுக்கு
ஏற்ற
மணிப்புரி நைலெக்ஸ்
மற்றும் சேலைகளும்
பட்டுவேட்டி சேட்டிங் சூட்டிங்
ஏனைய பிடவைத் தினிசுகளைத்
தெரிவு செய்ய
சிறந்த ஸ்தாபனம்

**ஜி. எஸ். லிங்கநாதன்**

**அன் கோ.**

13, 14, பெரியகடை
யாழ்ப்பாணம்



**JAFFNA CO-OPERATIVE STORES LIMITED**

for all your requirements
of

**QUALITY GOODS**

at fair prices

"Our Motto is Service above Self"

Grams: LAKSHMI Jaffna
Phones: 438, 537, 370 Jaffna

420, HOSPITAL ROAD
JAFFNA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH THE BEST COMPLIMENTS

FROM

**Chick and Kins**

8/10, STANLEY RD

JAFFNA

சித்தி விநாயகர்

சயன்ஸ் சென்ரர்

G. C. E.

O/L and A/L

BMC Lane Jaffna

With Best Compliments

of

**Miskins Textiles**

GRAND BAZAAR

JAFFNA

**Rathy Watch Works**

**and Stores**

PROP: M, NADARAJAH

மணிக்கூடுகள் திருத்துவதில்

பிரசித்தி பெற்றவர்கள்

எங்களிடம் சைக்கிள். சைக்கிள் உப
உறுப்புகள், பெற்றோமக்ஸ், றேடியோ
பற்றறி, கமரா, மணிக்கூடுகள்
பெற்றுக்கொள்ளலாம்

42, 44, 46. Kasthuriar Road

JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

# கற்பனை அரசும் வன்முறையும்
# UTOPIA AND VIOLENCE

க. ஆனந்தநாதன் பீ. ஏ. (சிறப்பு)
உதவி விரிவுரையாளர் மெய்யியற்றுறை பேராதனை பல்கலைக்கழகம்

துறை ஒன்றிலே ஏலவே பயன்படும் எண்ணக்கருக்கள் எவ்வாறு பயன்படுகிறன என்பது பற்றிய தெளிவான தரிசனத்தைப் பெறும் முயற்சி அத்துறையின் மெய்யியலாகும். இந்த வகையிலே மெய்யியலைச் சிறப்புக் கலைமாணியாகப் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பயின்று கொண்டிருந்த வேளையில் அரசியல் மெய்யியல் (Political Philosophy) என்னும் பாடத்தில் அரசு என்றால் என்ன? என்னும் பிரதான எண்ணக்கருவான இதன் தரிசனத்தைத் தெரிவுபெற எத்தனித்தேன் அதற்செயலாக யாழ் பல்கலைக்கழக நூலகத்தில் சமகால மெய்யியலாளரான கால் பொப்பரின் Conjectures and Refulations by Karl R Popper ஆங்கில நூலிலுள்ள Utopia and Violence என்னும் கட்டுரையைப் படிக்க நேர்ந்தது அதன் கண்ணே அமைந்த அரசு பற்றிய தெளிவான விளக்கம் என்னைக் கவர்ந்தது. அதனைத் தமிழில் வெளிக் கொணர வேண்டுமென்ற அவாவினால் எழுந்ததே இக்கட்டுரையாகும் இக்கட்டுரையைப் படிக்கும் போது இதிலே இடம்பெறும் நான் என்னும் சொற்பிரயோகம் இக்கட்டுரை ஆசிரியரான கால் பொப்பரின் கருத்தே என்பதனை முதற்கண் வாசகர்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்.

அரசு என்றாலென்ன? வன்முறை என்றாலென்ன? இவற்றை நாம் ஆய்ந்து தெளிவு பெறுவதற்கு முன்பு அரசியலென்றாலென்ன என்கின்ற கேள்வி எம்மை எதிர் நோக்கி நிற்கின்றது. இதனைச் சமகால மெய்யியலாளரான கால் பொப்பர் தெளிவு படுத்துகையில் அரசியல் என்பது ஒரு செயல் அல்லது ஒரு நடவடிக்கையென்கின்றார் இதனடிப்படையில் நோக்குப்போது நவீன சமூகத்தில் இவ்வரசியலென்கின்ற நடவடிக்கையில் ஈடுபடுகின்ற ஒரு சாரார் ஜனநாயகம் தார்மீகம் சாத்வீகம் அஹிம்சை போன்றவற்றின் அடிப்படையில் இயங்குவதனையும் இன்னொருசாரார் வன்முறை பலாத்காரம் வர்க்கப் போராட்டம் இரத்தம் சிந்திய புரட்சி போன்றவற்றின் அடிப்படையில் இயங்குவதனையும் எம்மால் அவதானிக்க முடிகின்றது. ஆனால் இவ்விரு சாராரும் தந்தமது இவ்வாறான நடவடிக்கைகளுக்குப் பின்னணியாக ஓர் இலட்சிய சமுதாயம் அல்லது ஒரு கற்பனை அரசு ( Utopia ) அமைந்திருப்பதாகக் கூறுகின்றனர். மேல் கூறியவை அதனை அடைவதற்கான வழிமுறைகளேயென்றும் இவை தமது நோக்கமல்லவென்றும் கூறுகின்றனர் இவ்வாறு இவர்கள் விரும்புகின்ற கற்பனை அரசு என்றாலென்ன? அதனை அடைவதற்கு அவர்கள் மேற்கொள்கின்ற வழிமுறைகள் எவை? அவை ஏற்றவையா? இன்னோரன்ன அரசியல் மெய்யியல் வினாக்களுக்குத் தெளிவு காண முற்படுவோம்.

அரசியலில் வன்முறையை வெறுப்பவர்கள் வன்முறையால் மனிதர் வாழ்வு அழிந்து விடுமென்றும் கருதுவார்கள் நானும் வன்முறையை எதிர்ப்பவர்களில் ஒருவனே வன்முறையை எதிர்ப்பதோடு மட்டுமல்லாமல் அதனை இல்லாமற் செய்ய முடியுமென்றும் நம்புபவன் ஆனால் அம்முயற்சி கடினமானதாகும். வரலாற்றில் வன்முறையை ஒழிப்பதற்கு எதிராக எழுந்த எழுச்சிகளெல்லாம் தோல்வியிலே முடிவுற்றுள்ளன நாஸிஸம் பாஸிஸம் முதலியவை தோற்கடிக்கப்பட்டுள்ளன ஆனால் இவற்றின் வீழ்ச்சியால் மிருகத்தனமும் காட்டுமிராண்டித்தனமும் அழிந்து விட்டனவென்று கூறமுடியாது மேல நாட்டு ஒழுக்க நெறியைச் சிதைவுபடுத்துவதில் இட்லர் வெற்றியடைந்தானென்பதை நான் ஏற்றுக்கொள்கின்றேன். ஆனால் நவீன உலகில் அப்போதிருந்ததிலும் பார்க்க அதிகளவிலான வன்முறையும் மிருகத்தனமும் தாண்டவமாடுகின்றன. வன்முறையைக் குறைக்கலாம் அல்லது கட்டுப்படுத்தலாம் அது எவ்வாறெனில் நியாயத்தின் மூலம் அல்லது நீதியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலமாகும். ஆகவேதான் நான் என்னையொரு அறிவு முதல் வாதியென்கின்றேன். நான் எப்பொழுதும் நியாயத்திற்குக் கட்டுப்பட்டவன்.

இரண்டு பேருக்கிடையில் அபிப்பிராய பேதம் ஏற்படும் பொழுது அவர்களுக்கிடையே கருத்து வேறுபாடேற்படுகிறது. இதனைப் பலவாறு தீர்த்து வைக்கலாம் ஒன்று விவாதத்தின் மூலம் மற்றது சண்டை அல்லது யுத்தத்தின் மூலமாகும். இவ்வாறு நாடுகளுக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்படும் பொழுது அவற்றைச் சர்வதேச நீதிமன்றத்தின் மூலம் அல்லது யுத்தத்தின் மூலம் தீர்க்கலாம். அறிவு முதல்வாதி என்ற வகையில் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மைபால் வன்முறையிலும் பார்க்க நல்ல அல்லது நன்மையான தீர்மானங்கள் எடுக்கலாமென்பதை நம்புகிறேன். பிரச்சனைகளை வாதிப்பதன் மூலம் தீர்வுக்குக் கொண்டு வரமுடியுமென்று கூறினேன். பிரச்சாரங்களும் ஒருவிதமான வாதம்தான் ஆனால் பிரச்சாரத்தின் மூலம் வாதிப்பதென்பது முடிவானது அதனை மற்றவர்கள் ஏற்க வேண்டும் சாதாரணமான வாதங்கள் அவ்வாறல்ல நான்; கூறுவது சரியென நான் நினைக்கின்றேன்; நான் கூறுவது பிழையாகவும் இருக்கலாம் எனினும் நாம் இதனை வாதிப்போம். ''இவ்வாறு செய்வதனால் இரண்டு பேருமே உண்மையை அணுகலாம். அதனை விடுத்து இருவரும் கூறுவதே சரியெனப் பிடிவாதம் பிடித்தால் நாம் எந்த விதமான நல்ல முடிவுக்கும் வரமுடியாது. இவ்வாறு கருதுகின்ற ஒருவனைப் புத்தி சாதுரியமுள்ளவன் என்று கூறுதல்வேண்டும் இவ்வாறு நாமெல்லோரும் கருதுவோமாயின் வன்முறையையும் அதனாலேற்படும் தீமைகளையும் தடுக்கலாம் நியாயத்தை அல்லது நீதியை ஏற்கச் செய்வதில் பல கஷ்டங்களுண்டு. முதலில் இருவருமே இது நியாயமென்று சம்மதிக்கவேண்டும் பொறுமை சாலிகளாக இருக்கவேண்டும். வாதங்களைக் கூறுதல் வேண்டும்; வாதங்களைக் கேட்கவேண்டும் சார்பான எதிரான வாதங்களால் எமது சிந்தனையைக் குழப்பமடைய விடக்கூடாது. இத்தகைய எமது இலட்சியங்களை தேசிய அடிப்படையிலும் சர்வதேச அடிப்படையிலும் நாம் மேற்கொள்வோமாயின் நாடுகளுக்கிடையேயான போர்களும் வன்முறைகளும் முற்றாக அற்றுப்போகும். நான் அறிவு முதல்வாதி என்கின்ற ரீதியில் நான் கூறுவனவற்றை மற்றவர்கள் ஏற்கவேண்டுமென்பதில்லை. ஆனால் எனது மனநிலையில் வெறுப்போ காழ்ப்புணர்வோ இல்லை. நான் சிந்திக்கத் தயாராக இருக்கின்றேன். மனிதநீதி நியாயங்களில் நம்பிக்கையுடையவனாக இருக்கின்றேன். சுருக்கக்கூறின் நான் மனிதனை நம்புகிறேன் இப்பொழுது நீதி நியாயத்திற்கும் வன்முறைக்கும் இடையேயுள்ள வேறுபாடுபற்றி எனது அபிப்பிராயத்தை வெளியிட்டுள்ளேன்.

அடுத்ததாகக் கற்பனை அரசைப்பற்றி வாதிப்போம். இக்கற்பனையரசு பகுத்தறிவு ரீதியில் கட்டியெழுப்பப்பட்டதாக இருக்கும். இந்தப் பகுத்தறிவு ரீதியிலான வாதங்கள் இருவகைப்பட்டதாக அமையலாம். ஒன்று சரியான நியாயங்கள் மற்றது பிழையான நியாயங்கள் பிழையான நியாயங்கள்தான் இக்கற்பனை அரசிற்கு எம்மைக் கொண்டுசெல்லும். ஒரு செயல் பகுத்தறிவுடையதென்றால் அச்செயலின் நோக்கமும அந்நோக்கத்தை அடைய மேற்கொள்ளப்படுகின்ற வழிவகைகளும் பகுத்தறிவுள்ளதாக இருக்கும். இதனை அரசியலுக்குப் பிரயோகித்துப் பார்ப்போம் அரசியலென்பது ஒரு செயல் அல்லது ஒரு நடவடிக்கையாகும் பகுத்தறிவு ரீதியிலான செயல்கள் ஏதாவதொரு நல்ல முடிவிற்கு நம்மைக் கொண்டு செல்லும் அது எமது அதிகாரத்தைக் கூட்டவோ எமது செல்வத்தைப் பெருக்கவோ செய்யும், அல்லது எமது சதித்திட்டங்களை மாற்றவோ, நாட்டைத் திருத்தியமைக்கவோ இச் செயல்கள் உதவக்கூடும். இச் செயல்கள் சுயநலமற்றவையாக இருந்தால் உன்னதமானவையாக இருந்தால் உன்னதமானவையாக இருந்தால், ஏனைய அறிவியலாளர்களால் ஏற்கக் கூடியதாக விருந்தால் அது எம்மை ஒரு கற்பனை அரசிற்குக் கொண்டு செல்லும். இதனை நீங்கள் பயங்கரமான ஒரு கற்பனை உலகமென்று சொல்லலாம். இக்கற்பனை அரசில் இரண்டு முடிவுகளை ஒரே நபரினால் எடுக்க முடியாது அன்பை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்துக்கொண்டு வன்முறையை வளர்க்க முடியாது. சிலர் வன்மை இல்லாத வாழ்க்கையை ஆழமற்ற வாழ்க்கையென்று சிந்திப்பார்கள். சிலர் வன்முறையை வெறுப்பார்கள். இவை முரண்பாடான கருத்துக்களாகும். இவற்றை விஞ்ஞான முறைகளைப் பாவித்துத் தீர்க்க முடியாது. வன்முறையை வெறுப்பார்கள். இவை முரண்பாடான கருத்துக்களாகும் இவற்றை விஞ்ஞான முறைகளைப் பாவித்துத் தீர்க்க முடியாது. வன்முறைக்கு மாறாக வாதிப்பதன் மூலம் முடிவுகளெடுக்கும் முறையை விஞ்ஞான நேரத்தை விரையமாக்கும் முறையென்று கூறமுடியாது. ஆனால் வன்முறையைப் பாவிப்பவினிடத்துச் சென்று அன்பைப் பற்றி வாதிக்க முடியாது வாதங்களுக்கு அவனது பதிலளிக்கும் முறை துப்பாக்கி முனையாகும் (BULLET) உம்மைத் துப்பாக்கியால சுட்டுத் தள்ளாமல், உம்மால் பகுத்தாய்ந்தவற்றைக் கேட்கும் பொறுமை அவனிடத்து இருக்குமாயின், அவனுக்குப் பகுத்தாய்ந்து செயற்படும் தன்மை ஏற்பட்டுவிட்டதென்று கூறலாம். ஆனால் வாதங்களின் மூலம் ஒருவனை வாதங்களைக் கேட்குப்படி கூறமுடியாது. வாதத்தை வெறுப்பவனோடு வாதிக்க முடியாது. தான் கூறுவதும் செயற்படுவதும் சரியென நினைப்பவனுக்கு அவன் செய்வதும், கூறுவதும் பிழையானதென்று நிரூபிக்க முடியாது. விஞ்ஞானியினிடத்தில் எவ்வளவு பௌதீகவியல் அறிவிருந்தாலும் அணுக்குண்டு செய்வதில் அல்லது கலப்பை செய்வதில் எது சரியானதென்பதைப் பௌதீகவியல் அவனுக்குச் சொல்லிக் கொடுக்க மாட்டாது. அதற்கொரு மன எழுச்சி வேண்டும். அரசியல் தொழிற்பாடுகளை விஞ்ஞான முறையின் அடிப்படையில் விளக்கி அதற்கான காரணங்களைக் கூறமுடியாது. ஆகவே அறிவு முதல் வாதி எதிர் வாதங்கள் புரிபவனைத் தன்பால் ஈர்க்க வேண்டியது அவசியமாகும். அதனைப் பலாத்காரத்தின் மூலமாகவோ, அல்லது வன்முறையின் மூலமாகவோ சாதிக்க முடியாது. கூடிய மட்டில் இதனைச் சாத்வீக அடிப்படையிலேயே செய்தல் வேண்டும். கால மாறுபாட்டிற்கேற்பக் கருத்துக்களும் மாற்றமடையும். அவ்வாறு அவை மாற்றமடைய விடில் மாற்றம் பலாத்காரத்தின் அடிப்படையில் அல்லது வன்முறை அடிப்படையில் நிகழ நேரிடும். அவ்வேளைகளில் அரசுக்கெதிரான பிரச்சாரங்களைத் தடை செய்தல், எதிர்த்து வாதிடுவோரை அடக்கியொடுக்குதல் – எதிர்க்கட்சியினரை முற்றாக இல்லாமற் செய்ய முயற்சிகளெடுத்தல் முதலியவை அவசியமாகின்றன. கற்பனை அரசில் தன்னைத்தானே அழிக்கும் சக்தி அதற்குள்ளேயே இருக்கும். கற்பனை அரசு எவ்வளவு உன்னதமானதாக இருந்தாலும் அது மகிழ்ச்சியைக் கொணராது. அதுவொரு கொடுங்கோல் ஆட்சியை நிலைநாட்டும் இதனாற்றான் ஏதேச்சாதிகார மன்னராட்சி போன்ற கற்பனை அரசை நான் வெறுக்கின்றேன். ஏனெனில் அவ்வரசில் வன்முறைகளுக்கும் பலாத்காரச் செயல்களுக்கும் இடமுண்டு.

நான் விரும்புகின்ற கற்பனை அரசு எருமாறு அமையும், அரசியலின் மூலமாக மகிழ்ச்சியை நிலைநாட்டப் போகின்றோம் என்று கூறுவதில், முதலில் துன்பத்தையொழித்துக் கட்டுவதற்கு நாம் செயலாற்ற வேண்டும். அப்போது மகிழ்ச்சி தானாகவே ஏற்படும். நேரடிச் செயற்பாடு அல்லது நடவடிக்கைகளின் மூலம் எல்லோருக்கும் தேவையான வருவாயை அளித்து நோய்களை அகற்றி கல்வி போதிப்பதன் மூலம், குற்றச் செயல்கள் குறைந்து முற்றாக இல்லாமற் போகும். வைத்திய நிலையங்கள் மூலம் நோய்களை நீக்கலாம், பாடசாலைகள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்கள் மூலம் அறிவை வளர்க்கலாம். இவ்வாறு நேரடியான செயல்கள் அல்லது நடவடிக்கைகளின் மூலம் துயரம் நிறைந்த துன்பமான செயல்களை மக்களிடத்தில் வளரவிடாது அவற்றை அவர்களிடமிருந்து அகற்றி இன்பமயமானவற்றையும் மகிழ்ச்சிகரமான சுபீட்சமான வாழ்வையும் நிலைநாட்டுவதே நான் விரும்புகின்ற கற்பனை அரசாகும். சமூகத்தில் பல சீர்திருத்தங்களை மேற்கொள்ள முயலுதல் வாதங்களிலும் பார்க்கப் பெறக்கூடிய அதிக நன்மைகளை உண்டாக்கும். சமூகத்தில் பல சீர்திருத்தங்களை மேற்கொள்ள முயலுதல் வாதங்களிலும் பார்க்கப் பெறக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடிய அதிக தன்மைகளை உண்டாக்கும் சமூகத்தில் மேற்கொள்கின்ற புனருத்தாரண வேலைகள் நீண்டகால நன்மை பயக்கக்கூடிய பலாபலன்களை விளைவிக்கும். இவ்வாறு செய்ய நாம் முற்படுவோமாயின் வீணான அரசியல் கொள்கை விதண்டா வாதங்களும் சொற்பொழிவுகளும், இலட்சிய வாதங்கள் தேவையற்றனவாகும். நேரடியான நடவடிக்கைகளின் மூலம் சமூகத்தில் செயலாற்றிக் கொண்டிருக்கும்பொழுது எமது ஒவ்வொரு செயலும், அல்லது நடவடிக்கையும் சமூகத்தில் ஒவ்வொரு துறைகளிலும் நன்மை பயத்து இறுதியில் நாம் விரும்புகின்ற கற்பனை அரசை உருவாகச் செய்யும். அப்போது பலாத்காரமும் வன்முறையும் அர்த்தமற்றுப் போய்விடும்

கற்பனையரசு பூமியில் ஒரு சுவர்க்கத்தை யுண்டாக்குமென்று கூறமுடியாது ஒவ்வொரு சந்ததிக்கும் அதற்கு முன்பிருந்த சந்ததியினரிலும் பார்க்க வாழ்க்கைச் சுமையைக் குறைக்கச் செய்யும். அநீதிகள் குறையும். பலவீனமானவர்கள் நோயாளிகள் போன்றோர் படிப்படியாகக் குறைந்து காலப்போக்கில் முற்றாக அற்றுப்போவார்கள். வேலையில்லாத் திண்டாட்டம் படிப்படியாக அற்றுப்போகும். அரசியல் தலைவர்கள் யுத்தங்களை ஏற்படுத்த மாட்டார்கள். நன்மை செய்ய முற்படுவதால் எங்கும் நன்மையே பெருகும். இவையெல்லாம் வெறும் வாய்ப்பேச்சல்ல. செயற்பாட்டின்மூலம் அல்லது நேரடியான நடவடிக்கைகளால் ஏற்படும் விளைவுகளாகும். காட்ட முடியாத கண்ணுக்குத் தென்படாத ஒரு கடவுளை சமயப்பிரசாரங்கள்மூலம் அல்லது உபந்நியாசங்களின்மூலம் கூறுவதனைவிட நேரடி நடவடிக்கைகளின்மூலம் அல்லது செயல்களின்மூலம் கடவுட்டன்மையைப் பெறுவதன்மூலம் கடவுளை அணுகலாம் அல்லது அடையலாம், ஆனால் சிலர் வாதடுவார்கள். மனிதன் கடவுளல்லவென்று ஆனால் அவர்களே கூறுவார்கள் கடவுளுடைய பரிசுத்த ஒளியிலிருந்து தெறித்த பொறி அவனிடமிருக்கிறதென்பர் வேறு சிலர் மனிதனைக் கெட்டவனென்று கூறுவார்கள். ஆகவே அவன் கடவுளை வணங்கினால் புனிதமாவான் என்கின்றனர். இவையெல்லாம் போலிச் சமயவாதங்களாகும். கடவுளின் அதிகாரம் மனிதன்மீது பிரயோகிக்கப்படுகின்றதென்பதிலும் பார்க்க மனிதனது புனிதமான செயல்கள் அவனைக் கடவுட்டன்மையாக்குகின்றதென்பதே சிறந்ததென்பதே எனது வாதமாகும்.

பேக்கன் என்ற மெய்யியலாளன் அறிவே அதிகாரமென்றும் பிளேட்டோ மெய்யியலாளர் ஆட்சியென்றும் தத்தமது கற்பனை அரசுகளின் நிலையை விளக்குகையில் குறிப்பிடுகின்றனர். ஆனால் உண்மையான அறிவியலாளன் உணர்வான் தனக்குத் தெரிந்தவை மிகக் குறைவானதென்பதை இத்தகையவன் மற்றவர்களைச் சமமாகப் பாவித்துத் தன்னுடைய வாதிக்கும் ஆற்றலைக்கொண்டு மற்றவர்களோடு கலந்துரையாடி மனிதனது நீதி நியாயங்களுக்குக் கட்டுப்பட்டு ஏனையவர்களோடு சமமாகப் பழகுகின்றான். அவனுடைய போர்முறை சொல்லாடல் அல்லது வாதமுறையாகும் அவனுக்கு நீதி நியாயமென்பது பலாத்காரம் வன்முறை அதிகாரம் போன்றவற்றிற்கு எதிரான ஒரு நிலைப்பாடாகும். தன்னைப் பீடித்திருக்கும் மிருகத்தன்மைகளையும் தன்னைப் பாதிக்கும் மிருகத்தன்மைகளையும் பதப்படுத்திச் சாதுவானவனாக்கி அவனை உயர்த்த நீதி நியாயம் உதவுகின்றன. இவையே நான் விரும்பும் கற்பனை அரசின் இலட்சியங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

## நான் அவை அவர்கள்

### க. ஆதவன் 3ம் வருடம் மெய்யியற்றுறை

அவன் தலையிற் சுமந்துகொண்டிருந்த புல்லுக்கட்டை மெதுவாக இறக்கிவைக்கிறான் மூக்கிலிருந்து வழிந்துகொண்டிருந்த சளியைத் தோழ்மூட்டுச் சட்டையினால் துடைக்கிறான். காற்சட்டையை அவிழ்த்து ஒரு முறை வரிந்துகட்டிக்கொள்கிறான்.

காற்சட்டை நிறம் கறுப்பு

பின்புறம் சற்றுக் கிழிந்து அவனுடைய பின்பகுதி இலேசாகத் தெரிகிறது.

தலை பறட்டையாய்க் கிடக்கிறது.

காற்சட்டைப் பொக்கற்றிலிருந்து பிய்ந்துபோன பீடித்துண்டொன்றை எடுத்துப் பற்றவைக்கிறான் மற்றப் பொக்கற்றினுள் கையைத் துளாவி பாதிகடிக்கப்பட்டிருந்த மாங்காய் ஒன்றை எடுத்துக் கடிக்கிறான். அந்த மரத்தடிக்குக் கீழிருக்கும் ஒரு கல்லில் அமர்ந்து கொள்கிறான்.

நான் தூரத்தில் வந்துகொண்டிருக்கிறேன். மோனிங் எயித் நைன் லெக்சர்ஸ் பிறீ. இப்ப நேரம் எயிற் தேட்டி அதுக்கிடையில லைபிறறில போய் என்னத்தைப் படிக்கிறது. இப்ப உவெதரும் அவளவு நல்லாயில்லை. படிக்கிறதெண்டாச் சும்மாவே உடம்பெல்லாம் ஒரே சோம்பலாக் கிடக்கு. இன்னும் எங்கடை சிலபஸ் முடியேல்லை. படிக்கிறதுக்கு ஞாயமாக் கிடக்கு, ரெண்ணுக்குப் போய் ஒரு ரீ அடிச்சுப்போட்டுவந்து ருவெல் மட்டும் படிக்கவேணும்.

நான் அவனை அண்மிக்கிறேன். அவன் இப்பொழுது பழைய சினிமாப்பாட்டொன்றை வாயில சீட்டியடித்தபடி உட்கார்ந்திருக்கிறான் நான் ஸ்ரைக் மரத்தடிப் படிகளால் இறங்குகிறேன். அவன் ஒரு தடிக்குச்சியால் நிலத்தைக் கிண்டிக்கொண்டிருக்கிறான்.

என்ன மாரப்பா புல்லு வெட்டி ஓவாட்டியே நான் கேட்கிறேன்.

ஆமா தொரை கிடுக்கிட்டவனுய் எழுந்து நிற்கிறான்

இரடாப்பா இரு என்ன சரியாக் களைச்சுப்போனாய் போலக் கிடக்குது நானும் கல்லில் அமர்கிறேன்.

இல்லே தொரை காலம்பொறையே வந்திட்டே இப்பதா வெட்டி முடிஞ்சிச்சி இனி என்ன செய்யப்போறாய்

இந்தக் கட்டைக் கொண்டுபோயி மாகந்தை சன்முகம் தொரை வூட்டே போடனும்

போட்டா அவர் எவளவு காசு தருவார்

ரெண்டு ருவாய் போல கொடுப்பாரு

காசைக் கொண்டேய்க் கொம்மாட்டைக் கொடுப்பியோ அல்லது பீடி அடிப்பியோ

சிலநேரம் கொடுப்பே சிலநேரம் கொடுக்கமாட்டே

ஏன் உனக்குக் காசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படம்பாக்கனுந் தொரை, நீங்க நாளை நமதே பாத்தீங்களா தொரை? ச்சா என்ன மா பிய்க்கிறார் தொரை நீங்க பாக்கலியா நா ரெண்ணு தடவை பாத்தே, ஒருக்கா நாவலப்பிட்டி அண்ணங்கூட வீட்டெலாரும் போனோம். ரெண்ணுங் கிளாசில இருந்து பாத்தோம்' என்னமா சனம் வருகுது நூறுநாள் ஓடும்போல. என்ன அப்புறம் நா தனியா ஒரு தடவை பாத்தே வாத்தியார் ஐமாய்க்கிறுரு தொரை நீங்க பாக்கலியா ஆமா என்ன மாய் சனம். நீங்க போயிட்டு பாக்கேலாது நா ஒண்ணு சொல்லவா இரவு ஒம்போது முப்பது சோவுக்குப் போவனும் அப்பதா பாக்கலாம். மாரப்பன் விழிவிறெண்டு உற்சாகமாகக் கதைக்கிறான்.

தொரை யாழ்ப்பாணத்திலேன்னு ரொம்பப்படம் பாக்கலாமில்லியா பத்துப் பதினஞ்சு தியேட்டர்போலே இருக்காமே.

நீ காலைமை சாப்பிட்டிட்டியே

இல்லெ தொரே இன்னிக்கி பகலைக்குத்தா சாப்பிடுவே

ஏன் ஒவ்வொரு நாளும் இப்பிடியே

ஆமா

ஏன் கொம்மா எங்கை

''அது பாட்டுக்கு எங்கிஞ்ச்சுஞ்சரி சுத்திக்கிட்டுத்திரியும், பகலைக்கு எப்பிடியோ எனக்கும் நாலு தங்கச்சி மாரகளுக்கும் சாப்பாடு கொண்டாந்து தரும்''

''கொப்பர் இப்ப வீட்டை வாறதில்லையே?''

''அவரு வேறை ஒரு கண்ணாலங் கட்டிக்கிட்டாரு. பண்டாரவளைவே இருக்காராம் வர்றதில்லே''

நான் மணியைப் பார்க்கிறேன். அவன் என் கைக்கடிகாரத்தைப் பார்க்கிறான். நான் எழும்புகிறேன். அவன் புல்லுக்கட்டைத் தூக்கித் தலையில் வைக்கிறான். மணி அடிக்கிறது.

● ● ●

மணி அடிக்கிறது. ஹோலுக்கு விரைகிறேன்.

'ஹில்டாச் சாப்பாடும் வர வர மோசமாய்ப்போச்சு, மெலிஞ்சு போறேனெண்டு அம்மா அடிக்கடி சொல்லுறா. என்ன செய்யிறது எல்லாப் பொடியளுக்கும் உள்ளது தானே எனக்கும். இன்னுங் கொஞ்ச நேரம் போட்டுதெண்டால் சொதி முடிஞ்சிடும். அதுக்கிடையிலே போவேணும். இனி, புண்ணியவாங்கள்ளே ஈவினிங் லெக்சேர்ஸ் ஒண்டும் இல்லை. போர் மட்டும் நல்ல நித்திரை ஒண்டடிக்கலாம் 'டென்ரல் டான்ஸ்' எயிற்றுக்குத்தான் ஸ்ராற் பண்ணுவாங்கள். செவிணுக்கு வெளிக்கிடத் தொடங்கினக் காணும். இந்தமுறையும் போனமுறையைப்போலை பம்பலோ தெரியாது. காசும் பைவ் ருப்பீஸ் கூட்டிப்போட்டாங்கள்.'

நான் டைனிங்கோலுக்குள் சென்று கைகளைக் கழுவுகிறேன். மீன் றிக்கற்றை எடுத்துக் கவுண்டருக்குள் நீட்டுகிறேன். சாப்பாட்டுத் தட்டுடன் மேசையில் உட்காருகிறேன். சுற்றிவர அரைவாசியும் முக்காவாசியும் எஞ்சிக்கிடக்கிற சாப்பாட்டுப் பிளேட்டுகள் தெரிகின்றன. நான் இரண்டாவது தடவை சோற்றை வாயில் வைக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிளேட்டை ஒரு தள்ளுத் தள்ளிவிட்டு விறுக்கென எழுந்து கைகளைக் கழுவி விட்டுக் கன்ரீனை நோக்கிச் செல்கிறேன்.

ஹோல் சேவன்ற் யாரையோ சிங்களத் தூஷணத்தில் பேசித் துரத்துகிறான். என்னைத்தாண்டி ஒரு பெண் ஓடுகிறாள். கையிலுள்ள பொலித்தீன் பை வழியாகச் சோறும் கறியும் நிலத்தில் சிந்தியவண்ணம் இருக்கிறது. அந்தப் பெண் ஓடுகிறாள். திரும்பிப் பார்த்தபடியே இரைக்க இரைக்க ஓடுகிறாள்.

நான் கன்ரீனில் சாப்பிட்டபின்னர் கைகளைக் கழுவுகிறேன். முதலாளி கணக் கெழுதுகிறார்.

● ● ●

நான் அகதி முகாமில் இருக்கிறேன். கலவரத்தின் ஐந்தாம் நாள் நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு. நாங்கள் யாழ்ப்பாணம் போவதற்காக பதினைந்து பஸ்கள் வரிசையில் வந்து நிற்கின்றன. இறுதியாய் அடிபட்டு வந்தவர்களைப் பார்க்க நானும் நண்பனும் அந்த செக்ஷனுக்குச் செல்கிறோம்.

ஒரு மூலையில்

ஒரு தாய் மேனியின் அரைவாசியை மறைத்தவண்ணம் இருக்கிறாள். இரண்டு மிகச்சிறிய பெண்குழந்தைகள். அவற்றின் மேனியில் துணியில்லை. மற்ற இரண்டு பெண்களும் அருகில் அழுதவண்ணம் இருக்கின்றனர், பக்கத்தில்...... அட...... யாரது......?

மாரப்பன்!

"மாரப்பா"

"தொரை ...."

"அம்மா இதுதா யூனிவசிட்டித்தொரை நல்ல தொரை"

"இங்கை பாருங்க தொரை .. ஐயோ ... ஏம்பிள்ளைங்களைப் பாருங்க தொரை"

பொலித்தீன்பை ...... ஹோல் சேவன்ற்...... இரைக்க இரைக்க ஓடிய அவள்......

"தொர நீங்கள்ளாலும் ஏதாச்சும் ஒண்ணொண்ணு யாப்பாணம் போயிடுவீங்க நாங்க எங்கபோறது தொரை ...?"

நான் மாரப்பனைப் பார்க்கிறேன்.

"நாளைக்கு வாற பஸ்ஸிலே நாங்க யாழ்ப்பாணம் போறந்தொரை" ......யாழ்ப்பாணத்திலே பத்துப் பதினஞ்சு தியேட்டர் இருக்காமே தொரை .. ....

(யாவும் கற்பனையே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திர வர்த்தக வலயம் சூழல் பாதுகாப்பியல் நோக்கு

ச. ஏ. பிரதாபர்

உதவி விரிவுரையாளர் விவசாய பீடம் பேராதனை பல்கலைக்கழகம்

இலங்கையில் பொருளாதாரத்தில் ஆழ்முடுக்கப்பட்ட அபிவிருத்தியை ஏற்படுத்தல பெருகிவரும் வேலை வாய்ப்பின்மையைத் தீர்மானித்தல் முதலான நோக்கங்களை ஈடேற்று முகமாக இலங்கை அரசினரால் அண்மைக் காலத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள துரித அபிவிருத்தித் திட்டங்களுள் இலங்கையின் சுதந்திர வர்த்தக வலயம் குறிப்பிடத்தக்கதாகும். உள் நாட்டு மூலப்பொருட்களையும் ஓரளவு பதன்செய்யப்பட்ட பொருட்களையும் அடிப்படையாகக்கொண்டு வெளிநாட்டுச் சந்தைகட்கு ஏற்றுமதி செய்யத்தக்க பொருட்களை உற்பத்தி செய்தலே இவ்வலயத்தின் நோக்கமாகும். இந்நோக்கம் வெற்றிபெறும் இடத்து இதுவரை காலம் முதலான உற்பத்திகளையே (Primary Products) ஏற்றுமதிசெய்துவந்த இலங்கை கைத்தொழில் பொருட்களையும் ஏற்றுமதி செய்யும் ஒரு நாடாக உருவாகும்.

கொழும்புக்கு வடக்காக தெற்கில் களனி கங்கைக்கும் வடக்கில மகா ஓயாவிற்கும் இடைப்பட்ட இலங்கையின் முதலாவது சுதந்திர வர்த்தக வலயம் களனி, வத்தளை, ஜா எல, சீதுவ, நீர்கொழும்பு கட்டானை முதலான பகுதிகளை உள்ளடக்கியது. இவ்வலயத்தில் நிறுவப்படக்கூடிய கைத்தொழில்கள் இலங்கைச் சட்டங்களால் எல்லைப்படுத்தப்பட வில்லையாதலால் சகல துறைகளையும் சார்ந்த கைத்தொழிலதிபர்களையும் இவ்வலயம் கவரப்போவது உறுதி. இத்தகு பலவகைத் தொழிற்சாலைகளையும் கொண்ட வர்த்தக வலயத்தினால் இக்குறிப்பிட்ட பிரதேசத்திலும் அதனைச் சார்ந்த பகுதிகளிலும் நிலவும் சூழல் சமநிலையில் ஏற்படக்கூடிய இடையூறுகளைப்பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பின்வரும் அடிப்படைக் காரணங்களால் ஓர் குறிப்பிட்ட சூழல் பாதிப்புற நேரிடுகின்றது.

பொதுவாக பொருளாதார நடவடிக்கைகளில் கனமான ரீதியான வளர்ச்சிக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவம் தர அடிப்படையிலான வளர்ச்சிக்கு வழங்கப்படாமை.

பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளினால் சூழல் பங்கமுறுதலாலே சமூகவியல் செலவை (Social costs of pollution) சரியாக மதிப்பிட முடியாதிருத்தல்

பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பான தீர்மானங்கள் எடுக்கும்போது சூழல் காரணிகளில் பாதிப்பு புறக்கணிக்கப்படல்

சூழலில் ஏற்படுத்தப்படும் மாற்றங்களைக் கட்டுப்படுத்த போதிய நிறுவனங்கள் இல்லாதிருத்தல்

சூழல் பாதிப்புறலைக் கருதாது உடனடியாகக் கிடைக்கும் வசதிகளைப் பெருக்க முற்படல்

எந்த ஒரு நடவடிக்கையும் அடிப்படையாக சூழலின் சமநிலையிலேயே தங்கியதென்பதை உணராதிருத்தல்

இத்தகு காரணங்கள் எதிர்காலத்தில் இலங்கையின் வர்த்தக வலயத்தில் எழுமாயின் எமது சூழலும் பாதிப்புறுவது தவிர்க்க முடியாதாக இருக்கும். இதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்க சூழலைப் பங்கமுறுத்தக்கூடிய பொதுவான காரணிகளை ஆராய்வது அவசியம்.

## கைத்தொழிலாக்கம்

சுதந்திர வர்த்தக வலயம் ஸ்தாபிக்கப்பட்டதன் அடிப்படை நோக்கமே பதனிடப்பட்ட துணையான ஏற்றுமதிகளைத் (Secondary Products) தயாரிப்பதேயாதலால் சுதந்திர வர்த்தக வலயம் இலங்கையின் கைத்தொழிற் பேட்டையாகப்போவது உறுதி. வளர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும் தொழில்நுட்ப அறிவுகட்கு இடமளிப்பதற்கேற்பவே இங்கு தொழிற்சாலைகள் அமைக்கப்படுமாதலால் எதிர்காலத்தில் ஓர் அலகு நிலத்திலிருந்து வெளியிடப்படவிருக்கும் சூழலைப் பங்கப்படுத்தக்கூடிய காரணிகளின (Pollutants) அளவு தற்போதய நிலையிலும் எண்ணிறந்த மடங்குகளால் பெருகவிருப்பதற்கு சுதந்திர வர்த்தக வலயத்தின் கைத்தொழில் ஆக்கம் காரணமாக அமையும்.

## அசைவு Mobility

எமது சுதந்திர வலயத்தின் ஆலைகட்கான மூலப் பொருட்கள் பெரும்பாலும் இவ்வலயத்திற்குப் புறம்பாக இருந்து நாளாந்தம் கொண்டுவரவேண்டியுள்ளது. உற்பத்திசெய்யப்பட்ட பொருட்களும் சந்தைப்படுத்தப்பட வலயத்திற்கு வெளியே கொண்டு செல்லப்படவேண்டும். தவிர இவ்வலயத்தின் உற்பத்தியில் ஈடுபடுவோரின் எண்ணிக்கையும் பெருகிச் செல்வதால் இவர்களது அசைவும் தவிர்க்கப்படமுடியாது. இவ்வாறு சாதனங்களின் அசைவுக்காகப் பயன்படுத்தப்படும் போக்குவரத்துச் சாதனங்களின் எரிபொருட்கழிவுகள் சுதந்திர வர்த்தக வலயத்தின் சூழலைப் பங்கப்படுத்தப்போவது உறுதி.

## நகரவாக்கம் Urbanisation

சுதந்திர வலயம் உருவாக்கப்பட்டதற்கான நோக்கங்களுள் இளைஞர்களின் வேலையின்மையைத் தீர்ப்பது கணிசமான முக்கியத்துவம் உடையதாகும். இதனால் பிரகடனப்படுத்தப்பட்ட சுதந்திர வர்த்தக வலயப் பிரதேசத்துள் குடியமர்வு நடவடிக்கைகள் ஆர்முடுக்கப்பட இவ்வலயத்துள் உள்ள களனி, வத்தளை கந்தானை நீர்கொழும்பு கொச்சிக்கடை முதலான துணைப்பட்டினங்களில் நகரவாக்கம் ஏற்படும். இதனால் ஏற்படும். அதிகரித்த பாவனைநடவடிக்கைகள் காரணமாக சுதந்திர வலயத்தின் குடிபானவர் பாவனைக்கழிவுகள் அதிகரிக்க சுதந்திர வலயத்தின் சூழல் பங்கமுற நேரிடும்.

## தகவல் இடைவெளி Information Gap

ஓர் சூழலில் ஏற்படும் மாற்றம் இலகுவாக உணரக்கூடிய தொன்றல்ல. சுதந்திர வர்த்தக வலயத்திலும் கைத்தொழிலாளர்களின் நடவடிக்கைகளால் ஏற்படும் பாதிப்புகளை அவர்கள் உடனடியாக உணரமுடிவதில்லை இதனால் தமது நடவடிக்கைகள் சூழலைப் பாதிக்கின்றனவா இல்லையா என்பதை உணராமலே தொடர்ந்தும் சூழலைப் பாதிக்கக்கூடிய நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட இத்தகவல் இடைவெளி காரணமாகின்றது. அடுத்து இவ்வாறான சந்தர்ப்பங்களால் சூழல் பாதிப்படைவதனால் எழக்கக்கூடிய பிரச்சினைகளைப்பற்றி ஆராய்வோம்.

## நீர் பங்கமுறல் Water Pollution

மனிதனின் நாளாந்த நடவடிக்கைகளில் இருந்து பிரிக்கமுடியாத தொன்றாக நீர்ப்பாவனை காணப்படுகிறது. சுதந்திர வர்த்தக வலயத்தைப் பொறுத்தவரை வடக்கே மகா ஓயா தெற்கே களனி கங்கை மேற்கே இந்துசமுத்திரத்துடன் தொடர்பான நீர்கொழும்பு கடனி ரேரியாகியவை எல்லைகளை வகுக்கின்றன. இவ்விவல்லைகளே சுதந்திர வர்த்தக வலயத்தின் கழிவுகளை ஏற்று வெளியேற்ற வேண்டியனவாகவும் காணப்படுகின்றன. இக்கழிவுகள் செம்பு ஈயம் நாகம் இரசம் (Cu. Pb. Zn. Hg.) மீதேன் ஐதரசன் சல்பைட் முதலானவற்றை கொண்டிருப்பின் நீர்நிலைகளுள் விடப்பட நீர் நச்சூட்டப்படுகிறது. நீர்நிலைகளின் நுண்ணங்கித் தாக்கங்கள் அதிகரிக்கப்படின் நீரில் கரைந்துள்ள ஒட்சிசன் அகற்றப்படக்கூடும். வெப்பமான ஆலைக்கழிவுகள் நீர்நிலைகளுள் விடப்படுமாயின் நீர்நிலைகளிலுள்ள சீவராசிகளின் சமநிலை குலைக்கப்படுகின்றது. இதற்கு சீவராசிகளின் இனப்பெருக்க வட்டம் பாதிக்கப்படல் ஒட்சிசனின் கரைதிறன் குறைக்கப்படல் நீரில் இடம்பெறும் இரசாயனத் தாக்கங்களின் வேகம் ஆர்முடுக்கப்படல் என்பன காரணமாகலாம். மேலே ஆராயப்பட்ட சந்தர்ப்பங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளால் ஏறத்தாள நிலையான நீரைக்கொண்ட நீர்கொழும்பு கடனீரேரி சிலசமயம் இறக்கவும் (Eutrophication) கூடும். இத்தகு அபாயங்கள் கலிபோர்னியாவின் டாகோ (Tahoe) ரஸ்யாவின் பைக்கல் (Baikal) முதலான ஏரிகளும் எதிர்நோக்குவதால் அங்கு ஏற்கனவே பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நுகர்ச்சிப் பொருட்களை கொண்டுசெல்ல நிர்மூலமான போக்குவரத்து நடவடிக்கைகள் மலிவானவை என்பது ஓர் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகும். எனவே சுதந்திர வர்த்தக வலயத்தின் உற்பத்தி நடவடிக்கைகள் அதிகமாகும்போது கொழும்பு துறைமுகம் அதிக அளவிலான கப்பல்களையும் எண்ணெய்த் தாங்கிகளையும் ஏற்க வேண்டியிருக்கும் இக்கப்பல்களின் கழிவுகள் கொழும்பை அண்மித்த கடல்களில் விடப்படுதல் அல்லது எண்ணெய்த் தாங்கிகள் கடலில் அமிழ நேரல் முதலான அசம்பாவிதங்கள் காரணமாக இப்பிரதேசத்தை சூழ்ந்த கடல்களில் மீன் முதலான சீவராசிகள் அழிய நேரிடலாம்,

## வளி பங்கமுறல் Air Pollution

எம்மைச் சூழவுள்ள வளிமண்டலம் வாயு நிலையில் வெளியிடப்படும் சூழலைப் பங்கப்படுத்தும் காரணிகளை ஐதாக்க முடியாதவிடத்து பங்கமடைகின்றது. மோட்டார் வகனங்களில் எரிபொருட்கள் தகனம் காரணமாக வெளிவிடப்படும் வாயுக்கழிவு காபனோரொட்சைட்டு கந்தக ஒட்சைட்டுகள் ஐதரோ காபன்கள் நைதரசன் ஒட்சைட்டுகள் பெரிலியம் ஈயம் முதலான துகள்கள் (Particulate Matter) முதலானவற்றைக்கொண்டதாகும். மேலும் இலங்கையின் பிரதான விமான நிலையத்தில் பாரிய போயிங் விமானங்களின் போக்கு வரத்து அதிகரிக்கப்பட இறுதியில் கழிவுகளும் வளியை பங்கப்படுத்துவதில் கணிசமான பங்கைப் பெறக்கூடும். ஓர் போயிங் 727 விமானம் இறங்கி ஏறும்போது வெளிவிடப்படும் கந்தக ஒட்சைட்டுகள் ஏறத்தாழ 500 கார்கள் 100 மைல் ஓடும்போது வெளிவிடப்படும் கந்தக ஒட்சைட்டுகளுக்கு சமனானவை என மதிப்பிடப்பட்டுள்ளது, இவைதவிர அமைக்கப்படும் கைத்தொழில்களைப்பொறுத்த ஒசோன் பெரொக்கி ஏசைல் நைத்ரேற்றுகள் (Peroxy Acyl Nitrates) அல்டிகைட்டுகள் அக்ரோலெய்ன் (Acro Lein) அசுபெஸ்ரசு (Asbestos) முதலானவையும் வளிமண்டலத்தின் கணிசமான அளவு சேர்க்கப்பட வளி பங்கமுறுகின்றது இவ்விளைவுகள் இலங்கையின் சுதந்திர வர்த்தக வலயத்திலும் எதிர்பார்க்கப்படற் கூடியவையே.

## திண்மக் கழிவுகள் Solid Wastes

உலோகத் துண்டுகள் கடதாசி கழிவுகள் பிளாஸ்ரிக்குகள் பதனிடல் கழிவுகள் முதலான கைத்தொழில் திண்ம கழிவுகள் இலங்கையின் சுதந்திர வர்த்தக வலயத்தில் தவிர்க்கப்பட முடியாதன. இவை முறையாகப் பரிகரிக்கப்பட்டு அகற்றப்படாவிடில் வளி நீர் முதலானவை பங்கமுற ஏதுவாகின்றன

## இரைச்சல் Noise

பெறுமதியற்ற ஒலி இரைச்சல் என வரையறுக்கப்படலாம். சுதந்திர வர்த்தக வலயத்தின் அதிகரித்த வளி நிலை போக்கு வரத்து நடவடிக்கைகள் கைத்தொழிற் சாலைகளின் ஒலி கட்டிடவாக்க நடவடிக்கைகள் இரைச்சல் ஏற்படக் காரணமாக இருக்கின்றன ஒலி டெசிபெல் (Decibel) என்ற மடக்கை அலகினால் அளவிடப்படுவதாகும். ஏறத்தாழ 90 டெசிபல் ஒலிக்கு ஒருவர் தொடர்ந்து 8 மணி நேரம் உட்படுத்தப்படுவராயின் அவர் நிரந்தர செவிடராக நேரிடும், 50' தூரத்தில் ஓடும் ஓர் பாரலொறி ஏற்படுத்தும் ஒலி (Heavy Truck) 90 டெசிபலுக்கு சமனானது. விமானங்களினால் 150 டெசிபல் வரை இரைச்சல் ஏற்படுத்தப்படலாம். இவ்வொலி சாதாரணமாக மனிதர் கதைக்கும்போது எழுப்பப்படும் ஒலியிலும் 10 10 மடங்கு வன்மையுடையதாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதிர்வீச்சு Radiation

சூழலின் மொத்த கதிரியக்கத்திற்கு இயற்கையில் சூழலில் காணப்படும் கதிரியக் சமதானிகள் சூரிய ஒளியில் உள்ள Cosmic கதிர்கள் முதலானவையும் மனிதனின் நடவடிக்கைகளால் சூழலில் வெளிவிடப்படும் கதிரியக்க சமதானிகளும் காரணமாகின்றன. சுதந்திர வலயத்தின் அதிகரிக்கப்பட்ட மின்னியக்க நடவடிக்கைகள் மொத்த சூழல் கதிரியக்கத்தை அதிகரிக்கக்கூடும். இக்கதிரியக்கம் (Rem Roeutgen Equiualent Mau) எனும் அலகினால் அளவிடப்படும். இக்கதிரியக்க அளவு (Mrem) பெறுமானத்திலும் கூடும்போது சூழலில் பங்கமுற நேரிடும்.

இவ்வகைகளில் பாதிப்புறும் சூழல் தனிமனிதன் ஒருவனுக்கு எவ்வகையில் தனிநபர் சமூக பொருளாதார பிரதிகூலங்களை ஏற்படுத்துகின்றதென்பதை அடுத்து ஆராய்வோம்.

நீரின் தரம் குன்ற ஆரம்பிக்கும்போது அதனை நுகரும் மனிதனின் ஆரோக்கியம் நேரிடுகிறது. நைத்திரேற்றுகளின் செறிவு 45pym இலும் கூடுதலான நீரைப்பருகும் மனிதனுக்கு Typhoid Dysentry Salmonellasis முதலிய சுவாச சமிபாட்டு இடர்பாடுகள் ஏற்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது. ஒரு வயதிலும் குறைவான குழந்தைகள் பருகின் Methaemoglobinaemia என்னும் சிக்கல் ஏற்பட்டு மரணம் ஏற்படலாம்

தவிர கைத்தொழில் கழிவுகள் நீர்கொழும்புக் கடனீரேரியுள் சேர்க்கப்படுமிடத்து கடனீரேரியின் ஜீவராசிகளின் தொகை இறக்கக்கூடும். உதாரணமாக ரஷ்யாவின் கைக்கலில் (Baikal) அமுல் எனும் மீனினம் 1945 – 1957 வரையிலான காலப்பகுதியில் 55% பட்டதுபோல, நீர்கொழும்புக் கடனீரேரியிலும், இலங்கையின் மேற்குக் கடலிலும், சுதந்திர வர்த்தக வலயக் கழிவுகள் காரணமாக, மனிதரால் நுகரப்படக்கூடிய மீன்வளம் குன்றக்கூடும். இதனால் இக்கரைபோர மீனவர் பாதிப்படைவர்.

இலங்கையின் மேற்குக் கடற்கரைகள் இயற்கை வனப்பிற்கும், பிரசித்தமானவை. உலகெங்கும் இருந்துவரும் உல்லாசப பயணிகள் இவற்றைப் பெரிதும விருப்புகிறார்கள். சுதந்திர வர்த்தக வலயக் கழிவுகள் காரணமாக கலிபோர்ணியாவின் டாஹோ 'Tahoe' விற்கு ஏற்பட்டதைப் போல பிளாந்தன் முதலான கடற்தாவரங்கள் கரைகளில் படர்வதால், கடற்கரைகள் தூர்மணம் கொண்டனவாக அமைவதோடு நீச்சல், படகுச் சவாரி, பொழுது போக்காக மீன்பிடித்தல் (Sport Fishing) முதலான உல்லாசப் பிரயாணிகளின் நடவடிக்கைகளை எல்லைப்படுத்தக் கூடும்,

வளிமண்டலம் பங்கப்படுத்தப்படுவதால் மனிதருக்கு Emphysema, Bronchetis, Arterco Sclerotis, இதய நோய்கள் என்பன ஏற்படக்கூடும். தவிர வளிமண்டலத்தில் காபனீரொட்சைட்டு செறிவு கூடும்போது, சூழல் வெப்பநிலை உயர்வதனால் ஓர் (Green House Efect) ஏற்படலாம். இது மனிதரை வெப்பமான சூழலில் வாழ வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தும். வளிமண்டலத்தில் கந்தக ஒட்சைட்டுகளின் செறிவு கூடும்போது சூழலில் உள்ள இரும்பு அமைப்புகள் துருப்பிடித்தலுறும் விதம் உயர்வடையும். இதனால் யந்திரங்கள் உருக்குத் தண்டவாளங்கள் முதலானவற்றின் பெறுமானத்தே தேய்வு (Depreciation) அதிகரிக்கும். ஓசோன்களின் செறிவு கூடும்போது ஓடுகள் வர்ணச் சாயமிடப்பட்ட துணிகள் விரைவாக சீர்கெடுகின்றன. வளிமண்டலத்தில் Particulate Matter கூடுதவதனால் ''புகார்'' ஏற்பட தொலைவிடங்களின் காட்சி அசாத்தியமாகிவிடும். தவிர முறைமையாக அகற்றப்படாத திண்மக் கழிவுகள் எல்லைப்படுத்தப்படாத இரைச்சல், கதிரியக்கம் என்பன காரணமாகவும் மனிதனின் ஆன்மீக, ஆரோக்கிய நலன்கள் குன்றும் என்பது வெளிப்படை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய பிரச்சனைகளால் எமது வளமான சூழல் பாதிப்படையாது இருக்க கழிவுகள் அப்புறப்படுத்தப்படும்விதம், கழிவுகளின் தரம் என்பன சட்டங்களால் கட்டுப்படுத்தப்படல், இத்தகைய நடவடிக்கைகட்கெதிராக, பொதுமக்களின் கூட்டுமுயற்சிகளை ஊக்குவித்தல், அதற்கான பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளல்; கழிவுகளில் உள்ள கூறுகளின் பாதகப்பண்புகளை நிரோதித்தல்; இத்தகு நிரோத நடவடிக்கைகள் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்; திண்மக் கழிவுகளைத் தனியான குதங்களில் ஒதுக்குதல்; திண்மக் கழிவுகளில் உள்ள உலோகங்கள் முதலான மீளப் பயன்பயன்படுத்தப் படக்கூடிய கூறுகளைத் தனிமைப்படுத்திப் பயன்படுத்தல் (Recycling) மீதியைத் தகனப் படுத்தல் (Incineration) திருப்திகரமற்ற நிலையில் உள்ள போக்குவரத்து சாதனங்களின் பாவனையை ஊக்குதல்; குறைவாக கந்தக ஒட்சைட்டுகள், காபனீரொட்சைட்டை வெளிவிடும் குறைந்த ஒக்ரேன் எண்ணுடைய எரிபொருட்களை சிபாரிசு செய்தல்; விமான நிலையம் முதலான உயர் அதிர்வுடைய இரைச்சல் ஏற்படக் கூடிய இடங்கட்கு அண்மையில் குடியேற்றங்களைத் தவிர்த்தல்; கதிர்வீச்சுக் கூடிய கழிவுகளைத் தனிமையாகச் சேகரித்து, கதிரியக்கத்தைக் கட்டுப்படுத்தக் கூடிய கொள்கலங்களில் அடைத்து, ஆழ்கடலுள் அமிழ்த்தல்; முதலான நடவடிக்கைகளை ஆரம்பத்திலிருந்தே அமுல் செய்வதன் மூலம் எமது சுதந்திர வர்த்தக வலயமும் தொடர்பான பிரதேசங்களும் பங்கமுறாது தவிர்க்கக் கூடியதாக இருக்கும்,

எனது எண்ணத்தின்படி ஒரு பல்கலைக் கழகத்தின் கடமை என்னவென்றால் அதில் பிரவேசிப்பவர்களுக்கு சகல கலைகளிலும் மேலான ஒருமித்து வாழுங் கலையில் பயிற்சி அளிப்பதே.

ஒரு தொழிற்சாலையில் அல்லது வயலில் வேலைசெய்வதிலும் பார்க்க பேனாவை ஏந்தி கணக்குகள் பதிவது அதி கௌரவமுடையதன்று

ராதாகிருஷ்ணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FOR YOUR REQUIREMENTS IN

CHOPPER CYCLES

NORTON STANDARD CYCLES 22"

EASTERN ,, ,, ,,

CHILDREN'S TRI CYCLES

L. P. GAS COOKERS

L. P. GAS CYLINDERS and other

HOUSEHOLD ITEMS

PLEASE VISIT

**AUTOS Ltd.** HOSPITAL RD. AFFNA

Phone: 496



சகலவிதமான கிருமிநாசினிகள், விவசாய மருந்துவகைகள், பசளை வகைகள். நீர் இறைக்கும் இயந்திரங்கள் உபகரணங்கள், தெளிகருவிகள், உழவு இயந்திரங்கள் உதிரிப்பாகங்கள் அல்கதீன் குழாய்கள் போன்றவற்றிற்கு

**அக்ரேஸ் லிமிட்டெட்**

56, கந்தப்பசேகரம் ஒழுங்கை

யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவையான உணவு தேனீருக்கு

இன்றே விசயம் செய்யுங்கள்

# HOTEL IMPALA

42, தலதா வீதி, கண்டி. போன் 2575

---

அன்பளிப்பு

# LANKA MOTOR SPARES

45, PERADENIYA RD, KANDY

Phone, 2539

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SPACE DONATED

BY

**Northern Industries**

112, STANLEY ROAD, JAFFNA

SPACE DONATED

BY

**A WELL WISHER**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளங்கதிர் ஒளிபரப்ப வாழ்த்துகிறோம் !

உழுதுண்டு வாழ்வோரைத்
தொழுதுண்டு வாழ்வோம்

பசுமைப் புரட்சிக்கு இதோ
எமது பங்களிப்பு

விவசாயிகளே உங்கள் பயிர்களைப் பாதுகாத்து
அமோக விளைச்சலைத் தரும்

| | | |
|---|---|---|
| கல்கிசன்ஸ் | பரத்தியோன் | E 50 |
| கல்கிசன்ஸ் | ரோகுரோ | 40 % |
| கல்கிசன்ஸ் | எம். சி. பீ. ஏ. | 40 |
| கல்கிசன்ஸ் | எலோசால் | 80 % W. P. |

ஆகிய —
கிருமி நாசினிகள்
களை கொல்லிகள்
பங்கசு கொல்லிகள்

ஆகியவற்றை உங்களுக்காகவே மேற்கு ஜேர்மனியிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்து விநியோகிப்பவர்கள்

# கல்கிசன்ஸ்

தொலைபேசி 7711

147 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்கவிதையும் புதுமை உணர்வுகளும்

எஸ். டேவிட் கலைத்துறை 2ம் வருடம்

தமிழ் இலக்கியத்தில் கவிதைத் துறையின் முக்கியத்துவம் வரலாற்றுப் பின்னணியின் சிறப்பம்சங்களை உள்ளடக்கிய பெரும் பிரிவாகக் காணப்படுகிறது. மரபுவழி யாப்பு விதிகட்கமைய கவிதைகள் ஆசிரியப் பாக்களாகவும் வெண்பாக்களாகவும் விருத்தப்பாவாகவும் கவிதையின் வடிவங்களில் வேறுபாட்டுத் தன்மையுடையனவாக இயற்றப்பட்டுவந்தன இவ்வாறு யாப்பு விதிகட்கமைய மாறுபட்ட வடிவங்களில் இருந்து முற்றிலும் மாறுபாடுடைய புரட்சிகரமான கவிதை வடிவமாக புதுக்கவிதை தமிழிலக்கியத்தில் புகுந்து பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது மேலைத்தேய இலக்கிய வடிவங்களான சிறுகதை நாவல் நாடகம் என்பவற்றைப் போன்று புதுக்கவிதையும் தமிழ் இலக்கிய உலகிற்கு புதியவிருந்தாளியாகப்பிரவேசித்துள்ளது இலக்கண யாப்பமைவுகளைக் கருத்திற்கொள்ளாது புதியபாணியில் பரிசோதனை உத்தியாக கவிதைத் துறையில் புகுத்தப்பட்ட புதுக்கவிதை இன்று பெரும் வளர்ச்சியை அடைந்திருந்தாலும் இலக்கிய கர்த்தாக்கள் பலரின் கண்டனத்துக்கும் வெறுப்புக்கும் இலக்காகி உள்ளது. ஆயினும் புதுக்கவிதை இன்று எதிர்ப்புக்கள் மத்தியிலும் பல்கலைக் கழகங்களில் பாடத்திட்டங்களில் ஒரு பிரிவாகக் காணப்படுகின்றது.

புதுக்கவிதையின் பிரவேசத்தை பலர் கண்டிப்பதற்குக் காரணம் இலக்கண யாப்பமைவுகளை கவனத்தில் கொள்ளாது கட்டுப்பாடுகளை மீறிய சுதந்திர கவிதைப் பாணியாக அமைந்து காணப்படுகின்றது என்பதனாலேயாகும். புதுக்கவிதையின் தந்தை எனப் போற்றப்படும் தமிழக எழுத்தாளரும் சிறந்த கவிஞருமாகிய திரு ந. பிச்சமூர்த்தி அவர்கள் ஆங்கிலக் கவிதையில் தான் கொண்ட ஈடுபாடுகளின் காரணமாக தமிழ்க்கவிதையில் புதுமையான வடிவம் புகுத்தப்படவேண்டுமென்ற உத்வேகத்துடன் 1934ம் ஆண்டுதொடக்கம் புதுக்கவிதை புனைவதில் வெற்றிகண்டார். அவரைத் தொடர்ந்து இன்றுவரை பல இளைய தலைமுறைக் கவிஞர்கள் ஏராளமான புதுக்கவிதைகளைப் புனைந்து வருகின்றனர். இலக்கணமே கவிதையின் உயிர்நாடி என வித்துவக் கலைஞர்கள் கருத்தில் கொண்டு பொருத்தமான எதுகை மோனைகளைக் கஸ்டப்பட்டுத் தொகுத்துக் கவிதை யாப்பதால் கவிதையின் கருப்பொருள் புறக்கணிக்கப்படுகின்றது சாதாரண விடயமொன்றுக்கு ஆலாவர்ணனைகளால் அலங்காரப்படுத்தல் போடப்படுவதால் அந்த வர்ணனைகளும் யாப்பமைவுகளும் மேலோங்கிநிற்கின்றன. ஆனால் புதுக்கவிதை ஆலாவர்ணனைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காது கருத்துச் சத்துக்கும் உணர்வின் வெளிப்பாட்டுக்கும் முக்கியத்துவம் கொடுக்கின்றது. சப்த நயத்துக் கேற்ப கவிதை அமைக்கப்படுவதால் எதுகை மோனை என்பன முற்றுகக் கவனிக்கப்படுவதில்லை. ஆகவேதான் யாப்புப் போர்வை புறக்கணிக்கப்பட்டு உணர்வுகளுக்கும் ஓசைநயத்துக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படுவதால் வித்துவக் கவிஞர்களால் புறக்கணிக்கப்படுகின்றது.

புதுக்கவிதையின் வடிவமானது வெளிப்பார்வைக்கு வெறும் வசனக்கொத்தாகத் தோற்றமளிக்கினும் அதன் உள்ளீடானது உண்மையான உணர்வுகளின் வெளிப்பாடு யதார்த்த நோக்குடன் சித்திரிக்கப்படுவதை அவதானிக்க முடிகின்றது. கவிஞனின் மனோ உணர்வு பேச்சுத் தொரணை ஓசைநயம் அனுபவ உணர்வு ஆகியன புதுக்கவிதையில் சிறப்பாக இடம்பெறுகின்றது. தேவையான இடத்துக்கு அழுத்தம் கொடுத்து படிப்போரின் உள்ளத்தில் கவிஞனின் மனோநிலையை எழச்செய்வதில் புதுக்கவிதை வெற்றி கண்டுள்ளது எனலாம் யாப்புக்கவிதைகள் எத்தனை சிறப்பம்சம் கொண்டதாக இருப்பினும் புதுக்கவிதையின் வடிவத்தைக் கொண்டு அது கவிதையின் பண்பைக் கொண்டிருக்கவில்லையென வித்துவக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர்கள் கூறுவது தவறு. கவிஞனின் சிந்தனை உணர்வானது புதிய கோணத்தில் செல்கின்றதனால் கவிதையின் வடிவத்திலும் மாறுதல்கள் நிகழ்வதில் வியப்பேதும் இல்லை. எடுத்துக்காட்டாக இங்கு சில புதுக்கவிதைகளை நோக்கும்போது கவிஞனின் சிந்தனை புதிய உணர்வுடன் செயல்படுவதை நாம் அவதானிக்கலாம்

உன்னைப் பார்க்காமல் போயிருந்தால்
இன்னேரம் துறவியாகியிருப்பேன்
இன்றோ
எல்லாம் துறக்கத்தநான் தயார்
உன்னைத் தவிர

இக்கவிதையில் கவிஞன் தானே கருப்பொருளாகி உள்ளத்தால் பேசப்படும் வார்த்தையின் தாத்பரியம் புலனாகின்றது. உணர்வுகளுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டிருப்பது இதன் சிறப்பம்சமாக விளங்குகின்றது? அவளைமட்டும் அவன் பார்க்காது விட்டிருந்தால் அவன் துறவியாக மாறியிருப்பான். ஆனால் அவளையடையும் சந்தர்ப்பம் கிடைத்துவிட்டதால் அவன் சகலத்தையும் இழக்கத் தயாராகியுள்ளான் அவளைத் தவிர. என்று ஒரு இளைஞனின் காதல் உணர்வுகளை எவ்வித ஆலாவர்ணனைகளுமின்றி உணர்வுகளுக்குமட்டும் முக்கியத்துவம் கொடுக்கும் சிறப்புத்தன்மையினை காணமுடிகின்றது. கவிஞனின் சுய அனுபவம் சமூக உற்று நோக்கு ஆகியன எவ்வித சிதைவுமின்றி படிப்போர் உள்ளத்தில் கலையுணர்வைத் தட்டியெழுப்பும் கவிதையை பூரணத்துவமான கவிதை எனக்கொள்ளலாம் இவ்வித பூரண தன்மையினைப் புதுக்கவிதையிலும் காட்ட முடியுமென்பதற்கு மற்றுமோர் கவிதையை உதாரணமாகக் கொள்ளலாம்.

சோகம் ததும்பும் மயான வெளியில்
மனித உடல்கள் மெழுகுவர்த்திகள்
மகிழ்ச்சி ததும்பும் மணவறை மீதோ
மனித உடல்கள் கொலுப் பொம்மைகள்
... ... ... ... ... ... ... ...
மாளும்போது மரண மூச்சினை
கீதமாய் இசைக்கும் கிழட்டு வாத்தியங்கள்

(கவிஞர் குருவிக்கரம்பை சண்முகம்)

இக்கவிதையில் கவிஞனின் சிந்தனைத் திறன் இங்கு துல்லியமாக வெளிப்படுகின்றது. ஆறறிவு படைத்த மனிதனின் மனோ உணர்வுகளின் நிலைப்பாடு ஒவ்வொன்றும் மன எழுச்சியில் மற்றுமோர் பொருளுடன் ஒப்புநோக்கிப் பார்க்கும் உளப்பக்குவம் கருப்பொருளின் தன்மையினைச் சுருக்கமாகக் கூறி படிப்போர் உள்ளத்தால் கற்பனையில் மிதக்கவிடும் சிறப்புத்தன்மைகளைக் காணமுடிகின்றது.

சங்ககாலக் கவிதைகள் சொற்சுருக்கமும் பொருட்செறிவும் கொண்டனவாகக் காணப்படுகின்றன. அக்கவிதைகள் யாப்பு வரம்புக்குட்பட்டு அழகாக அமைக்கப்பட்டுள்ளன. இக்காலப் புதுக் கவிதையும் சொற்சுருக்கமும் பொருட்செறிவும் கொண்டு அமைந்து காணப்படுகின்றது. யாப்பு வரப்புக்கு உட்படுத்தப்படாமல் எளிய அமைப்பில் யாவரும் விளங்கத்தக்க வகையில் புதுக்கவிதை அமைந்து காணப்படுவதால் வெளிப்பார்வையளவில் வசனக் கோர்வையாகவே தோற்றமளிக்கின்றது. உதாரணமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலவில்லாத அமாவாசை
வானம்
இருண்டு கிடந்தது
வேலையில்லாத
பட்டதாரியின் எதிர்காலம்போல

இங்கு கவிஞன் வெண்ணிலாவின் தண்ணொளி அறவே இல்லாத அமாவாசை இருளைக் காண்கிறான் அவ்விருண்ட வானம் அவனது யதார்த்த பார்வையில் சமுதாயத்தில் பட்டதாரி இளைஞர்களின் இருளடைந்த எதிர்காலத்தைப் போல தென்படுகின்றது, உள்ளத்தில் தெள்ளெனப்பட்ட அந்நிலையை அப்படியே கூறிவிட்டான், படிப்போரின் சிந்தனையைத் தூண்டிவிடுகிறான் கவிஞன்.

நோக்குக்கள் எவ்வாறாக இருப்பினும் கவிஞர்கள் பிரச்சனையை அணுகும் விதத்தில் ஏற்றமுடையோராய் தென்படுகின்றனர் புதுக் கவிதைக் கவிஞர்களின் சிறப்புத்தன்மை என இதனைக் கொள்ளலாம் புதுக்கவிதைகளை யாக்கும் கவிஞர்களின் உள்ளத்தில் புதுமையான உணர்வுத்திகள் ஊற்றெடுப்பதை அவதானிக்கலாம். இங்கு கவிஞனின் பார்வையில் உலகம் ஒரு வேட்டைக்காடாகத் தென்படுகின்றது. ஒரு உயிரியின் அல்லது பொருளின் இயக்கமானது வாழ்க்கையானது இன்னொரு உயிரியின செயற்பாட்டில் தங்கியிருப்பதனை ஒரு நாடகக் காட்சிகளாகக் காண்கின்றான கவிஞன்.

சந்தி விளக்கோ இருட்டை
தறித்து வேட்டையாடும்
அங்கு பறக்கும் ஈசல்
ஆவி கொதிக்கும் வெளவால்
வந்து பறக்கும் கீழே
வாயில் எச்சில் ஊற
குந்தியிருக்கும் பூனை
குறித்து வெளவால் உயிரை
ஒன்றின் உயிரில் ஒன்று
உலகமே ஒரு வேட்டைக்காடு

(மு, பொன்னம்பலம்)

புற உலகின் தாக்கல்கள் கவிஞரின் உள்ளத்தில் பலவித தூண்டுதல்களை ஏற்படுத்திக்கொண்டே இருக்கின்றன. இத்தாக்குதல்கள் வேதனை வியப்பு திகைப்பு நகைப்பு நெகிழ்ச்சி இன்பம் முதலிய பல்வேறு உணர்வு வடிவங்களாகத் தோன்றிக் கிளர்ச்சிசெய்கின்றன. இம்மனக் (எழுச்சி) கிளர்ச்சியானது ஆழ்ந்த சிந்தனையுடன் உள்ளத்தில் நின்று வெளிப்படும்போது உருப்பெறுகின்றது, அவ்வுருவம் கற்பனையுடன் யதார்த்தம் கலந்ததாகவும் அல்லது தனிக்கற்பனையாகவும் அமையலாம்: அதுவே சிறந்த கற்பனையாகப் பரிணமிக்கின்றது. புதுக்கவிதையும் இத்தகைய சிறப்பம்சம் கொண்டதாக விளங்குகின்றது. யாப்பு இலக்கண அமைவைவிட்டு மீறிச்செல்லும் இப்புது மரபுக் கவிதையை இலக்கணக் கவிஞர்கள் கண்டிப்பது நியாயமற்றதாகவே தென்படுகிறது.

இன்று நடைமுறையில் (படைக்கப்படும்) தோன்றும் எல்லாப் புதுக் கவிதைகளையும் சிறந்தவையாகக்கொள்ளமுடியாது. காகிதப் பூக்களும் நல்ல மலர்களிடையே கலந்திருக்கத்தான் செய்கின்றன, ஆகவே புதுக்கவிதையின் எதிர்கால வளர்ச்சிக்கு தரமான விமர்சனங்கள் அவசியமாகின்றன. விமர்சனங்கள்தான் உண்மையான இலக்கிய வளர்ச்சியின் எழுச்சிக்கு தூண்டுகோலாக அமைகின்றன. ஆகவே புதுக்கவிதை வளர்க்கும் கவிஞர்களின் புதுமையான உணர்வுகளுக்கும் மதிப்பளித்து ஆக்கபூர்வமான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டால் எதிர்காலத்தில் தமிழ் இலக்கியத்தில் கவிதைத்துறையின் சிறந்த அங்கமாக புதுக்கவிதையும் விளங்கும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. வளரட்டும் புதுக் கவிதை.

# அரசியல் மெய்யியல் பார்வையில் சுதந்திரம் என்ற எண்ணக்கரு

தம்பையா இராஜரத்தினம்
உதவி விரிவுரையாளர் மெய்யியல்துறை, பேராதனை பல்கலைக்கழகம்

சுதந்திரம் என்று தனியே ஒன்று இல்லை. சுதந்திரம் சார்புப் பொருளுடையது. சார்பு என்பது மற்றென்றோடு சார்த்திவைத்துப் பார்க்கப்படுவது தனிச்சுதந்திரம் என ஒன்று இருக்குமானால் சுதந்திரமற்ற நிலமைஎதுவெனச் சிந்திக்கமுடியாது. சுதந்திரத்துக்குக் கட்டுப்பாடு இருந்தால்தான் சுதந்திரம் என்றால் என்ன என்பதைப் புரிந்துகொள்ளவும் அதனை அனுபவிக்கவும் முடியும். பெரும்பான்மையைக் கருத்திற்கொண்டு அவர்களின் நன்மைக்காக சிலவகைச் சுதந்திரங்களைக் கட்டுப்படுத்த வேண்டியது அவசியமாகும். இங்கேதான் சமூகத்தின் தேவைக்கேற்றவாறு சுதந்திரத்தை ஒழுங்குபடுத்திக்கொள்ள வேண்டும். அதாவது சுதந்திரம் சமூக சம்பந்தமான ஒரு சாதனமாகின்றது. எந்த ஒரு சமூகத்திலும் முழுச் சமூகத்துக்கும் சுதந்திரத்தை நிலைநாட்டுவதற்காக அந்தச் சுதந்திரத்தை மட்டுப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. இல்லாவிடின் சுதந்திரம் கண்டதே காட்சி கொண்டதே கோலமாகிவிடும்.

சமூகத்தின் காரியாதிகாரியாய் உள்ள அரசு சுதந்திரத்தின் மீது கட்டுப்பாடுகளை உண்டாக்குமானால் அது சமூகத்தின் நலனுக்காக எனமக்கள் உணரவேண்டும் தனிப்பட்ட ஒருவரின் தற்கால நாகரிகவாழ்விலே சுகஜீவனத்தைப் பாதுகாக்கக்கூடிய அவசியமாய் உள்ள சமூக நிலைமைகள்மட்டும் தடை ஏற்படுத்தாதிருத்தலே சுதந்திரம் என லஸ்கி பரந்தஅடிப்படையில் இலக்கணம் கூறியுள்ளார் தனிபட்டவரின் சந்தோசத்தைப் பாதுகாக்கும் சமூக நிலைகள் என்று கூறும்போது ஓரளவுக்கு ஒழுங்கு கட்டுப்பாடு தேவை என்பது புலனாகும் ஆனால் தனிப்பட்டவர்கள் பெரும்பான்மையோர் நலனை உத்தேசித்து இக்கட்டுப்பாடுகள் அவசியம் என்பதை உணரவேண்டும்.

ஒரு சமுதாயத்தில் உள்ள ஒவ்வொரு பிரசையும் மதிப்பானமுறையில் வாழ்க்கை நடாத்த அவசியமான நிலைமைகளை ஏற்படுத்துவது அரசின் கடமையாகும் ஏனெனில் பொருளாதாரம் பாதுகாப்பு இல்லாவிடின் சுதந்திரத்தின் நோக்கங்களை நிறைவேற்ற முடியாது. பொருளாதாரப் பாதுகாப்பு ஏற்படுத்துவதனால் சொத்துரிமை அரசு கட்டுப்படுத்த வேண்டியது அவசியமாகும். இதனால் சொத்துள்ளவர்களுக்கு நட்டம் உண்டாகும் என்பதில் ஐயமில்லை. பெரும்பான்மையோரின் நன்மையை உத்தேசித்து சொத்துரிமையைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று சமூகத்திலுள்ளவர்கள் ஒருசேர அபிப்பிராயப்பட்டால் சொத்துள்ளவர்கள் அரசு நிறைவேற்றும் நியாயமான கூட்டத்துக்கு அடங்கி நடக்க வேண்டியது அவர்களது கடமையாகும். வாக்குச் சுதந்திரம் ஒன்றுகூடி விஷயங்களை நடாத்தும் சுதந்திரம் போன்றவற்றில் தேவையான கட்டுப்பாடுகளை அரசு ஏற்படுத்துவது அவசியமானதாகும். ஏனெனில் இத்துறைகளில் எல்லையற்ற சுதந்திரம் அளிக்கப்பட்டால் நன்மைக்குப் பதில் தீமையே உண்டாகும். சமூகத்தின் நன்மையை உத்தேசித்து சிறுவர் சிறுமியர்க்கு ஒரு குறிப்பிட்ட வயதுவரை பெற்றோர் கல்வி கற்பிக்க வேண்டுமென அரசு அவர்களைக் கட்டாயப்படுத்தலாம் மக்கள் சந்தோஷமாக வாழ்க்கை நடாத்துவதற்கு இது அவசியம் என்பதும் அதற்கு கட்டாய விதிகள் இருக்கவேண்டும் என்பதும் நியாயமான போக்குடைய மக்களால் ஏற்கப்படும். மக்கள் தங்களது ஆன்மபாவத்தைப் பூரணமாக வளர்ப்பதற்கு அரசு சமசந்தர்ப்பத்தை எல்லோர்க்கும் வழங்கவேண்டும் எந்த ஒரு தனிப்பட்டவர்க்கோ அல்லது கூட்டத்தவர்க்கோ விசேட சலுகைகள் காட்டக்கூடாது;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறு காட்டுவதால் சமூகம் பயனடையும் என்று கருதினால் அத்தகைய விசேடசலுகைகள் காட்டப்படலாம் பின்தங்கிய சமூகங்களில் தொழில் நுட்பநிபுணருக்கும் சில விசேட உத்தியோகத்தவர்களுக்கும் விசேட சம்பளம் வேலைவசதிகள் அளிக்கப்பட்டால் அவைகாலப்போக்கில் சமூகத்துக்கு நன்மை பயக்கலாம். இதைவிட வேறுகாரணங்களுக்காக விசேட சலுகைகள் வழங்கப்படக் கூடாது.

ரூஷோ ஹெகல் முதலிய அரசியலறிஞர்கள் ஏதோ ஒருவகையில் அடங்கி நடப்பதால் உண்மையான சுதந்திரம் உண்டாகும் எனப்பல கோட்பாடுகளை வெளியிட்டுள்ளார்கள். பொதுமக்கள் சித்தத்துக்கு அடங்க வேண்டும் என்கிறார் ரூசோ மற்றெந்தக் கடமைகள் இருந்தபோதிலும் அரசுக்கு சேவைசெய்ய வேண்டியதே முக்கியமான கடமை என்கிறார் ஹெகல் ஆனால் மனிதனுடைய ஆன்ம பாவம் ஒப்புயர்வற்றது என்பதை இவ்விருவரும் கருத்திற் கொள்ளவில்லை. மனிதன் தனது தனித்தன்மையை வெளிக்காட்டும்படி விட்டால்தான் அவனுடைய ஆன்ம பாவம் மலர்ச்சியையடையும் எந்த ஒரு சமூகத்திலும் மனிதன் தனது தனித்தன்மையை வெளிப்படுத்த இடமளிக்க வேண்டும். பொதுச் சித்தத்தின் பொருட்டோ அரசுக்கு சேவை செய்யவேண்டும் என்ற காரணத்தைக் கொண்டோ தனித்தன்மையை அடக்குமாறு விதித்தால் அது தனிமனிதனை அலட்சியம் செய்வது போலாகும்.

பொது நன்மையை உத்தேசித்து சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் போது அரசில் அடங்கிய ஒவ்வொரு மனிதனும் அந்தக் கட்டுப்பாடு எந்தகையது எனப் பரீட்சித்துக் கொள்ள வேண்டும்? சட்டமானது தனது போக்குக்கு மாறானது என்றோ தனது சுதந்திரத்துக்கு பாதகமானது என்றோ கண்டால் அவன் அதை எதிர்க்கலாம். அது அவனுடைய கடமை லஸ்கியின் கருத்தும் இதுவே ஒரு சமூகத்தில் உள்ள தனிப்பட்டவர் ஒரு சட்டத்தை எவ்வாறு வரவேற்கிறார் என்பதைப் பார்த்து அதன் பின்னரே அச்சட்டங்கள் ஏற்புடையனவா அல்லவா என்பதை அரசாங்கம் நிச்சயிக்கவேண்டும் சட்டம் ஒருவனுடைய சுதந்திரத்தில் தலையிடுகிறது எனப் பெரும்பான்மையோர் கருதினால் அதை மக்கள் எதிர்ப்பதுடன் அதனால் வரக் கூடிய விளைவுகளையும் ஏற்கத் தயாரகவேண்டும் சமூகம் தன்னுடைய நடவடிக்கையால் சட்டத்திலே உள்ளதாத தன்மையை உலகுக்கு எடுத்துக் காட்டக்கூடியதாக இருக்கும். ஒருவனுடைய எதிர்ப்பைச் சமூகம் ஏற்றுக்கொள்ளுமானால் சமூகத்தின் கருத்தை அவன் மாற்றக்கூடியவனாக இருப்பான் ஆனால் அரசு சட்டத்தை மாற்றவோ திருத்தவோ நிர்ப்பந்திக்கப்படும். பெருந்தொகையான மக்கள் சட்டத்தை ஏளனம் செய்து அதை எதிர்ப்பதில் திருப்திடைவாரேயானால் அரசின் வலுக்கட்டாயத்தினால் எவ்வித பயனும் கிடையாது: இவ்வாறான சந்தர்ப்பத்திலே கீழ்ப்படியாமை நாகரிகமான ஒரு நோக்காக மக்களால் கருதப்படுகிறது. இது நாளடைவில் ஒரு தொற்றுநோயாகப் பரவும் சட்டத்தின் மீது குடிமக்கள் மதிப்புக் காட்டவேண்டுமானால் அது அவர்களுடைய ஆன்ம பாவத்தை மலரச் செய்வதுடன் சுதந்திரத்துக்கு கட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டால் அவை தனிப்பட்டவர்களுடைய நன்மைக்காகவும் என்ற எண்ணம் மக்களிடையே எழவேண்டும் எனவே ஒரு சமூகத்தின் தார்மீக உணர்ச்சி சட்டத்தில் அடங்கியிருக்க வேண்டும் அரசாங்கம் ஓரளவு வலுக்கட்டாயம் செய்ய வேண்டியதும் அவசியமே அவ்வாறு வலுக்கட்டாயம் செய்யாவிட்டால் சுதந்திரம் இருப்பதைவிட குறைவாகவே இருக்கும் என்ற உணர்ச்சியினால் உண்டாகிய வலுக்கட்டாயமாக இருக்கவேண்டும் ஒவ்வொருவரது மனத்தூண்டலுக்கும் ஏற்றவாறு நடக்கவும் மனம்போன போக்கின்படி ஒழுகவும் சுதந்திரம் இருக்குமானால் அது உண்மையான சுதந்திரமென்று உள்ளத்திலே உண்டாகும் நியாயமற்ற இயல் பூக்கத்துக்கும் வேகத்துக்கும் இடம் கொடுப்பதாகவே அது அமையும் ஆனால் நியாயமின்றி வலுக்கட்டாயப் படுத்தவும் முடியாது. வலுக்கட்டாயப் படுத்தாவிட்டால் ஒருவன் சட்டத்துக்குப் பணிய மாட்டான் என்றும் கூறமுடியாது. வலுக்கட்டாயப் படுத்தும் சட்டத்திலே சுதந்திரம் தங்கவில்லை நல்வாழ்வு நடாத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவனுடைய ஆன்ம பாவத்தை மலரச் செய்வதிலேதான் சுதந்திரம் தங்கியுள்ளது தார்மீகச் சட்டப்படி வாழ்வதே நல்வாழ்வு. இவ்வர்த்தத்திலே பார்ப்பதால் சுதந்திரம் மலர்வதற்கு காரணமாகும் சில கடமைகளும் உரிமைகளும் தனக்கு உண்டென்பதை ஒருவன் தானாகவே உணர்ந்துகொள்ள வேண்டும் உண்மையான சுதந்திரம் மலர்வதற்கு பலவகையான மனத்தூண்டல்கள் தம்முள் இணையவேண்டும். உண்மையான சுதந்திரம் தனித்தன்மையில் தங்கவில்லை. அது ஒருவனுடைய ஆன்ம பாவத்தின் மலர்ச்சியில் தங்கியுள்ளது. அது சமூகத்தில் வாழ்வதினால்தான் சாத்தியப்படும்.

தார்மீக சட்டமானது சமூக உணர்ச்சியிலும் சமூகம் எது நல்லதெனக் கொள்கின்றதோ அதிலும் தங்கியுள்ளது, சமூகத்தின் ஒற்றுமையில் இருந்து சட்டம் பிறக்கவேண்டும் அது சமுதாயத்திலே இணக்கத்தை அதாவது சமூகத்தில் சமத்துவத்தை உண்டாக்குகின்றது இந்தச் சமூக இணக்கத்திலேதான் தனிமனிதன் சுதந்திரத்தை அனுபவிக்கின்றான். வேறுவிதமாக கூறுவதனால் ஒரு சமூகம் சரியென எதைக் கருதுகிறதோ அது சட்டத்துள் அடக்கப்படுகின்றது. இப்பொருளில் ஆராயுமிடத்து சமூகத்தின் ஒற்றுமையிலிருந்தும் தார்மீக உணர்ச்சியிலிருந்தும்தான் சட்டம் உருவாகின்றது. சட்டம் என்பதால் அது அரசிடம் இருந்துதான் தோன்றுகிறது எனக்கொள்ள முடியாது. மக்கள் சட்டத்துக்கு அடங்கி நடக்கவும் கீழ்ப்படியவும் அது பலம் பெறுகின்றது.

ஒரு சட்டத்துக்கு கீழ்ப்படிவதா இல்லையா என்பதைத் தீர்மானிப்பதற்கு ஒருவனுக்கு என்ன ஒழுக்கநெறிக் கோட்பாடுகள் துணைபுரியும் இதற்குமுன் ஒரு சட்டத்துக்குக் கீழ்ப்படிவதா இல்லையா என்பதைத் தீர்மானிப்பவன் தனிப்பட்ட ஒருவனே என்பதை உணர வேண்டும். ஒரு சங்கீத இசையின் ஒரு பகுதியாக நான் என்னைக்கருதவில்லை. அந்த இசை குறிக்கும் பெரும்பொருளின் ஒரு கூறாக நான் அமையவில்லை. நான் தனித்துவமானவன் புறம்பானவன். தனி இயல்புடையவன். இந்தப் பண்புகளை அடிப்படையாகக்கொண்டு எனது செயல்களான கொள்கைகளை நானே அமைத்துக்கொள்ளவேண்டும் என லஸ்கி அழகாகஎடுத்துக்காட்டியுள்ளார். எனவே ஒருவன் செயல்புரிவதற்கு சொந்த அபிப்பிராயமே ஆதாரம்.

பாரதூரமான ஒரு செயலில் இறங்குமுன் தீர்க்கமாக யோசிக்கவேண்டும். ஏனெனில் அங்கு அதனால் சட்டத்தை மீறவேண்டும். சமூகத்தில் அதனால் புரட்சி குழப்பங்கள் போன்றவைகூட ஏற்படலாம். இதனால் வரும்விளைவுகளை ஏற்கவும் தயாராக இருக்கவேண்டும் சுதந்திரம் என்பதன் அர்த்தம் தனக்கு உண்மை உடையவனாய் இருத்தல் என்பதேயாகும் அதாவது தார்மீக ஆன்மாவிற்கு உண்மையுடையவனாக இருத்தல் அது நல்ல வாழ்வு நடத்துவதினாலேயே உண்டாக முடியும். இதற்கு அரசின் சட்டங்கள் இடந்தராதவிடத்து அச்சட்டங்கள் எதிர்க்கப்படவேண்டும், சுதந்திரத்தின் இரகசியம் இதுதான். அதாவது எதிர்ப்பதற்கு தைரியமாக இருத்தல் என்பதாகும்.

எழுத்துமூலம் அமைந்த யாப்புக்களில் மக்களின் சுதந்திரங்களை அரசோ அல்லது அதன் காரியகர்த்தாக்களோ அதில் தலையிடுவது கஸ்டமானதாகும். அந்த அரசியல் சட்டத்தை திருத்துவதும் கஸ்டமுள்ளதாகவே இருக்கும். இவை அரசோ அன்றி அதன் காரியாதிகாரிகளோ தான்தோன்றித்தனமான முறையில் மக்களைக் கஸ்டத்துக்குள்ளாக்குவதைத் தடுப்பதற்கான சிறந்த முறையாகும்.

மக்களுக்கு உள்ள சுதந்திரம் முழுவதையும் இக் கட்டுரையில் ஒவ்வொன்றாக ஆய்வு செய்ய முடியாது. இருந்தும் பேச்சுச் சுதந்திரம் என்பதை மட்டும் இங்கு பார்ப்போம் பேச்சுச் சுதந்திரத்தைப் பொறுத்தமட்டில் ஆட்சேபனைக்கு இடமில்லை. சமூகத்தில் உள்ள குறைகளையும் இடர்ப்பாடுகளையும் வாய்விட்டுச் சொல்வதற்குச் சுதந்திரம் இருந்தால்தான் அரசு அவற்றை அறிந்து நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கும் ஒருவர்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிப் பிராயத்தைக் கூறுவதற்குச் சுதந்திரம் வழங்கப்பட்டால் ஆளும் கட்சியைப் புகழ்ந்து போற்றுவதற்கே அது வழங்கப்பட்டது என எண்ணக்கூடாது. ஆளும் கட்சியோடு இணங்காதவர்கள்கூட தமது அபிப்பிராயத்துக்கு அது செவிசாய்க்கக்கூடிய முறையில் தாராளமாக ஒருவன் அதைக் கண்டிக்க உரிமையுண்டு என்பதே இதன் தாற்பரியமாகும். இந்த உரிமையானது பலாத்காரமுள்ள புரட்சிகரமான கொள்கைகளைப் பிரசாரம் செய்யவும் இடமளிக்கும். ஏனெனில் அத்தகைய முறையை ஆதரிப்போர் நடைமுறையில் உள்ள அமைப்பை மாற்ற விரும்புகின்றனர். அது அவர்களுடைய அனுபவத்தின் ஒரு வெளிப்பாடாகும். இத்தகைய கோட்பாடுகள் மக்களிடம் பரவுமானால் நடைமுறையில் உள்ள அமைப்பில் ஏதோ தவறு உண்டென்பது வெளிப்படை. ஆனால் மக்கள் இக்கொள்கைகளை ஆதரியாதுவிட்டால் கண்டிக்கப்பட்டவர்களில் தவறில்லை என்பது வெளிப்படையாகும்.

பேச்சுச் சுதந்திரத்தை அடக்குவதினால் எவ்வித பயனும் இல்லை. அடக்கினால் மக்களின் அபிப்பிராயத்தை வெளிக்காட்டவிடாமல் அடங்கி இருக்க வழிசெய்யும். அரசியல் சட்டத்துக்கு அடங்கிய மக்கள் தமது அபிப்பிராயத்தை வெளியிடவிடாது தடுத்தால் பலாத்காரச் செய்கைகளில் ஈடுபடுவார்கள். இவ்வாறான செயல்களை நாம் எமது நாட்டிலும் வேறு பல உலகநாடுகளிலும் காணக்கூடியதாக உள்ளது. அரசாங்கம் மக்களின் கீழ்ப்படிவையும் விசுவாசத்தையும் முற்றாகப் பெறவேண்டுமானால் பிரஜைகள் தமது கருத்தைக் கூறுவதற்குப் பூரணமான சுதந்திரம் வேண்டும் அப்போதுதான் மக்களின் குறைபாடுகளை அரசாங்கம் கருத்திற்கொண்டு அவற்றை நீக்குவதற்கான பரிகாரத்தைத் தேடும். அவ்வாறு பரிகாரம் தேடாவிடின் சமூகத்தில் அமைதி நிலவாது.

இக்கால அரசு மக்களின் பேச்சுச்சுதந்திரத்தில் பின்வரும் மூன்று வகைகளில் தலையிடுகின்றது.

1 அசப்பியமான (ஆபாசமான) விசயங்கள்

2 தெய்வ நிந்தனை சம்பந்தமான சட்டம்.

3 மானநட்டம் ராசதுரோகம் சம்பந்தமான சட்டம்

இத்தகைய தலையீடுகள் அவசியமில்லை என்பது ஆராய்ச்சிகளின் பயனாகத் தெரிகின்றது. ஏனெனில் அசப்பியம் தெய்வநிந்தனை மானநட்டம் ராசதுரோகம் போன்றவற்றுக்கு சரியான வரைவிலக்கணத்தைச் செய்துகொள்ள முடியவில்லை.

அசப்பியமானது எது? அசப்பியமில்லாதது எது? என்பவற்றை வரையறை செய்வது சுலபமன்று. சட்டத்துறையாலேயே இதுபற்றி ஒரு திட்டமான வரைவிலக்கணத்தைக் கூறமுடியவில்லை. ஒருவன் எத்தகைய விசயங்களை வாசிக்கலாம் எவற்றை வாசிக்கக் கூடாது என்பவற்றை எவ்வாறு தீர்மானிப்பது? யாரைக்கொண்டு தீர்மானிப்பது? உத்தியோக முறையில் உள்ள தணிக்கையாளர்கூட தமக்கு விருப்பமில்லாதவற்றை பொதுமக்கள் வாசிக்கக்கூடாது என்கின்றனர். இது ஏற்கக்கூடிய ஒன்றா? அசப்பியம் என்பது ஒருவனுடைய மனோபாவத்தைப் பொறுத்தது. ஒருவனுக்கு அசப்பியமாக இருப்பது மற்றவர்க்கு அசப்பியமற்றதாக இருக்கலாம். அசப்பியம் சம்பந்தமான சட்டத்தை தீவிரமாக அமுல் நடத்தினால் உலக இலக்கியங்களில் சிறந்தவைகூடத் தப்பிக்கொள்ள முடியாது. மேலும் ஒரு நூலைத் தடுப்பதனால் அதன் ஆர்வம் குன்றிவிடாது. அதற்கு எதிராக மக்கள் தடுக்கப்பட்ட நூல்களை வாசிக்கவேண்டுமென்றே விரும்புவர். ஐக்கிய அமெரிக்காவில் சுங்க இலாகா வோல்டயரின் காண்டிட் என்ற நூலைத் தடைசெய்தமையால் அதைப்பற்றி அறிவதற்கு மக்கள் ஆர்வம் காட்டினராம். பாலுணர்ச்சி சம்பந்தமான அண்மைக்கால நிகழ்கால ஆய்வுகளுக்கு அரசு தடைவிதிக்குமேயானால் உளவியல் பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண முடியாமல் போகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயக் கொள்கையுடையவர்களின் மூலாதாரமான கோட்பாடுகளைக் கண்டித்தலே தெய்வநிந்தனை எனப்படுகின்றது ஒரு சமயக்கோட்பாட்டை இழிவுபடுத்தவோ ஏளனம் செய்யவோ நிந்தனை செய்யவோ கூடாது. ஆனால் அத்தகைய சமயக் கோட்பாடுகளைப் புத்திபூர்வமான முறையில் ஆராயவும் அறிவியல் முறையில் சீர்தூக்கிப் பார்க்கவும் செய்த முயற்சிகளைத் தெய்வ நிந்தனை எனக்கூறுதல் தவறானதாகும். உயர்வகுப்பினரும் மத்திய வகுப்பினரும் தெய்வநிந்தனைக் குற்றத்திலிருந்து தப்பிவிடுகின்றனர். ஆனால் தாழ்ந்த அப்பாவி மக்களும் நாஸ்திகர்களுமே அகப்பட்டுக்கொள்கின்றனர். எனவே பக்தி உடையோர்க்கும் நாஸ்திகர்க்கும் ஒரேவிதமான பாதுகாப்பு அரசினால் வழங்கப்படவேண்டும். சமயம் சம்பந்தமான விடயங்களில் பேச்சுச் சுதந்திரப் தாராளமாக கொடுக்கப்படவேண்டும். அப்போதுதான் மெய்ப்பொருள் எது என்பதை அறிந்துகொள்ளமுடியும்.

மானநஷ்ட (அவதூறு) த்தைப் பொறுத்தவரை ஓரளவு கட்டுப்பாடு அவசியம் ஒருவருக்குக் கெடுதல் துன்பம் போன்றவற்றைச் செய்வதற்காக கூறப்படும் வார்த்தையே அவதூறாகும். இத்தகைய அபிப்பிராயம் உண்மையானதாகவும் பொது நன்மைக்கு உகந்ததாகவும் இருந்தால் அதை அனுமதிக்கலாம். இத்தகைய பேச்சுச் சுதந்திரம் அவசியமானதே ஆனால் ஒருவரை வேண்டுமென்றே இழித்துச் சொல்லுதலும் அவதூறு கூறுதலும் பேச்சுச் சுதந்திரத்தினுள் அடங்காது. இத்துறையிலே சட்டத்திற்கு சில திருத்தங்கள் செய்யவேண்டியதவசியம். வழக்காளியின் அந்தஸ்தை உத்தேசித்து மானநஷ்டமாக பெருந்தொகைப் பணம் வழங்கப்படுகின்றது. அரசியல் விசயமானால் பொதுமக்கள் அறியும்படி மன்னிப்புக் கோரினால் போதுமானது குற்றம் சார்ந்த அவதூறானால் கிரிமினல் சட்டப்படி தண்டனை விதிக்கப்படவேண்டும்.

பேச்சுச் சுதந்திரத்தின் அரசியல் அம்சம் ராசதுரோகம் போன்ற சட்டங்களிலேதான் வெளிப்படையாக உள்ளது நடைமுறையில் உள்ள அரசியல் ஒழுங்கு சமூக ஒழுங் என்பனவற்றை கண்டிப்பதற்கு ஒருவருக்கு எவ்வளவு தூரம் இடமளிக்கப்படவேண்டும் என்பதே இங்கு எழும் முதல் வினாவாகும். எழுத்து விடயங்களைப் பொறுத்தமட்டில் அவ்வளவு கட்டுப்பாடு தேவைப்படாதவிடத்தும் ஒரு இனத்தவரையோ அன்றி ஒரு சமயத்தையோ பாதிக்கும்வகையில் ஒருவருடைய எழுத்துரிமை கண்டிக்கப்படவேண்டியதே. அரசின் கடமை சமூகத்தில் ஒழுங்கையும் சட்டத்தையும் நிலைநாட்டுவதே, அவ்வாறு நிலைநாட்டமுற்படும்போது தவறான முறையில் அரசு நடந்தால் அது மக்களைப் பலாத்கார வழிக்கு இட்டுச் செல்லும் என்பதை அரசு மறந்துவிடலாகாது. எழுத்துமூலம் தெரிவிக்கும் அபிப்பிராயத்துக்கும் வாய்மொழிமூலம் தெரிவிக்கும் அபிப்பிராயத்துக்கும் சிறிது பேதமுண்டு. எழுத்துமூலம் தெரிவிக்கும் அபிப்பிராயம் தர்க்கமுறையாலும் உணர்ச்சி மீதமான ஆராய்ச்சி முறையாலும் மக்கள் மனதைத் திருப்பப் பார்க்கின்றது பேச்சினால் தெரிவிக்கப்படும் அபிப்பிராயம் மக்களை உணர்ச்சிவசப்படுத்தும் மக்கள் கூட்டத்துக்குப் பொருத்தமான உளவியல் முறைகளை அனுசரித்து ஒரு பேச்சாளருடைய நாவன்மை இயங்குமானால் அதற்கு எதிராக ஒரு அரசு இயங்கிவிடமுடியாது. எனவே இங்கு ஓரளவு வரையறை வேண்டியதே. கூட்டத்தில் பேசும் பேச்சு பலாத்காரத்தை உண்டுபண்ணும் என உத்தேசித்து கூட்டத்துக்கு தடைவிதிக்கமுடியாது ஒருவர் ராசதுரோகமான பேச்சு பேசுவாரென உத்தேசித்து அவரை பேசமுடியாதவாறு தடுக்கமுடியாது மேலும் யுத்தகாலத்திலும் உள்ளூர் குழப்பமுற்ற காலத்திலும் பேச்சுச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தலவசியம். 1940ல் பிரிட்டன் யுத்தத்தில் ஈடுபட்டிருந்தபோது அங்கு தனிமனித சுதந்திரம் என்பதற்கே இடமில்லாது இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் ஏணியாகின்றேன்

சுவர் ஓரமாக விரித்திருந்த அந்த ஓலைப்பாயில் ஒருபக்கம் சரிந்தவண்ணம் அம்மா படுத்திருக்கிறாள். அம்மாவின் முதுகுப் புறம் சாய்ந்தபடி தனது ஐந்தாம் வகுப்புப் பாடப் புத்தகமொன்றை எடுத்து எதையோ மனனஞ் செய்துகொண்டிருக்கிறான் என்தம்பி ராசன் அவனுக்கு உதவியாக புத்தகத்தின் எழுத்துக்கள் தெரியக்கூடியவகையில் அம்மாவின் பக்க மாக சுவர் ஓரத்தில் குப்பி விளக்கொன்று எரிந்துகொண்டிருக்கிறது,

இடையிடையே அம்மாவிற்கு வழக்கமாக வரும் அந்த இருமல் வந்து அவளைத் தொல்லை தருகிறது. அப்போதெல்லாம் அவள் எழும்பாமலே சரிந்தவாக்கில் தலையைமட்டும் கொஞ்சம் நிமிர்த்தி மெதுவாகக் குலுங்கிக் குலுங்கி இருமுகிறாள். அந்தக் குலுக்கலுக்கு அம்மாவின் முதுகுப்புறம் சாய்ந்திருந்த என்தம்பியும் தாளத்துக்கு ஏற்ப ஆடுவதுபோல ஆடுகிறான், அதில் அவனுக்கு ஒரு தனி இன்பமோ என்னவோ.

வெகு நேரமாக இந்தக் காட்சியை ஏதோ ஒரு புதினத்தைப் பார்ப்பதுபோல் படிக்கவேண்டுமென்ற சுயநினைவின்றி நான் பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

நான் மேசையின்முன் கதிரையில் அமர்ந்திருக்கிறேன். மேசைமேல் எனது பாடப் புத்தகங்கள் பரந்து காணப்படுகின்றன. இன்னும் ஐந்தோ ஆறோ மாதங்களில் வரப்போகும் எஸ் எஸ் சி பரீட்சையைப்பற்றி உணர்ந்தும் உணரமுடியாத நிலையில் ஏனோ என்மனம் படிப்பில் ஈடுபடாமல் அந்தக் காட்சியிலும் எதிரில் தெரியும் மண்சுவரிலும் அர்த்தமின்றி ஈடுபட்டு லயித்துக்கொண்டிருக்கின்றது. என் மனதில் பலமான சிந்தனைகள்.

இன்றுமட்டுமல்ல இப்போது கொஞ்ச நாட்களாகவே ஏதேதோ சிந்தனைகள் தோன்றி என்படிப்பை இப்படிக் குழப்புகின்றன இன்றும் என் மனதில் சற்று முன் நடந்த நிகழ்ச்சியொன்று பலமாக ஆட்கொள்கிறது.

சிவம் பொழுதுபடப்போகிறது இண்டைக்குச் சாப்பாடு செய்ய ஒண்டுமில்லை ஒரு றாத்தல் பாணெண்டாலும் கடனுக்கு கடையிலை வாங்கிவா அம்மா இப்படிச் சொன்ன போது திண்ணையில் அமர்ந்திருந்த நான் எழுந்து தெருவில் இறங்கி நடக்கிறேன்,

போகிற வழியில்தான் முருகேசு அண்ணனின் வீட்டுக்கடை இருக்கிறது இவரட்டை பாண்வாங்கிறதெண்டால் அய்ந்து பத்துச்சதம் கூடவாக இருக்கும், அதோட அண்டைக்கும் இவரட்டை கடனுக்கு பாண் வாங்கிப்போட்டு இன்னும் அந்தக் காசு குடுக்கேல்லை. இப்படி என்னுள் எண்ணிக்கொண்டு அவசரமாக நடக்கிறேன்.

றோட்டில் ஏறியவன் கந்தையாவின் கடையில்தான் பெரும்பாலும் பாண் இருக்கும் என்பதாலும் இரண்டொரு முறை அவரிடம் கடனுக்குச் சாமான்கள் வாங்கிய பழக்கத்தினாலும் அவர் கடையை அடைகிறேன்.

பொழுதுபடும் நேரமாதலால் அந்தக் கடையில் ஓரளவு சனங்கள் நிரம்பிவழிந்தனர் வாங்கிய சாமான்களுக்கு கொப்பியில் கணக்கு பதிந்து மாதக்கடைசியில் கடனைக் கொடுப்பவர்கள். உடன்காசு கொடுத்து சாமான்கள் வாங்குபவர்கள் என்னைப்போல் கடனுக்குச் சாமான்கள் வாங்குபவர்கள் இப்படிப் பலர் கூடி நிற்கும் அந்தக் கூட்டத்தில் நான் ஒருவகையாகப் புகுந்து அண்ணை ஒரு றாத்தல் பாண் கடனுக்குத் தாருங்கோ நாளைக்கு காசுகொண்டு வந்து தாறன். என்று கேட்கிறேன். அவர் என்னை ஒருமுறை ஏறெடுத்துப் பார்க்கிறார். இங்க கடனுக்கு சாமான் தர முடியாது. நாளைக்கு காசு கொண்டுவந்து தாறன் எண்டு சொல்லிப்போட்டு பிறகு ஒரு கிழமை வரையும் இழுத்தடிப்பியள் என்று சட்டெனச் சொல்லி விட்டு, ஒருவரின் கொப்பியில் அவருக்குத் தேவையான சாமான்களைக் குறிக்க ஆரம்பிக்கிறார் கந்தையாண்ணன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்போது, சட்டென்று யாரோ சம்மட்டியால் என் தலையில் அடிப்பதுபோன்ற ஓர் உணர்வு. அங்கு நிற்பவர்கள் தங்களுக்கு வேண்டிய சாமான்களை வாங்கும் பரபரப்பில் நின்றாலும் கூட, அவர்கள் என்னைப் பார்ப்பது போன்றதோர் பிரமை என்னுள் எழுகிறது. சட்டென்று கடையைவிட்டு ரோட்டில் இறங்கி நடக்கிறேன். 'நான் ஒரு மடையன்— இரண்டொரு முறை கடனுக்கு சமான்கள் தந்தவர் என்றதற்காக எப்பவும் கடனுக்கு அவரட்டை' சமான்கள் வாங்கலாம் என்டு நினைச்சுப்போட்டன்! எந்தநேரமும் ஒரு மனுசன் ஒருமாதிரி இருப்பான் என்று மடைத்தனமாக எண்ணிப் போட்டன்..! ....! கொப்பியில் கணக்குப் பதிந்து சமான்கள் வாங்கிறவைக்கும், எங்களைப் போல கடனுக்கு சாமான்கள் வாங்கிறவைகளும் என்ன வித்தியாசம். இரண்டு பேருமே ஒரு விதத்தில பார்த்தால் கடனாளிகள் தானே. ஆனால் கொப்பியில பதிந்து சாமான்கள் வாங்கிறவையிலே வைக்கிற நம்பிக்கையை, எங்களைபோன்ற கடனாளிகளிடம் கடைக்காரர்கள் பெரும்பாலும் வைக்கிறதில்லை! எல்லாத்துக்கும் பணம்தான் காரணம்' — என்னுள் இப்படி ஏதேதோ சிந்தனைகள் தொடர்கின்றன. அதனால் நான் ரோட்டைக் கடந்து தெருவில் இறங்கிவிட்டதையோ, தெருவிலுள்ள முருகேசு அண்ணனின் வீட்டுக்கடையைத் தாண்டி சிறிது தூரம் வந்துவிட்டதையோ உணரவில்லை. அவமானத்தின் பிரதிபலிப்பு என் நடையில் வேகத்தை காட்டுகிறது.

அப்போது திடீரென எதையோ நினைத்துக் கொண்டவனாக நின்ற இடத்திலேயே நின்று யோசிக்கிறேன். 'பாண் இல்லாட்டி இண்டைக்கு இரவைக்கு ஒரு சாப்பாடும் இல்லை தம்பி பசி கிடக்கமாட்டான்...' - என்ற நினைப்பு வந்தவுடன் மீண்டும் ஒரு மாதிரி என்னைத் திடப்படுத்திக் கொண்டவனாக முருகேசு அண்ணனின் வீட்டுக் கடையை அடைகிறேன். அங்கே ஒரு மூலையில் பாண்கள் வைக்கப்பட்டிருக்கின்றன முருகேசண்ணை...... ஒரு றாத்தல் பாண் கடனுக்கு எடுக்கலாமே அண்டைக்குக் கடனுக்கு வாங்கிய பாண் காசும் சேர்த்து ஒண்டாக நாளைக்குத் தாரன். ஒருவித பயத்துடன் கேட்கிறேன். 'பாண் எல்லாம் வித்து முடிஞ்சுது, தம்பி! அவர் இப்படிச் சொன்னதும் நான் திரும்பி நடக்க ஆரம்பிக்கின்றேன். அப்பேதே தம்பி, நாளைக்கு மறக்காமல் காசைக் கொண்டுவா' - முருகேசு அண்ணனின் இந்த வார்த்தை என்னுள்ளே எதுவோ செய்ய, ஓமண்ணே, நாளைக்குக் காசைக் கொண்டுவாரன். என்று நின்றவன் திரும்பவும் வீட்டை நோக்கி நடக்கிறேன்.

என் வீட்டுப் படலையடிக்கு வந்தவன் உள்ளே நுழையாமல படலையடியிலேயே நிற்கிறேன். என் மனம் எப்படியெல்லாமோ சிந்திக்க ஆரம்பிக்கிறது. இந்தப் பொல்லாத உலகத்தைப்பற்றிச் சிந்திப்பதா? அல்லது என் ஏழ்மையைப் பற்றிச் சிந்திப்பதா? எனக்கு ஏதுவுமே புரியவில்லை. முன்பெல்லாம் இப்படி எதற்காகவும் நான் மனதை பெரிதாக அலட்டிக் கொண்டதில்லை. இப்போதுதான் கொஞ்ச நாட்களாக நான் உலகத்தை நன்கு புரிய ஆரம்பிக்கிறேன். மனதிற்கு கசப்பான அனுபவங்கள் தத்துவங்களாகப் பிறக்க ஆரம்பிக்கின்றன. உண்மையில் என்னுள் பல தத்துவங்கள் பிறப்பது போன்ற பிரமை. முக்கியமாக என் ஏழ்மையைப் பற்றி நான் நன்கு சிந்திக்க ஆரம்பிக்கின்றேன். ஓ...... ஏழ்மை என்பது எவ்வளவு பெரிய தரித்திரம். அந்தத் தரித்திரத்தை நான் பல கோணங்களிலும் ஆராய்ந்து கொண்டிருக்கின்றேன். அப்போது கையில் பாணுடன் வந்துகொண்டிருக்கும் பக்கத்துவீட்டுக் குமாரைக் கண்டதும்தான் நான் சுயநினைவு பெற்றவனாக, ''குமார், எந்தக் கடையில பாண் வாங்கினாய்'' என்று கேட்கிறேன். ''முருகேசண்ணையட்டை வாங்கியாறன்''. நான் சற்றும் எதிர்பாராத பதிலை சொல்லிவிட்டு குமார் நடக்க ஆரம்பிக்கிறான். இதைக் கேட்டதும் இந்தப் பொல்லாத உலகத்தை நினைத்து அழுவதா அல்லது சிரிப்பதா என்று எனக்குத் தெரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்று முன் நடந்து முடிந்த அந்த நிகழ்ச்சி என்முன் தோன்றி மறைகிறது; மீண்டும் என்பார்வை படுத்திருக்கும் அம்மாவையும், அவளின் முதுகில் சாய்ந்தபடி படித்துக்கொண்டிருக்கும் என் தம்பியையும் நோக்குகிறது பட்டினியோடு அவன் ஆர்வமாகப் படிக்கும் காட்சியைப் பார்க்க என்மனம் வெம்புகிறது. அவனது புத்தகம் கூட முன் பக்கத்திலும், பின்பக்கத்திலும் சில பாடங்கள் இல்லாமல் கிழிந்திருப்பதைக்காண்கிறேன். ஆர்வத்தோடு புதுப்புத்தகத்தில் படித்து மகிழவேண்டிய சிறுவயதில கிழிந்த புத்தகம்: அது கூட என் நண்பன் தனது தம்பியாரிடமிருந்து வாங்கிக் கொடுத்தது.

இதற்குமேலும் எங்கள் ஏழ்மையைப் பற்றிச் சிந்திக்க என்னால் முடியவில்லை. எனவே மிகச் சிரமப்பட்டு. படிப்பில் கவனம் செலுத்த முயல்கிறேன. நான் எனது நோட்ஸ் கொப்பியை விரிக்கிறேன். என்ன ஆச்சரியம்! மூன்று நாட்களுக்கு முன் அந்தக் கொப்பியை வாங்கி நோட்ஸ் எழுதியிருக்கிறேன், அப்படியிருக்க நோட்ஸ் எழுதியிருந்த ஒற்றைகளில் நான்கை கழன்று வருகின்றன. திடுக்கிட்டவனான கொப்பியின் கடைசிப் பக்கத்தைத் திருப்புகிறேன். அங்கே நான்கு ஒற்றைகள் கிழிக்கப்பட்டிருக்கின்றன. சற்று நேரம் பலமாகச் சிந்திக்கின்றேன். பின் திடீரென எதையோ யோசித்தவனாக,

''டேய் ராஜன்!!'' - நான் கோபத்துடன் அதட்டி அழைக்கிறேன்.

''என்னண்ணை!! - என் அதட்டலுக்குத் திடுக்கிட்டவனாக படிப்பதை விட்டு என்னைப் பார்தது முழித்தான், தம்பி.

''இந்தக் கொப்பியில் ஒற்றைகள் கிழிச்சனியே...!''

''ஓம் அண்ணை!'' - சர்வநாடியும் அவனுக்கு ஒடுங்கிவிடுகிறது.''

''எதுக்கு கிழிச்சனி!'' - ஆவேசத்துடன் அவனை நெருங்குகிறேன்.''

''பள்ளிக்கூடத்துக்குக் கொண்டுபோக கணக்குக் கொப்பியில்லை...! அதனால் கணக்குச் செய்ய ஒற்றைகள் கிழிச்சனான்...!''

''நான் கொப்பியில நோட்ஸ் எழுதுறது நீ கிழிக்கத்தான் என்ன. எடுத்துவாடா கிழிச்ச ஒற்றைகளை!'' - நான் கத்துகிறேன். ராஜன் பயத்தில் அவசர அவசரமாக தன் புத்தகத்தில் பக்குவமாக மடித்து வைத்திருந்த நான்கு ஒற்றைகளையும் கொண்டு வந்து என்னிடம் நீட்டுகிறான். அதில் இரண்டு ஒற்றைகளில் கணக்கு எழுதியிருந்தான். மிகுதி இரண்டும் வெறுமையாக இருக்கின்றன. கணக்குகள் எழுதியிருந்த ஒற்றைகளை நான் சட்டென்று நோட்டம் விடுகிறேன். கணக்கில் எண்பது மார்க்குகள் வாங்கியிருந்தான். அதனைப் பார்த்த என்னுள் ஒரு பெருமிதம் கோபத்தையும் மறந்து தோன்றுகிறது. நான் அவனை நோக்குகிறேன். 'இனிமேல் என்னைக் கேளாமல் என்னுடைய கொப்பிபில ஒற்றைகள் கிழிக்கக் கூடாது!' அமைதியாக அவனிடம் சொல்கிறேன். 'இண்டைக்கு கணக்கு வாத்தியார் என்னைப் பேசிப்போட்டார்!' திடீரென என் தம்பி இப்படிச் சொல்லியபடி விக்கிஅழ ஆரம்பிக்கிறான்.

இதைக் கேட்டதும் நான் அதிர்ச்சியடைகிறேன். எண்பது மார்க்குகள் எடுத்தவனுக்கு ஏன் கணக்கு வாத்தியார் பேசவேணும் ?' விடைதெரியாமல், என் மனதில் எழுந்த கேள்வியை தம்பியையே கேட்கிறேன்.

ஏன் அடிச்சவர் . !

''இனிமேல் கணக்குக்.. கொப்பியிலதான் கணக்கு.. செய்ய வேணுமாம் ! இப்பிடி ஒற்றையில செய்தால் இனிமேல் கனக்க மாக்ஸ் எடுத்தாலும் சைவர்தான் போடுவன் எண்டு சொல்லிப் போட்டார்..!'' - கண்ணை கசக்கியபடி கூறுகிறான். அப்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் நெஞ்சில் சுருக்கென்று எதுவோ குத்துவது போன்ற உணர்வு. அவனுடன் மேலே தொடர்ந்து என்னால் எதுவுமே பேச முடியவில்லை.

இரவு, வெகுநேரம் வரை தூங்காமல் தவிக்கிறேன். அன்று நடந்த நிகழ்ச்சிகள் மீண்டும் ஒன்றன்பின் ஒன்றாக சங்கிலிக் கோர்வைகளாக வந்து போகின்றன. அமைதியில்லாமல் பலமாக ஏதேதோ யோசிக்கிறேன். முடிவு 'என்ரை தம்பியின்ரை திறமை வறுமையால் சீரழியக் கூடாது ! அவனுக்காக என்ரை படிப்பை இழக்க நான் தயார்...! நான் ஏணியாக நிண்டு அவனை உயர்த்தப் போறன்! இனிமேல் இந்த வீட்டிலை வறுமையால பட்டினி ஏற்பட நான் விடமாட்டன். என்னால் முடிஞ்சவரை கூலிவேலை செய்து அம்மாவையும், தம்பியையும் காப்பாத்தப் போறன்! இதனை திடமான முடிவாக எடுத்த பின்னர்தான் நான் அமைதியாக உறங்க ஆரம்பிக்கிறேன்.

அடுத்த நாள் காலை, நான் பாயை விட்டு எழவில்லை. மறுபுறம் திரும்பிப் படுக்கிறேன். என்னை நித்திரை என்று தம்பி நினைத்திருக்கவேண்டும். முற்றத்தில் நின்று அம்மாவிடம் வாதாடுகிறேன். 'அம்மா, கொப்பி வாங்க காசில்லாட்டி அண்ணட்டை சொல்லி எனக்கு இரண்டு ஒற்றைகளெண்டாலும் வாங்கித்தாவன்...!' அம்மாவை அவன் விடுவதாயில்லை. அம்மா அவனை சமாதானப்படுத்த முயல்கிறாள். அப்போது ராஜன்...! இப்போது படுக்கையை விட்டு எழுந்து மேசை அருகில் நின்றுகொண்டு தம்பியை அழைக்கிறேன். அவன் பயந்தபடி அம்மாவையும் துணைக்கு அழைத்துக் கொண்டு உள்ளே நுழைகிறான். இந்தா, ...இந்தக் கொப்பியைத் தாறன் கொண்டு போய் கணக்கு எழுது - என்றபடி முதல்நாள் அவன் கிழித்திருந்த எனது கொப்பியில் நான் நோட்ஸ் எழுதியிருக்கும் மிகுதி இரண்டு ஒற்றைகளையும் கிழித்து எறிந்து விட்டு கொப்பியை அவனிடம் நீட்டுகிறேன். அதை வாங்கிக் கொண்ட அவன் முகத்தில் பளிச்சிட்ட மகிழ்ச்சி என் நெஞ்சை நிறைத்து நிற்கின்றது. இந்தக் காட்சியைப் பார்த்து எதுவுமே புரியாமல் அம்மா திகைக்கின்றாள். அதைப்பார்த்து நான் என்னுள் மெல்ல சிரித்துக் கொள்கிறேன்.

(யாவும் கற்பனை)

செல்வி. S. அமிர்தாஞ்சனி
கலைப்பிரிவு
பேராதனை வளாகம்
பேராதனை.

---

SPACE DONATED BY

# Liverpool Accadamy

NELLIADY KARAVEDDY

BRANCH: PT. PEDRO KARAVEDDY WEST

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயற்குழு 1978 - 1979

| | |
|---|---|
| பெரும் தலைவர்: | பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை |
| பெரும் பொருளாளர்: | திரு. மு. சின்னத்தம்பி M. A. |
| தலைவர்: | திரு. கு. பரராஜசேகரம் |
| துணைத்தலைவர்: | திரு. கி. இரவீந்திரன் |
| செயலாளர்: | திரு. ம. சிவகுமார் |
| இளம் பொருளாளர்: | திரு. ச. பார்த்திபன் |
| இதழாசிரியர்: | திரு. பி. புனிததாஸ். |
| குழு உறுப்பினர்கள்: | திரு. சி. வித்தகபண்டிதன் |
| | திரு: பெ. ச. ஜெயரட்ணம் |
| | செல்வி. கு. பரிமளராணி |
| | ,, மு லோகராணி |

| | |
|---|---|
| மண்டபப் பிரதிநிதிகள்: | திருவாளர்கள் எச்; ஏ. நசீர், |
| | அ. தவஞானதாஸ், க. செல்லத்தம்பி |
| | பா; சிவயோகநாதன், இ. இராஜமகேந்திரன், |
| | ந. தேவந்திரா, |
| | க. அனலப்பூபதி. செல்விகள் க. அமிர்தராணி, |
| | ந. நளாயினி, சி. சந்திரரட்ணம். |

## புத்தகப் பூங்கா

அறிவு வளர்ச்சிக்கும், சிந்தனை வளர்த்துக்கும் உதவக்கூடிய புத்தகங்கள் நிறைந்த அலுமாரிகள் தான் உன் வாழ்வை மகிழவும் மலரவும் வைக்கும் அழகிய பூங்கா. அது வெகு சுகமான இடம். அங்கே நீ வசித்துக்கொண்டிரு. அந்தப் பூங்காவில் காய்த்துப் பழுத்திருக்கும் கனிகளைப் பறித்துப் புசி. அங்கே மலர்ந்திருக்கும் நறுமண மலர்களைக் கொய்து வைத்துக்கொள். அங்கே பரவும் மகரந்தத்தின் சுகந்தத்தை நீ சுவாசி. அங்கே கிடைக்கும் எந்த உபயோகப் பொருளையும் விளக்கிவிடாதே.

— பாலஜோதிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி கூறுகின்றேம்

- இம்மலர் நன்கு மிளிரவேண்டுமென ஆசியுரைகள் வாழ்த்துச் செய்திகளை வழங்கிய பெரியோர்களுக்கும்
- கட்டுரை சிறுகதை படைத்த எழுத்தாளர்கட்கும்
- கவிதைகள் படைத்த கவிஞர்கட்கும்
- விளம்பரங்கள் கொடுத்துதவிய வர்த்தகப் பெருமக்களும்
- விளம்பரங்கள் சேகரிக்க உதவிய குழு உறுப்பினர்கட்கும் அங்கத்தவர்கட்கும்
- மலர் சிறப்புற பல அறிவுரை தந்த சங்க பெருந்தலைவர் பெரும் பொருளாளர் அவர்களுக்கும்
- அட்டைப்படம் வரைந்துதவிய நண்பர் ரகன் அவர்களுக்கும்
- விடயதானங்கதிருத்தி உவிய விரிவுரையாளர்களுக்கும்
- கூடிய விரைவில் இம்மலரை அச்சிட்டு உதவிய யாழ் தங்கராஜா அச்சக உரிமையாளர் - ஊழியர்கள் திரு வேலாயுதபிள்ளை அவர்கட்கும்
- மேலும் அவ்வப்போது குறிப்பறிந்து உதவிய திரு மோகனகாந்தன் தங்கராஜா ஆகியோருக்கும் எனது நன்றிகள்

இதழாசிரியர்

### நினைவஞ்சலி

எம்மோடு ஒன்றாகக் கல்விபயின்று இன்று எம்மைவிட்டுச் சென்றுவிட்ட கலைப்பீட மூன்றாம் வருட மாணவி செல்வி கமலாசனி அவர்களின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கின்றேம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH THE BEST COMPLIMENTS

FROM

**SUBHAS TOURIST HOTEL Ltd.**

15, VICTORIYA ROAD, JAFFNA

**SUBHAS CREAM HOUSE**

176, HOSPITAL ROAD, JAFFNA

TEL. NO. 578

FULLY AIR CONDITIONED

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பளிப்பு

ஏ. ரி. ரெக்ஸ்

4, பெரியகடை—யாழ்ப்பாணம்

WITH THE BEST COMPLIMENTS

FROM

RANJANA'S

17 18, 18, NEW MARKET,

JAFFNA

Phone 8015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீன்பிடி உபகரண இறக்குமதியாளர்
சில்லறை மொத்த விற்பனையாளர்.

# RAJAH STORES

36, முனீஸ்வரன் வீதி – 13, ஜுபிலி பஜார்
யாழ்ப்பாணம்

WITH THE BEST COMPLIMENTS

FROM

# SMACS

10 & 12, BAZAAR LANE
JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH THE BEST COMPLIMENTS

FROM

MARKET MEDICAL STORES

200, IST FLOOR
CENTRAL MARKET
KANDY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Te...
121, POINT-P... ROAD
NALLUR, JAFFNA
No

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டப் ப… …அவணம்
148/1,
யாழ்ப்பாணம்.

அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண்.

அறிவு, அழிவு வராமல் காக்கும் கருவியாகும். அன்றியும் பகை கொண்டு எதிர்ப்பவர்க்கும் அழிக்க முடியாத உள் அரணும் ஆகும்.

மில்க்வைற் தயாரிப்புக்களுக்கு நீங்கள் கொடுக்கும் ஆதரவு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு நீங்கள்கொடுக்கும் ஆதரவாகும்.

மில்க்வைற் சவர்க்காரத் தொழிற்சாலே
கே. கே; எஸ். வீதி, யாழ்ப்பாணம்
தொலேபேசி 7233

யாழ் தங்கராஜா அச்சகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org